# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

## கலை இலக்கிய இதழ்

ஆடி - 2020

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப :

R.Mahendran,

34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

மின்னஞ்சல் :

Mullaiamuthan16@gmail.com

நன்றி : இணையம்

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

# வணக்கம்,

காற்றுவெளி இதழின் ஆடி மாதத்திற்குரிய இதழுடன் சந்திக்கிறோம். பல புதிய படைப்பாளர்களும் இணைந்துகொள்வதில் மகிழ்வைத் தருகிறது.ஒவ்வொரு இதழிலும் புதியவர்கள் காற்றுவெளிக்கு அறிமுகமாவது சரியான தளத்தில் நாம் பயணிக்கிறோம் என்கிற நம்பிக்கை மீளவும் கட்டியெழுப்பப் படுகிறது எனலாம். அதே சமயம் பாடசாலை மாணவர்களின் படைப்புக்களையும் இணைக்க எண்ணியுள்ளோம்.

இலக்கியப்பூக்கள் கட்டுரைகளின் தொகுதியை காற்றுவெளி பதிப்பகம் மூலம் கொண்டுவந்திருந்தோம்.நாடுகளில் ஏற்பட்டுள்ள அசாதாரன சூழலினால் அச்சில் கொண்டுவருதலும்,பதிப்பக முயற்சிகளும் தாமதமாகிறது.

சிற்றிதழ்கள் நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே வெளியிடப்படுகிறது.ஏதோ சில காரணங்களால் சிற்றிதழ்கள் சில நின்று போனாலும் புதிய இதழ்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றன.அமைப்புக்கள்,குழுமங்கள்,தனிநபர்களால் வெளியிடப்படும் இதழ்களில் வாசகர்களின் எண்ணிகை குறைவு எனினும்,அதில் எழுதும் படைப்பாளர்கள் தங்களின் படைப்புக்களின் மீதான கரிசனை கொண்டவர்களாகவும்,புதிய சிந்தனை அல்லது பரிசோதனை முயற்சிகளிலும் கவனம் செலுத்துவதை அவதானிக்கலாம்.

காற்றுவெளியின் பயணமும் அவை சார்ந்தே பயணிக்கிறது..

தொடர்வோம்.

நம்பிக்கையுடன்,

சோபா


**கா.ந. கல்யாணசுந்தரம்**

அவளின் நினைவுகள்
ஒரு வெளிச்ச இரவுக்குள்
வட்டமிட்டபடியே
எனது நினைவுக் கூட்டுக்குள்
அலைபாய்கிறது
நட்சத்திரக் கூட்டங்களின்
அணிவகுப்பில் நிலவுகூட
மங்கியபடி உலவுகிறது
வெள்ளைமேகங்கள்
தாழ மிதந்தபடி
மலையேறுகின்றன
பறவைகளின் இடம்பெயர்தல்
மௌனமாகவே நடக்கிறது
நாளைய வசந்தகாலம்
இருப்பதால் தென்றல் மட்டும்
வருகைப்பதிவு செய்கிறது
இனி உன்னுடைய
நினைவுகளே போதும்
எனது ஒருநாள் வாழ்வில்
வீட்டில் பூச்சிகள் மட்டுமே
கையசைத்து விடைபெறுகின்றன !
இந்த வெளிச்ச இரவில்
உனது நினைவுத் தீயில்
குளித்தெழுகிறேன்
மீளா ரசிகனாய் !

வெள்ளம் வந்தால்தான்
அவளுக்கு வெள்ளிக்காசுகள்
துடுப்பு ஒன்றினால் பரிசல்
அடுத்த கரைக்கு செல்கிறது
பறந்து அமரும் நீர்ப்பறவைகள்
நலம் விசாரிப்பில் இவளது
அன்றாடத் தோழமை
பருவம் கடந்தும் அவளது
பயணிப்பில் சுவையில்லை
கார்மேகம் சூழும் நாளில்
குதூகலிக்கும் மனதோடு
துடுப்பின் வேகமும் கூடும்
பொழிதலின் எதிர்பார்ப்பில்
பூத்துக்குலுங்கும் மனமெங்கும்
எதிர்கால வாழ்வு
நினைவுத் தடங்களின் சுவடுகளில்
நிலம் மழைத்துளிக்காய்
ஏங்கித் தவிப்பதை
அவ்வப்போது உணர்ந்தவாறே
மற்றவர்களை மட்டுமே
கரையேற்றுகிறாள்
பரிசல் பெண் !

பிரியா வெங்கடேசன்

# பூ தேடும் வண்டு



உணவுக்காக
பூவைத் தேடியலையும்
வண்டுகளுக்கு
மத்தியில்..,

பூவும் தேடியலைகின்றன
வண்டுகளை..,
தன் மகரந்தச் சேர்க்கைக்காய்..!!

சாரைசாரையாய்
வடஹிந்தியர்கள்
வேலையை விட்டு,
மொத்தமாய்த் தன்
சொந்தவூர்ப்போய்ச்
சேர்ந்தபின்,

அதே
அடிமாட்டு விலைக்கு
அடிமைத்தொழிலாளர்
கிடைப்பாராவெனும்
எதிர்ப்பார்ப்பில்
முதலாளிகளிருக்கையில்..,

நிம்மதியாய்
எப்படியமர்வதந்த
முதலாளியிருக்கையில்..?!

எம்
தாய்த் தமிழகத்தின்
கூலித் தொழிலாளர்கள்,
அன்றன்றைய
வருமானத்தில்
அன்றன்றைய நாட்களைக்
கடத்திக்கொண்டிருந்த வேளையில்..,
இருந்தவேலையையும்
இழந்த பின்பு
அடுத்த வேளை உணவுக்காய்..,
அடுத்த வேலை தேடி
அலைகின்றனர்..!!

(பூ - தேடும் வண்டுமுண்டு..!
பூ தேடும் - வண்டுமிங்குண்டு..!!

இல.பிரகாசம்



# பிரதானம்

எல்லாக் கவிதைகளிலும் பிரதானமாய் பெண்தான் இருக்கிறாள்.
கவிதையில் வந்த, வந்து கொண்டிருக்கின்ற, வரப்போகும்
எல்லாப் பெண்களுக்கும் அவ்வளவு அழகான
முகங்கள், கண்கள், உதடுகள், தனங்கள், பிருஷ்டங்கள்.
எல்லாப் பெண்களுக்கும்
நீளமான அல்லது நெற்றி வரையில்
சுருளான மயிர்க் கூந்தல்.
அப்பெண்களை அவர்களது பாதாதிகேச முதல்
கேசாதிபாதம் வரையிலான அத்தனைக்கும்
போலப் புரைய ஒப்ப உறழ அன்ன மான என உவமைகளும்,
சால தவ தட நனி கூர் கழி கடி என உரிச்சொற்களைக் கொண்டு
ஒரு கவிதை செய்யாவிட்டால் அவன் செத்துவிடுவதைப் போல
ஒரு பாவனை அத்தனை கவிதையிலும்.

சற்று முன்னர் ஒரு கவிதை என்னை கூப்பிட்டது.
ஒரு பலத்த அறை.
அது பெண் கவிதையாகத்தான் இருக்க வேண்டும்.
அப்படியொன்றும் வலியில்லை. அதில் அழகைத் தவிர.


# அ செய்தாலி, சவுதி அரேபியா



ரயில்வே பிளாட்பாரத்தில்
முகம் பொத்தி
விளையாடும் குழந்தை
பசித்து இறந்து மறத்துப்போன தாய் மார்பில்
கடைசியாக
உறைந்திருக்கும் பாலை குடிக்கும்
பின் பிந்திய பசிக்கு அழும்
அழுது ,
அழுது ,
பசிக்குள் நீந்து அலிந்துபோகும்
விழிகள் பனிக்காமால்
இதயம் கணக்காமல்
விரல்கள் நடுங்காமல்
புகைச் சித்திரம் எடுப்பீர்கள்
மீண்டும்தமொரு காணொளியை பதிவு செய்வீர்கள்
அந்தோ பரிதாபம் யென
சமூக வலைத்தளங்களில்
ஸ்டிக்கர் பொம்மைகளில் அழுது வைப்பீர்கள்
உங்களால் முடிந்தது .

வீரசோழன்.க.சோ. திருமாவளவன்

# வெட்டாட்டங்கள் பேசும் சதுரங்கம்



தேநீர்க் குடுவையில்
புதினா வாசம் கரைந்திருந்தது.

பழைய சதுரங்கப்பலகை
ஒவ்வொரு முறையும் ஆடும்
ஆட்டம் புதியது
இவ்விடம் மூளைகள் வேலை செய்யும்!

80 களின் டூரிங் டாக்கிசில்
படம் பார்ப்பது போல
கருப்பும் வெள்ளையும்தான் நிறம்.

யோசனையில் மழுங்கும் மூளைகள்
தோல்வியே பரிசாக தரும்
கற்றலில் பாடம் கிடைக்கும்..!

நகரும் காய்கள் நர்த்தனமாடும்
வீழும் சிப்பாய்கள்
விரல்களை நோகச் செய்யும்
படை அரண் தகர தகர
கண்ணாமூச்சியாடும் திருடன்
போலீசாய்
கிழவிமார்கதைகளை பேசும்...

நொண்டியாட்டத்தில் கோடுகள்
உழைப்பை பேசும்
சதுரங்கத்தில்
கருப்பு வெள்ளைகள் மட்டுமே
மூளையை பேசும்...

புதினா அறியா கிழவி
வாசத்தை மட்டும் நுகர்கிறாள்
தேநீர் ஆறியிருந்தது...

வெட்டாட்டங்களை பேசுகிறது...
சதுரங்கப்பலகை!

அம்பலவன் புவனேந்திரன்

# மூத்த தலைமுறையின் முக்கிய பங்கு:

வண்ணத்தமிழ் உறவுகளுக்கு வாஞ்சையுள்ள என்வணக்கம்
வளமானதமிழ் வரியெடுத்து வடித்துவந்தேன் கவியொன்று
எண்ணத்தில் உதித்தவற்றை எடுத்துரைப்பேன் கேட்பீரே
எவரையும் புண்படுத்திட நான் எழுதியிங்கே படிக்கவில்லை
உண்மைகள் சிலவேளை உறைக்கத்தான் செய்யக்கூடும்
உரியவர்கள் புரிந்துகொண்டால் உளம்நிறைந்து பூரிப்பேன்.

மண்ணிலே மழைவிழும் மரஞ்செடிகொடி தளிர்த்து வளரும்
மரணத்தில் இருந்த உயிர்க்கும் மாமருந்தாய் அதுவுதவும்
கண்ணிருந்தும் குருடர்;களாய் காண்கின்ற சிலமனிதர்
காரணமில்லாது இம்மண்ணில் காலத்தைக் கடத்துகின்றார்
எண்ணியிதை பார்க்கையிலே எம் இளையவர் குமுறுகிறார்
இந்நிலைமாறித் தாமாய் இறங்கிவந்து உதவுவாரோ..?

கண்டதைக் கற்றுகொண்டால் பண்டிதனாகலாமென்பார்
கற்பதற்கு நாம்காத்திருக்க கற்பிக்கத்தான் யாருமி;ல்லை
பண்டிகையில் தொடங்கி நமக்கு பலவித கொண்டாட்டம்
பணிவுடன் பாலரெமக்கு பாங்காய் சொல்லித்தரவில்லையே
உண்பதும் உறங்குவதும் வீண் ஊர்வம்பு அளப்பததிகம்
உண்மையில் அக்கறையாய் எண்ணிப்பார்க்க யாருமில்லை.

கண்ணே மணியேயென்று பாசமாய் கனிந்துருகி பயனில்லை
காலத்துக்கு வேண்டியதைக் கற்றுத்தருதலே அவசியம்
விண்வெளிக்குப் போய்வரும் வித்தையை கற்றுத்தரவேண்டாம்

வீட்டில்நடக்கும் சடங்குகளை விளக்கிச் சொல்லமாட்டீரோ
மண்ணிலே நடக்கின்றதமிழ் மணவிழாக்களை நாமறிவோம்
மாங்கல்யச் சடங்குமுறைகள மக்களுக்கு அறியத்தருவீரோ..?

கண்டம்விட்டுக் கண்டம் வந்து காசுதேடித் தினமுழைத்தீர்
காலணாவை ஈவதற்;கும் கணக்குப்போட்டுக் கஞ்சனானீர்
அண்ணனென்ன தம்பியென்ன ஆசைமட்டும் போகவில்லை
அடியொற்றி வந்தவற்றை அறுபதாகியும் கற்கவில்லை
கிண்ணத்தில் மதுவேந்தி தலைகிறுகிறுத்து மயங்குகிறீர்
கீழ்கன்று உடன்பிறப்பைக் கரைசேர்க்க மறந்துபோனீர்...

கண்ணியமானவர் என்றாலே கற்கண்டாய்த் தானினிக்கும்
காலத்தின் தேவையறிந்து கடமைசெய்தால் பயனாகும்
பண்ணிய பாவங்களுக்கு உடன் பரிகாரம் தேடவேண்டும்
பகட்டுக்கு அடிமையாகி பணத்தில்மிதத்தல் நலமாமோ
புண்ணியம் தேடித்தேடி பூமியைச் சுற்றினால் போதாது
புரிந்திடும் வினைகளே பின் புதல்வரின் வாழ்வில் சூழும்

பெண்ணியம் என்றுபேசிச் சிலர் பெரிதாகவே வாதிடுவார்
பேரைக்கேட்டு விசாரித்தால் பெட்டிப்பாம்பாய் ஆகிடுவார்
எண்ணியதைச் சொல்வதற்கு ஏனிந்தப் போலித்தனம்
எடுத்துக்கொண்ட கடமைகளை இனிதாகவே முடித்திடுவீர்
உண்மைளைச் சொல்லப்போனால் ஊரிலே எவருமில்லை
உதவுகிற சிலரைத்தவிர உத்தமரையே காணவில்லை..

உண்ணாமல் உறங்காமல் தினம் ஓடியோடி உழைக்கின்றீர்
ஒருவருக்கும் உதவாமல் உங்களைமட்டும் உயர்த்துகின்றீர்
திண்ணமாய் எமைநன்கு திருத்தியே வளர்த்திடாமல்
தீமைகள் ஏதும்செய்தால் தினமும் திட்டித்தீர்க்கிறீர்கள்
உண்மையில் இளையவர்நாம் ஊதாரிகளாய் போவதற்கு

உங்களின் வளர்ப்பே அன்றி ஒருகாரணம் வேறில்லை.


உண்பதும் உடுப்பதும் உறங்குவதும் அவசியம்போல
உங்கள் வாரிசுகளின் வாழ்க்கை நெறியும் அவசியமே
கண்துடைப்பு காட்டிக்கொண்டு காலத்தை கடத்தாமல்
கரிசனைகொண்டு எமது கண்மணிகளைக் காத்திடுங்கள்
அண்மையப் புள்ளிவிபரம் பெரும் அதிர்ச்சியைத்தருகிறது
அவர்களில் தப்பில்லை ஆரம்பவளர்ப்பே தப்பென்கிறது.

உண்மையாய் அக்கறையாய் பிள்ளையில் கவனமெடுத்தால்
உலகத்தின் கண்களுக்கு உயர்ந்தவராய் மிளிர்ந்திடுவீர்கள்
கண்கெட்டதன்பின்னால் கதிரவனை வணங்கியழுவதனால்
கண்பார்வையும் கிட்டாது எந்தக் காலத்துக்கும் உதவாது
புண்ணுக்கு மருந்துதேடி பூவுலகெங்கும் வலம்வந்திடாது
பூக்களைப்போல் உங்கள் புத்திரரைக் காத்துவளர்ப்;பீர்..

அந்நியதேசத்திலே நம்முடைய அழகுதமிழைப் படித்திட
அன்பினை ஊட்டியவரை ஆற்றுப்படுத்திட முயன்றிடாமல்
என்னதான்செய்கிறீர்கள் எந்தவகையிலும் உதவிடாமல்
எப்படியோ வாழ்ந்துகொண்டு எங்களை பலியாக்குகிறீர்
அன்னைத்தமிழ் மொழியையும் அழகிய கலைகளையும்
ஆர்வத்தோடு கற்பதற்கு சற்று அக்கறை காட்டிடுங்கள்..

தோண்டத்தோண்டத்தான் துல்லியமாய் ஊறும் மணற்கேணி
தீட்டத்தீட்டத்தான் வைரமும் துலங்கியொளிரும் தெரியாதா
ஆண்டாண்டாய் தொடருகின்ற அதேநிலையை நீக்கநாங்கள்
அன்புக்கு அடிபணிந்து அக்கறையாய் கற்பதற்குத் தயார்
உங்களின் பங்குதான் எமை உயர்ந்தவராய் ஆக்கிவிடும்
உளவுறுதிகொண்டு நீங்கள் ஒருமித்துசிந்தித்தல் நலமாகும்...!

✦



மலர்மதி

● குறுங்கதை

# கிளி ஜோசியம்

மரத்தடி கிளி ஜோசியர் பஞ்சாட்சரம் கூண்டுக் கதவைத் திறந்துவிட, கிளி வெளியே வந்தது.

"வா, ராஜா வா.. அம்மாவுக்கு ஒரு நல்ல சீட்டை எடுத்துக் கொடு." என்றதும், கிளி தத்தி, தத்தி வந்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே போட்டது. ஐந்தாவதாக எடுத்த சீட்டை பஞ்சாட்சரத்திடம் கொடுத்துவிட்டு மீண்டும் கூண்டுக்குள் சென்றுவிட்டது.

"மாரியாத்தா, மகமாயி... நல்ல சேதியா சொல்லும்மா.." என்றபடி சீட்டைப் பிரித்தவர் அதிர்ந்தார்.

அதில் எல்லாமே தலை கீழாக எழுதி இருந்தது. அதை அப்படியே படித்தால், எதிரே அமர்ந்திருக்கும் பெண்மணி கோபமாய் எழுந்து போய்விடுவாள். அதனால், அதிர்ச்சியை வெளிக்காட்டாமல், நல்லதே நடக்கும் என்ற ரீதியில் படித்துச் சொல்ல அப்பெண்மணியும் சந்தோஷத்துடன் பணத்தைக் கொடுத்துவிட்டு எழுந்துக் கொண்டாள்.

அன்று ஜோசியம் பார்க்க வந்த அத்தனைப் பேருக்கும் தப்புத்தப்பா, எல்லாம் மோசம் போகும்படியான சேதிகள்தான் வந்தன. குழப்பத்துடன் வீடு திரும்பியவர் தன் மனைவியிடம் நடந்ததைச் சொன்னார்.

அப்போது அங்கு வந்த ஐந்தாம் வகுப்பு படிக்கும் அவர் மகன் ரவி, "அப்பா.. நான்தான் எல்லா சீட்டுகளையும் மாத்தி எழுதி வெச்சேன்." என்றான்.

"அடப் பாவி, ஏண்டா அப்படி செஞ்சே?"

"எல்லா சீட்டுகள்லேயும் நல்லதாகவே எழுதி வெச்சுட்டு இப்படி மக்களை ஏமாத்தி சம்பாதிக்கிறீங்களே உங்களுக்கு வெக்கமா இல்லை? சின்னதா ஒரு பெட்டிக்கடை வெச்சு நேர்மையா சம்பாதிச்சு உண்மையா வாழுங்கப்பா. எங்களையும் வாழவைங்க."

பஞ்சாட்சரம் உண்மையில் யோசிக்க ஆரம்பித்தார்.

✦

**கலா புவன், இலண்டன்**

# தொலைந்து போன நாட்கள்

இளம் பருவ கொடி மின்னல்கள்
நினைவுக் கம்பத்தை சுற்றி படர்ந்த படி இருந்தன
அர்த்தமற்ற நினவுகளும்
அர்த்தமுள்ள நினைவுகளும்
ஞாபக அடுக்குகளில் செறிவாகவும்
விளையாட்டாகவும் விரைவி கலந்துவிட்டன

வானத்து சங்கீதமும் பூமியின் கூக்குரலும்
விழுமிய எச்சங்களாய் மறு உருக் கொண்டு
அலைந்து கொண்டிருக்கின்றன
நகர்ந்து நகர்ந்து செல்லும் வான் மேகங்களைப் போல்
நினவு ஓடங்கள் கடந்த காலத்திலும்
நிகழ் காலத்திலும் அடிமைப்பட்டும்
சுதந்திரமாகவும் மனங்களை தழுவி நிற்கின்றன

பாதங்களால் அளக்கப்படும் பூமி
அதில் வசிக்கும் மனிதர்களை
வசீகர நினைவுகளால் கட்டிப் போடுகின்றன
சௌந்தரிய மனோகர வீச்சுகள் பூச்சுக்களாய் வியாபித்து
நினைவுப் பந்தல்களை அலங்கரிக்கின்றன
திறந்தும் திறக்காமலும் மூடியும் மூடப்படாமலும்
நினைவுத் தடாகத்தில் வந்து போனவர்கள் ..........

பால்யத்தின் நினைவுகளை எடுத்துச் சென்றனர்
மௌனப் பிரதேசங்களில் எழுதப் படாத மொழிகள்
நினைவடுக்குகளை எப்போதும் தப்பாது
எழுப்பிக்கொண்டேயிருக்கின்றன..................

இனியவன் காளிதாஸ்



# காலியான சில கண்ணாடிக் கோப்பைகளும், உயிர்முனகும் சில ஓசைகளும்

"அம்மா ! பசிக்குது"

என்ற நான்கு பிள்ளைகளையும்

"கொஞ்சம் பொறுத்துக்குங்க சாமி ...அப்பா இப்ப வந்திருவாரு"

என்றவாறு தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் அந்தத் தாய்.

மணி மாலை ஆறைக் கடந்திருந்த வேளையில் எப்படி என் குழந்தைகளால்

பசியைத் தாங்கிக் கொள்ள முடியும்??? பஸ் ஸ்டேண்டு போனா அவர் அங்கு வரலாம்,அல்லது வேறு ஏதாவது உணவு கிடைக்கலாம் என்றபடி பேருந்து நிலையம் நோக்கி நடக்கத் தொடங்கினாள் அவள்.

அதே வேளையில் கடைசி மிடறு மதுவையும் குடித்து முடித்த கோவிந்தன் கையிலிருந்த சுண்டலை வாயில் போட்டவாறு ...

“என்னய்யா இது ...வர ...வர...சரக்கு ஒண்ணுமே சரியில்ல ,ஒரு ஆஃப் அடிச்சாச்சு இன்னும் சுறு ,சுறு ணு கூட இல்ல”

என்றபடி வெளியில் வந்து தன் ஈருருளியைக் கிளப்பினான்.

மின்விளக்குகள் ஒளிர்ந்த ஏசி பாரிலிருந்து வெளிவந்தார்கள் பிரணேஷும்,முகுந்தனும் அவர்கள் அணிந்திருந்த கூலிங்கிளாஸ் எப்படியும் மிடில் கிளாஸ் பேமிலியின் ஒரு மாத பட்ஜெட்டைக் அடக்குயிருப்பதாய்த் தெரிந்தது...

“பிரணேஷ் கொஞ்சம் அதிகமாயிருச்சு...

லேட்டா கிளம்பலாமா”

என்று தள்ளாடியபடி கேட்ட முகுந்த்தை

“நோ பிராப்ளம் நா பாத்துக்கிறேன்”

என்றபடி மகிழுந்தின் பின் சீட்டில் படுக்க வைத்தான் பிரணேஷ்.

ஈருருளியின் வேகத்தை முடுக்கினான் கோவிந்தன்...

“பிரணேஷ் கொஞ்சம் சீக்கிரமா போ எனக்கு வாந்தி வர்ற மாதிரி இருக்கு”

என்ற முகுந்த்தை. திரும்பிப் பார்த்துச் சிரித்த பிரணேஷ் தன் சொகுசு காரின் எக்ஸலேட்டரை மிதிக்கத் தொடங்கினான்.

பேருந்து நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள் தாய்...

ஈருருளியும் ,சொகுசு காரும் தன் உச்சபட்ச வேகத்தை அடைந்து விரைந்து கொண்டிருந்தது இலக்கு நோக்கி...

சாலையில் விரைந்து கொண்டிருந்த இரு வண்டிகளும் வேகத்தைத் குறைக்கத் தொடங்கின ,

அங்கே சாலையோரமாய் நின்று கொண்டிருந்த போக்குவரத்து காவலரின் சைகை

கண்டதும்.

தலையைச் சொறிந்தவாறு வண்டியிலிருந்து இறங்கிய கோவிந்தனை "ஊது" என்றார் சற்றே தொந்தி சரிய இருந்த அந்த கான்ஸ்டபிள்.

"குடிச்சிருக்கியா போய் ஓரமா நில்லு யா"

என்ற அவர் பின்னால் சொகுசு காரைவிட்டு இறங்காத பிரணேஸிடம்

"சார் ட்ரின்க் பண்ணிருக்கீங்களா"

என்றார்...

"இல்ல"

என்ற பிரணேஷிடம்

"உங்கிட்ட வாசம் வருது கீழே இறங்குங்க ...

ஐயா அங்க நிக்கிறாரு போய்ப் பாருங்க" என்றார் கான்ஸ்டபிள்.

சற்றே ஆஸிஷ் வித்யார்த்தி சாயலில் இருந்த இன்ஸ்பெக்டரிடம் முன்னமே கெஞ்சிக் கொண்டிருந்தான் கோவிந்தன்...

அவரிடம் சென்ற பிரணேஷ்

"சார்

ப்ரண்ட்டோட பர்த்டே பார்ட்டி அதான் சார்"

என்றான் .

"சரி பைன் கட்டிட்டு கிளம்பு ங்க"

என்றவரிடம் இரண்டாயிரம் ரூபாய்த் தாளை எடுத்து நீட்டிவிட்டு□

"தேங்க்யூ சார்" என்ற பிரணேஷ்

தன் சொகுசு காரைக் கிளப்பினான் .

"அம்மா அப்பா அங்க இருப்பாரா"

என்ற பெரியவனின் கேள்வி க்கு பதிலேதும் சொல்லாமல் நடந்து கொண்டிருந்த அவளின் செவிகளுக்கு ஏதோ ஒரு வாகனத்தின் இரைச்சல் சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

கட்டுப்பாட்டை இழந்த சொகுசு கார் சாலையோரமாய் நடந்து கொண்டிருந்த அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது.

“ஹேய்”…”ஹேய்”…

என்ற பிரணேஷ்.,

அவசரமாய் எக்ஸலேட்டரிலிருந்து

காலை ப்ரேக்கிற்கு மாற்ற முயற்சித்தான்.

அதற்குள் அங்கே எல்லாம் நடந்துவிட்டிருந்தது.

“ஐயோ” !

என்றபடி தன் பிள்ளைகளை சாலைக்கு வெளியே இருந்த மண்ணில் தள்ளினாள் தாய்.

ச்சத்…

என்று ஏதோசத்தம் கேட்டு விழித்தான் பின் இருக்கையில் இருந்த முகுந்த் …

“என்னாச்சு”???” என்னாச்சு” பிரணேஷ்…

என்றான் முகுந்த்.,

வெளியே எட்டிப் பார்த்த பிரணேஷ் இரத்தத்தில் குளித்து உயிரடங்கும் வேளையிலும் பிள்ளைகளைப் பார்த்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த அந்த தாயைப் பார்த்தான்.

அந்தத் தாயின் கண்களில் பிள்ளைகளை தனியாய் விட்டுப் போகிறோமே என்ற பரிதவிப்பு அதிகமாய்த் தெரிந்தது.பின் கொஞ்சம்,கொஞ்சமாய் உயிர் அடங்கும் ஓசை அவள் கண்களில் தெரியத் தொடங்கியது.

“என்னாச்சு” …என்றவனின் கேள்விக்கு …”

ஒண்ணுமில்ல”

ஒரு நாய் குறுக்க வந்துருச்சு அடிச்சுட்டேன் …

“ச்சே…

என்று *உச்* கொட்டிவிட்டு …

சிவப்பில் நனைந்திருந்த பானட்டைப் பார்த்தவாறே

“கார வாட்டர்வாஷ் பண்ணனும்“

என்றபடி ரிவர்ஸ் எடுத்து மீண்டும் தங்கள் அறையை நோக்கி காரை நகர்த்தத் தொடங்கினான்...

நான்கு பிள்ளைகளும் தாய் இறந்துவிட்டாள் என்பதை அறிந்திராமல்...

அந்த தாயின் உடலில் வடிந்து கொண்டிருந்த இரத்தம் தாண்டி ,

அங்கங்கே தெரிந்த சிறு சிறு காயங்களை தங்கள் நாங்கள் நக்கி புண்ணை ஆற்றும் முயற்சியில் இறங்கியிருந்தன.

அந்த நேரத்தில் தான் அங்குவந்தான் கோவிந்தன். தான் வைத்திருந்த முழு பணத்தையும் பைனாகக் கட்டியிருந்த்தை எண்ணி வருந்தியவாறே வந்தவனுக்கு சாலையோரமாய் கூடியிருந்த கூட்டத்திற்கு நடுவே இறந்து கிடந்த தாய் நாயையும் அதனருகே இருந்த குட்டி நாய்களையும் கண்டவுடன் அவன் மனதுக்குள் ஏதோ ஒரு இனம்புரியா வலி மொய்க்கத் தொடங்கியிருந்ததை உணரத் தொடங்கினான்..

யாரோ குடிச்சிட்டு வண்டி ஓட்டிட்டு வந்த பசங்க இந்த தாய் நாய் அடிச்சுட்டாங்க என்ற அந்தச் செய்தி வலியை இன்னும் அதிகப் படுத்தியது.

குடித்துவிட்டு யாரோ ஒருவன் ஓட்டிவந்த லாரி பிரேக் பிடிக்காததால்

ஐந்து வருடங்களுக்கு முன்னால்

இறந்துபோன

அவன் மனைவி செண்பகம் கண்களில் கண்ணீராய் வடியத் தொடங்கினாள்.

பிள்ளையில்லாத அவனுக்கு உயிராய் இருந்த செண்பகம் இறந்த பின்னால்தான் அவன் குடிக்கத் தொடங்கினான்.

கீழே இருந்த தாயின் உடலை இன்னும் நகர்த்தி சாலையோரத்திலிருந்த பள்ளத்தில் வைத்தான்.

தாயின் உடலோடு ஓடி வந்த நாய்க் குட்டிகளைக் கையிலெடுத்தான்...

“செண்பகம் உன்னை இழந்ததால உன்ன மறக்கத்தான் நா குடிக்கத் தொடங்கினேன்...

ஆனா இப்ப இந்தக்

குடியால் தான் இந்த ஒரு குடும்பமே

அழிந்து கிடக்கிறது என்றால்

எனக்கு இந்தக் குடியே வேண்டாம்“

எனத் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்ட அவன்

அவன்

இனி நான் தான் உங்களுக்கு எல்லாம்...

என்றவாறு நெஞ்சோடு அணைத்து தடவிக் கொடுத்து வண்டியை நாளை வந்து எடுக்கலாம்

என ஓரத்தில் நிறுத்திவிட்டு தன் வீடு நோக்கி தன் பிள்ளைகளோடு நடக்கத் தொடங்கினான்.

ஏதோ ஒரு அரவணைப்பில் உறங்கத் தொடங்கியிருந்த அந்தப் பிள்ளைகளின் வயிற்றுப் பசி இன்னும் சற்று நேரத்தில் தீர்ந்து விடும் ...

தன் மனைவியையும்,பிள்ளைகளையும் தேடி வந்த தந்தை நாய் அடிபட்டு இறந்த உடலாய்க் கிடந்த அந்த மனைவியைக் கண்டு நெடு நேரம் அழுது கொண்டிருந்தது...

பின் பிள்ளைகளைத் தேடியவாறே அங்கும் இங்கும் ஓடத் தொடங்கியது.

இப்போதும் நீங்கள் பார்க்கும் பேருந்து நிலையத்திலோ...

அல்லது சாலை ஓரங்களிலோ

மனைவியையும் ,

பிள்ளைகளையும் தொலைத்த

ஒரு தந்தை பைத்தியமாய் மாறி அங்கும் ,

இங்கும் அலைந்து கொண்டிருக்கலாம் .

அப்படிக் காண நேர்ந்தால் அவரிடம் கூறுங்கள்...

அவரின் பிள்ளைகள் பத்திரமாய்,மகிழ்வாக கோவிந்தனிடம் இருக்கிறார்கள் என்று.



நிலாரவி

# இனி நீ

இடையில் சில காலம் உன்னை
இடையூறு செயதிருப்பேன்
எனில்
என்னை மன்னித்துவிடு

ஒரு காகிதப்பூவான நான்
என்னை மலரென்றே
சிறு பொழுது
கற்பனை செய்து கொண்டுவிட்டேன்


வண்ணத்துப்பூச்சியாய்
நீ சிறகு விரிக்கும்
பாதைகளில்
ஒரு மலரென காத்திருந்துள்ளேன்
நீயுமெனை
சிறு தடுமாற்றத்தில் நோக்கியபடி
கடந்து சென்றிருக்கிறாய்

மெல்ல மெல்ல
வாடிக் கொண்டிருக்கும்
ஒரு காகிதப்பூ நான்
எனதிந்த வாடும் தன்மை கண்டு
மலரோ என
மறுபடியுமொரு முறை
இடைநிற்க வேண்டாம்

ஒரு வேளை
நான் மீண்டாலும்
ஒரு நாளும்
தென்பட மாட்டேன்
உன் வழிகளில்

இனி நீ சுதந்திரமாய்
பறக்கலாம்.

விமல் பரம்



# கனவுகளும் கரைந்து போகும்

அழகான பூந்தோட்டம். அதில் பல நிற பூக்கள். மஞ்சள், சிவப்பு, வெள்ளை என கொத்து கொத்தாய் பூத்திருக்க அதன் வாசனை எங்கும் பரவியிருந்தது. அதன் நடுவே-யிருந்த நடைபாதையில் அப்பா அம்மாவின் கைகளைப் பிடித்தபடி துள்ளிக் குதித்து நடந்து கொண்டிருந்தேன்.

“செல்லக்குட்டி வீட்டுக்குப் போவோமா” அப்பா கேட்டார்.

“இல்லையப்பா. நான் விளையாடப் போறன். ஊஞ்சல் ஆடவேணும், சறுக்கி

விளையாடவேணும் ஐஸ்கிரீமும் குடிக்கவேணும்" அப்பாவின் கையைப் பிடித்துக் கெஞ்சினேன்.

"இவ்வளவு ஆசையிருக்கா என்ர செல்லத்துக்கு. சரி வா"

மறுபக்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஊஞ்சல்மரம். சறுக்குமரம், சுற்றும் ராட்டினம் என சிறுவர்கள் விளையாடுவதற்கு ஏற்ப எல்லா விளையாட்டு உபகரணங்களும் இருந்தன. ஆசையோடு போய் ஊஞ்சலில் ஏறினேன். அப்பா பின்னாலிருந்து ஊஞ்சலை ஆட்ட அம்மா அருகில் நின்று கைகளைத்தட்டி எண்ணிக் கொண்டிருந்தாள். எனக்கு சந்தோஷமாயிருந்தது.

"ஒவ்வொரு நாளும் வந்து விளையாடவேணுமப்பா. நாளைக்கும் வருவமா" ஆசையோடு கேட்டுக்கொண்டிருந்த நேரம் யாரோ என்னை உலுக்குவது போலிருந்தது. கூடவே அம்மாவின் குரலும் கேட்டது.

"சாயா, எழும்படா ஏழு மணியாச்சு. ஸ்கூலுக்கு நேரமாகுது"

கண்களைத் திறந்து பார்க்க கட்டிலில் படுத்திருந்தேன். அம்மா எதிரே நின்றிருந்தாள். அப்பா எங்கே... கண்களால் தேடினேன் காணவில்லை. வழமை போல் ஆறுமணிக்கே எழுந்து வேலைக்குப் போய் விட்டார். திரும்பி வர ஏழுமணியாகி விடும். ஆறு நாளும் வேலைக்குப் போவார். ஞாயிறு மட்டும்தான் வீட்டிலிருப்பார். அன்று அப்பாவை விட்டு விலகமாட்டேன். எங்கு சென்றாலும் நானும் வருவேன் என்று அடம்பிடிப்பேன். எனக்கு பிடித்த கடற்கரை, பூங்காவிற்கு கூட்டிப்போவார். சேர்ந்து விளையாடி நீச்சலடித்து விரும்பியதைச் சாப்பிட்டு திரும்புவோம். அந்த நேரங்கள் அடிக்கடி வராதா என்று ஏங்குவேன்.

லண்டனில் குளிர் தொடங்கிவிட்டது. இனி விளையாட ஒரு இடமும் போகமுடியாது. குளிராய் இருந்தாலும் குளிர் தாங்கும் உடுப்புகளைப் போட்டுக்கொண்டு ஸ்கூலுக்குப் போகவேண்டும். காலையில் அம்மாதான் என்னை ஸ்கூலில் இறக்கி விட்டு வேலைக்குப் போவாள். ஸ்கூல் முடியும் நேரம் தன் வேலையை முடித்துக்கொண்டு வந்து எனக்காக காத்திருப்பாள். அப்பாவும் வரவேணும் என்று ஆசைப்படுவேன்.

"அப்பா எப்ப வருவாரம்மா" வீட்டுக்குத் திரும்பி வரும்போது ஒவ்வொரு நாளும் மறக்காமல் கேட்பேன்.

" குளிச்சு சாப்பிட்டு ஸ்கூல் கோம்வேக் செய்து முடிய வந்திடுவார். பிறகு அப்பாவோட விளையாடலாம்" அம்மாவும் சளைக்காமல் பதில் சொல்லுவாள்.

என் வேலைகளை முடித்துவிட்டு அப்பாவுக்காக காத்திருப்பேன். அவருக்கும்

தெரியும். இரவு படுக்கப் போகும்வரை என்னோடிருந்து விளையாடி கதை சொல்லுவார். தூக்கி வைத்திருந்து கொஞ்சுவார்.

"ஆறு வயசாச்சு. தூக்கி வைச்சு கொஞ்சுறீங்கள்" அம்மா சொல்லிச் சிரிப்பாள்.

"எத்தனை வயசானாலும் சாயா எனக்கு சின்னக்குட்டிதானே. அவளை மடியில வைச்சுக் கொஞ்சுவன்" சொல்லிக்கொண்டே என்னை இறுக அணைத்துக் கொஞ் சுவார். இதையெல்லாம் நினைத்து நினைத்து சந்தோஷப்படுவேன்.

அன்று சனிக்கிழமை லீவு நாள். ஆறுதலாக எழும்பலாம். கண் விழிக்கும்போது அப்பாவின் குரல் கேட்டது. அப்பா வேலைக்குப் போகவில்லையா.... என் அறையை விட்டு பாய்ந்து வெளியே வந்தேன். அப்பாவும் அம்மாவும் சோபாவிலிருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். இன்று எனக்கு கொண்டாட்டம்தான்.

"அப்பா இண்டைக்கு வெளியில போவம் எங்க கூட்டிக்கொண்டு போகப்போறீங்கள்" ஆசையோடு கேட்டேன்.

"இந்த குளிருக்க எங்க போறதடா. வீட்டில இருந்து விளையாடுவம். இப்ப நடக்கிறதைப் பார்க்க வெளிய போகேலாமல் எல்லாரும் வீட்டுக்குள்ள இருக்கவேண்டி வரப்போகுது. அதுக்கு முதல் வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வைக்கவேணும்" என்றார்.

"நானும் வரப்போறனப்பா"

"வேண்டாமடா. இனி தேவையில்லாமல் ஒரிடமும் போகக் கூடாது. நீ அம்மாவோட இரு நான் மட்டும் போய் வாங்கி வாறன்"

அப்பா வழக்கமாக வாங்குவதை விட அதிகமாகவே வாங்கி வந்திருந்தார்.

"பின்னேரம் நீ போய் சமையலுக்கு தேவையானதை வாங்கிவா" என்று அம்மாவிடம் சொன்னார்.

அம்மாவும் போகும்போது என்னைக் கூட்டிக்கொண்டு போகவில்லை. தான் மட்டும் போய் நிறைய வாங்கி வந்தாள். இது போதுமா இன்னும் வாங்க வேண்டுமா என்று கேட்டபடியே எல்லாவற்றையும் எடுத்து அடுக்கி வைத்தாள். அதில் எனக்கு வேண்டியவைதான் அதிகமாக இருந்தது. அம்மா எப்பொழுதும் அளவாகத்தான் வாங்குவாள். தேவையானபோது வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லும் அம்மா நிறைய வாங்கிய பின்பும் இன்னும் வாங்க வேண்டும் என்று சொன்னது ஏனென்று தெரியவில்லை.

தொலைக்காட்சி செய்திகளை அடிக்கடி கேட்டு கிருமி, நோய், சாவு என்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். வழமைபோல் நாட்கள் போய்க் கொண்டிருந்தாலும் அதில் ஒரு பரபரப்பு இருந்தது. திடீரென்று ஸ்கூல் லீவு என்றார்கள்.

“நானும் லீவு எடுக்கப்போறன். வேலைக்குப் போறதை நினைக்கவே பயமாயிருக்கு. சாயாவோட இருக்கவேணுமே” என்றாள் அம்மா.

அப்பா வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தார். அவர் வேலையால் வரும் போது அம்மா என்னை அறையில் இருக்கவிட்டு அப்பா குளித்துவிட்டு வந்தபின்தான் கதவைத் திறப்பாள். ஸ்கூலுக்குப் போகாமல் வீட்டிலிருந்து விளையாடும்போது அப்பாவும் வேலைக்குப் போகாமலிருந்தால் எவ்வளவு நேரம் விளையாடலாம் என்று நினைப்பேன். இரண்டு கிழமையில் அப்பாவும் வீட்டில் நின்றுவிட்டார்.

“வர வர நோயும் சாவும் கூடிக்கொண்டு வருகுது. வேலை செய்யிற இடத்திலையும் ஒருத்தனுக்கு வந்துட்டுது. எங்களை வீட்டிலயிருந்து வேலையை செய்யச் சொல்லி விட்டிட்டாங்கள்” அப்பா சொன்னார்.

“ஐயோ....உங்களுக்கு பயமில்லையே”

“அவன் வேற பிரிவில வேலை செய்கிறான். நான் அவனைச் சந்திக்கிறதில்லை”

அம்மா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அப்பாவும் அம்மாவும் வீட்டிலிருந்து வேலை செய்யும்போது நானும் அவர்களுடன் இருந்து படிப்பேன் படங்கள் கீறுவேன். கீறிய படங்களை உடனே அவர்களுக்கு காட்டி அவர்களின் பாராட்டை எதிர்பார்ப்பேன்.

“வேலை செய்யிற நேரம் குழப்பக்கூடாது. கீறி வை. வேலை முடிய வந்து பார்க்கிறன்” அப்பா சொன்னதும் எனக்கு அழுகை வந்துவிட்டது.

“செல்லம் குடுத்து தூக்கி வைச்சு கொஞ்சுவீங்கள். பிறகு இப்பிடிச் சொன்னால் தாங்குவாளே. நீங்களே போய் சமாதானப் படுத்துங்கோ”

“என்ர குட்டி கீறினதைப் பார்ப்பம். சூப்பராய் கீறியிருக்கிறாய் கெட்டிக்காரி” அப்பா கொஞ்சிப் பாராட்டியதும் அழுகை போன இடம் தெரியவில்லை.

பாட்டுப் போட்டு அப்பாவோடு ஆடுவது எனக்கு பிடிக்கும்.

“அப்பா டான்ஸ் கிளாஸுக்கு போகப் போறன்”

“போகலாம். உனக்கு என்ன ஆசையோ எல்லாம் செய்யலாம். படிக்க வேணும். படிக்காவிட்டால் அப்பாவுக்கு கோவம் வரும்”

அப்பா கோபமாய் பார்த்தாலே தாங்கமாட்டேன். அவர் என்ன சொன்னாலும் கேட்பேன்.

"இவள் அப்பான்ர செல்லம்"

என்று அம்மா மற்றவர்களிடம் சொல்லும் போது எனக்கு பெருமையாகயிருக்கும்.

கொஞ்சநாளாய் அப்பா தனக்கு வேலை அதிகம் என்று அறையிலிருந்து வேலை செய்து கொண்டிருந்தார். என்னுடைய அறையிலிருந்து என்னைப் படிக்கச் சொன்னார். அம்மாவோடு விளையாடச் சொன்னார். அவர்கள் இருவரின் முகங்களிலும் கவலை தெரிந்தது.

"என்னோட விளையாட வராமல் அப்பா அறைக்குள்ளேயே இருக்கிறாரம்மா" அம்மாவிடம் சொல்லும்போது அழுகை வந்தது.

"வேலை முடிய வருவார்தானே. அடம்பிடிக்காமல் இருந்து விளையாடு " சொன்ன அம்மாவின் முகத்தில் சிரிப்பில்லை.

அம்மா சொன்னபடி கேட்காவிட்டால் அடிவிழும் என்ற பயத்தில் பேசாமல் இருந்தேன். அப்பாவோடு விளையாட மனம் தவித்துக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் அப்பா காய்ச்சல் என்று படுத்திருந்தார். அறைக் கதவு பூட்டியபடி-யிருந்தது. அம்மா மட்டும் முகத்தில் மாஸ்க் கட்டிக்கொண்டு உள்ளே போய் வந்தாள்.

"நானும் அப்பாவைப் பார்க்கப் போறன்" அழுது அடம்பிடித்தும் அம்மா என்னை அறைக்குள் விடவில்லை.

இரவு அம்மா என்னோடு வந்து படுத்தாள். அம்மா வந்து படுத்தது சந்தோஷமா-யிருந்தாலும் அப்பா தனிய படுக்கிறாரே என்று கவலையாகயிருந்தது.

"எனக்கு காய்ச்சல் வந்தால் அப்பாவோடதானே படுப்பன். இப்ப அப்பாவுக்கு காய்ச்சல். நான் அப்பாவோட படுக்கப்போறன். பாவம் அப்பா தனிய படுக்கிறாரம்மா"

"பேசாமல் படு. அங்க வரவேண்டாம் எண்டு அப்பாதான் சொன்னவர்" அம்மா சொன்னதைக் கேட்டதும் கோபத்துடன் திரும்பிப் படுத்தேன்.

இரவு அப்பாவின் அறையிலிருந்து சத்தம் கேட்டது. அம்மா எழுந்து போக நானும் எழுந்து ஓடினேன். அப்பா மூச்சு விடமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்து அம்மா அழ நானும் அழுதேன். அம்மா என்னை இழுத்து வந்து அறைக்குள் விட்டு கதவைப் பூட்டிவிட்டுப் போனாள். சிறிது நேரத்தில் கதவைத் திறந்து உள்ளே வந்து என் அருகில் படுத்து என்னை அணைத்துக் கொண்டாள்.

விடிய எழுந்தபோது அப்பாவை காணவில்லை.

"அப்பா எங்கையம்மா"

"காய்ச்சல் எண்டு கொஸ்பிற்றலுக்குப் போயிட்டார். மாறினதும் வந்திடுவார்" அழுது கொண்டே சொன்ன அம்மாவைப் பார்க்க எனக்கும் அழுகை வந்தது.

நாட்கள் போய்க் கொண்டிருந்தது அப்பா வரவில்லை. சொந்தக்காரர் எல்லோரும் போன் எடுத்து அப்பாவைப் பற்றி கேட்டார்கள். யாரும் வீட்டுக்கு வரவில்லை. அம்மா எந்தநேரமும் அழுதபடி சாமியைக் கும்பிட்டுக்கொண்டிருந்தாள்.

"அப்பா எப்ப வருவார். புதுசு புதுசாய் எத்தனை விளையாட்டு அப்பா சொல்லித் தந்திருக்கிறார். தனிய இருந்து நான் மட்டும் எப்பிடி விளையாடுறது" சிணுங்கினேன்.

"வருத்தம் மாறி அப்பா வரட்டும். நான் வாறன் விளையாட"

விளையாட வாங்கோ என்று கேட்டால் சமைக்கவேணும், வீடு துப்பரவாக்கவேணும் இப்ப நேரமில்லை அப்பாவோட விளையாடு என்று சொல்லும் அம்மா என்னோடிருந்து விளையாடினாள். இரவில் கதைகள் சொன்னாள். ஆனால் அம்மாவின் முகத்தில் சந்தோஷமில்லை. அழுதது போல் எந்தநேரமும் கண்கள் வீங்கியிருந்தது.

"அப்பா போய் எவ்வளவு நாளாச்சும்மா பத்து நாளாச்சா" கைகள் இரண்டையும் விரித்துக் காட்டி கேட்டேன்.

"இண்டையோட இருபத்தைஞ்சு நாளாச்சுடா. இன்னும் வருத்தம் மாறேலையே"

"அப்பாவை பார்க்கப் போறன். எனக்கு அப்பா வேணும் கூட்டிக்கொண்டு போங்கோ" அழுதேன்.

"அப்பாவை ஒருத்தருமே பார்க்கேலாது உள்ள விடமாட்டினம். விட்டால் உன்னைக் கூட்டிக்கொண்டு போறன்" அம்மா என்ன சமாதானம் சொன்னாலும் அப்பாவை நினைக்க அழுகை வந்து கொண்டேயிருந்தது.

அதேநேரம் போன் அடிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து போய் அம்மா போனை எடுத்தாள். யாரோ கதைத்தார்கள். அடுத்த நிமிடம் "ஐயோ கடவுளே..." என்ற அம்மாவின் அலறல் கேட்டது. பயந்து நடுங்கி விட்டேன். அம்மா பெரிய குரலில் அழுததை இதுவரை நான் பார்த்ததேயில்லை. ஓடிப்போய் அம்மாவின் கால்களைக் கட்டிக் கொண்டு நானும் அழுதேன். போனை எறிந்துவிட்டு இரு கைகளாலும் என்னை கட்டிக் கொண்டு கதறினாள்.

"ஏனம்மா அழுகிறீங்கள். எனக்கு பயமாயிருக்கு. அப்பாவைக் கூப்பிடுங்கோ"

அழுதுகொண்டே சொன்னேன்.

“உனக்கு எப்பிடிச் சொல்லுவன். இனி அப்பா இல்லையெண்டு எப்பிடிச் சொல்லுவன்” தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

நான் இருக்குமட்டும் நீங்கள் கவலைப்படவோ அழவோ கூடாது என்று சொல்லும் அப்பா எங்களை அழவிட்டு எங்கே போனார். இருந்த இடத்தைவிட்டு அம்மா எழும்பவில்லை அழுது கொண்டேயிருந்தாள். எனக்கு பசித்தது. பசியில்லாவிட்டாலும் நேரத்திற்கு சாப்பிடு என்று சொல்லி சாப்பிட வைக்கும் அம்மா அந்த நினைவே-யில்லாமல் அழுது கொண்டேயிருந்தாள்.

“எனக்கு பசிக்குதம்மா”

நிமிர்ந்து என்னைப் பார்த்துவிட்டு இன்னும் பெரிதாக அழுதாள். பசிக்குது என்றுதானே கேட்டேன் அதற்கு ஏன் அம்மா அழுகிறாள். திரும்பவும் கேட்கப் பயந்து அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்தின்பின் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து சமையலறைக்குள் போய் சாப்பாட்டை எடுத்து வந்து தந்தாள்.

“உங்களுக்கு”

“எனக்கு பசிக்கேல நீ சாப்பிடு” நான் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சாப்பிட்டதும் அம்மாவின் மடியில் படுத்தேன். அம்மா அழாமல் என்னைத் தட்டிக் கொண்டிருந்தாள். எனக்கு நித்திரை வந்தது.

திடீரென அமைதியைக் குலைத்துக் கொண்டு போன் அலறியது. திடுக்கிட்டு எழுந்தேன்.

போன் எடுத்த அம்மா திரும்பவும் அழத்தொடங்கினாள்.

“ஐயோ நான் என்ன செய்ய. அப்பா எங்கே எண்டு கேக்கிறாளே என்ன பதில சொல்ல. இவளோட எப்பிடி சமாளிக்கப் போறன்” சொல்லிச் சொல்லி அழுதாள். அழுகை சிறிது குறைய கண்களைத் துடைத்துக் கொண்டு என் அருகில் வந்து படுத்தாள். அம்மாவை படுக்க விடாமல் மீண்டும் மீண்டும் போன் மணியடித்து யார் யாரோ கதைத்தார்கள். அழுது ஓய்ந்திருந்த அம்மா ஒவ்வொரு முறையும் கதைக்கும் போது பெரிய குரலில் கத்தியழுதாள். என்னால் தாங்கமுடியவில்லை. போனை எடுத்து உடைக்கவேணும் போலிருந்தது.

“நீங்கள் போனும் எடுக்கவேண்டாம் அழவும் வேண்டாம் அப்பா வரட்டும் உங்களை எல்லாரும் அழவைக்கினம் எண்டு சொல்லுவன்”

அப்பாவைப் பற்றிக் கேட்டாலே அம்மா அழுதாள். மாமா வந்திருந்தார். வேண்டாம் என்று அம்மா மறுத்தும் விடாமல் அம்மாவை சாப்பிடவைத்தார்.

“அப்பா எப்ப வருவார் மாமா. அம்மா அழ பயமாயிருக்கு”

“பயப்பிடாத நான் உங்களோடயிருக்கிறன்” என்றார் மாமா “வேண்டாமடா உனக்கு பயம் நீ போ” அம்மா சொல்ல “போகவேண்டாம் மாமா நில்லுங்கோ” என்றேன்.

ஒரு கிழமையாகிவிட்டது. அம்மாவின் அழுகையும் நிற்கவில்லை அப்பாவும் வரவில்லை.

அன்று மாமா அம்மாவையும் என்னையும் அழைத்துக்கொண்டு காரில் போனார்.

“அப்பாவைப் பார்க்க போறமா” மாமா தலையை ஆட்டினார்.

எனக்கு சந்தோஷமாயிருந்தது.

ஒரு வீட்டின் முன்னே கார் நிற்க இறங்கி உள்ளே போனோம். அறையின் நடுவில் மூடியபடி ஒரு பெட்டியிருந்தது. அதைச்சுற்றி ஆட்கள் நின்றிருந்தார்கள். அனைவருடைய முகங்களிலும் மாஸ்க் இருந்தது. அவர்களில் அப்பாவைத் தேடினேன் காணவில்லை. அம்மா பெட்டிக்கருகில் போய் நின்று அழத்தொடங்கினாள். அம்மா அழுவதைப் பார்த்து அங்குள்ளவர்களும் அழுதார்கள். எனக்கும் அழுகை வந்தது அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு அப்பாவைத் தேடி அழுது கொண்டிருந்தேன். என்னன்னவோ செய்தார்கள். கடைசியில் பெட்டியைத் தூக்கும்போது தூக்கவிடாமல் இருகைகளாலும் மறித்துக் கொண்டு கதறிக் கதறி அழுத அம்மாவைப் பார்த்து நானும் அழுததில் விக்கல் வந்துவிட்டது. பெட்டியைத் தூக்கிக்கொண்டு போனபின்பும் அம்மா அழுது கொண்டிருந்தாள். பொறுமை இழந்து “ஏனம்மா அப்பா இன்னும் வரேல. எப்ப வருவார்” விக்கிக் கொண்டே கேட்டேன்.

“அப்பா போயிட்டாரடி இனி வரமாட்டார் வரவே மாட்டார்” அம்மா படாரென என் பக்கம் திரும்பிச் சொல்ல அதிர்ச்சியில் விக்கல் கூட நின்றுவிட்டது.

திரும்பவும் மாமா எங்களைக் கொண்டு வந்து வீட்டில் விட்டு போய் திரும்பவும் வந்தார்.

“அக்கா, இந்தா அத்தானின் படம்” பேப்பரால் சுற்றிய பார்சலை அம்மாவிடம் கொடுத்தார். அம்மா அதை சுவாமித்தட்டில் வைத்து விட்டு வந்தாள். என் கையைப் பிடித்து அழைத்துப்போய் படுக்க வைத்து தானும் படுத்தாள்.

அப்பா வரமாட்டாரா...என்னைப் பார்க்க வரமாட்டாரா... ஏன்..ஏன்.. அப்பாவை

நினைத்தபடி படுத்திருந்தேன்.

அழகான பூந்தோட்டம். அதில் நிறைய பூக்கள் பூத்திருந்தன. நடுவேயுள்ள நடைபாதையில் அம்மாவின் கையைப் பிடித்து கொண்டு நடந்து கொண்டிருந்தேன். மறுபக்கம் அப்பாவின் கையைத் தேடினேன் காணவில்லை.


“அப்பா எங்கேயம்மா ஊஞ்சல் ஆடவேணும். ஐஸ்கிரீமும் குடிக்க வேணும்” கேட்டேன் “வாடா நான் வாங்கித் தாறன்.”

“எனக்கு ஒண்டும் வேண்டாம் எனக்கு அப்பாதான் வேணும்” அழுதபடி ஊஞ் சல் பக்கம் ஓடினேன். அப்பாவை எங்கு தேடியும் காணவில்லை.

“அப்பா..அப்பா எங்கயிருக்கிறீங்கள் வாங்கோப்பா” கத்திக் கூப்பிக் கொண்டே திடுக்கிட்டு கண்விழித்தேன். கட்டிலில் படுத்திருந்தேன். அப்பாவைக் காணவில்லை. வேலைக்குப் போய்விட்டாரோ... சத்தம் கேட்டு அம்மா ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

நிமிர்ந்து பார்த்தேன். எதிர் சுவரில் புதிதாக மாட்டியிருந்த படத்தில் அப்பா மாலையோடு எங்களைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு அழுகை அழுகையாக வந்தது.



**விஷ்ணு**

# நம்பிக்கை

தன்ன(ந)ம்பிக்கை இல்லாதவன்
உருவாக்கியவனையே
கண் இல்லாதவன்
கல் நெஞ்சம் படைத்தவன்
எனக்கு மட்டுமே
இத்தனை கஷ்டம் தருகிறான்
என்றெல்லாம் வசைபாடுகிறான்

முழுதாய் ஈரைந்து
விரல்களுடன் கூடிய கைகளையும்
நல்ல உடலும்
தெளிந்த சிந்தனையும் தந்துள்ளான்
என்பதை மறந்து....

**புசல்லாவை கணபதி**

# நான் மகன் பேரன்

நண்பா ஞாபகமிருக்கலாம்
நீயும் நானும்
ஒற்றையடிப் பாதையில்
ஓடியாடி பள்ளிக்கு
பாய்ந்து வந்தது!

❒

பிள்ளையார் பந்து
கிட்டிப்புள் கிளித்தட்டு
திருக்குறள் மனனம்
பேச்சுப் போட்டி
எல்லாம் பள்ளித்தோட்டத்தில்
விதைத்த ஞாபக விதைகள்

❒

பாட்டி வடை சுட்ட கதை
பாட்டி சுட்ட வடையை
காகம் சுட்ட கதை
இன்னும் ஆழ்மனசில்
கவிழ்ந்து கிடக்கும்
டைட்டானிக்குகள்

❒


எல்லாம் மாறிப்போய்விட்டது
என் மகனுக்கு
அடக்கமுடையார் அறிவிலர்
என்றெண்ணி கடக்க கருதவும்
வேண்டாமென
என் மூதாட்டியை சொல்லிக்
கொடுக்கும் என்னை கண்டு
கொள்ளாமலே இருக்கிறான்
கைப்பேசியையே
கட்டிக்கொண்டு இருப்பதால்..

❒

வருங்காலம்
என் பேரனையாவது
என்னைப்போல்
வாழ வைக்குமா
பார்ப்போம்.

✦

**பூ.விவேக்,திருப்பூர்**



# காதல் ஹைக்கூக்கள்

*படபடத்துக்*
*கொண்டிருக்கும்*
*உன் விழிகளுக்கு*
*பட்டாம்பூச்சியின் சாயல்!*

❒

*மூடிய விழிகளுக்குள்*
*திறந்தேயிருக்கிறது*
*உனைப்பற்றிய*
*கனவுகள்!*

❒

*என்*
*கனவுகளுக்குள்*
*நடமாடும் சிறகு முளைத்த*
*முத்தங்கள் நீ!*

❒

*உறங்க விடாத*
*கனவுகளுக்கு*
*உன் பெயர்*
*வைக்கிறேன்*

❒

*தனிமையில்*
*நகம் கடிக்கிறாய்!*
*தெறித்து விழும்*
*சில்லுப் பிறைகளுக்கு*
*உன் முகம்!*

❒

*முதல் வரிக்கும்*
*கடைசி வரிக்குமான*
*இடைவெளி*
*நீ!*

❒

*என்*
*கனவுகளும்*
*வெட்கப்படும்*
*முத்தங்கள்*
*நீ!*

❒

அதே பேருந்து
அதே டீக்கடை
எப்போதும் நான்!
எப்போதாவது நீ!

❒

எனை வாசிக்கும்
உன் விரல்களில்
ஒரு வீணை இருக்கிறது!

❒

என்
தூக்கத்திற்குள்
புரண்டு
கொண்டிருக்கும்
கனவுகள் நீ!

❒

நான் குடை விரிக்கிறேன்!
நீ தலை துவட்டுகிறாய்!
இருந்தும் நனைந்து
கொண்டே இருக்கிறது
நம் காதல்!

❒

இந்த
இரவு முழுக்க
கவிதை எழுத
உன் ஒற்றைச் சிரிப்பு
போதுமாயிருக்கிறது!

❒

மொழி பெயர்த்தே
புரிந்து கொள்ள
வேண்டியிருக்கிறது
உன் மௌனங்களை!

❒

நீ
இன்றி
நிர்வாணமாய்
நிற்கிறது
என் கனவுகள்!

❒

மப்பாகிக்
கிடப்பதெல்லாம்
காதலுக்கு
பழக்கப்பட்டது.

❒

ஒரு காடு
சுற்றித் திரிய
வேண்டியிருக்கிறது!
உன் வானிலையை
அறிந்து கொள்ள!

❒

உன்
முத்தங்களற்ற கனவு
நிறைவுறாத கவிதையாகிறது!

முனைவர். பெண்ணியம் செல்வகுமாரி



# மல்லிகை

அவள் பெயரும் அதுவாகத்தான் இருந்தது. அவளுக்கு ரொம்ப நாளாக ஆசை. அதை எப்படி எவ்விதமாக செய்து கொள்வது என்று தான் புரியாமல் இருந்தாள். மறக்க வேண்டும் என்று நினைத்தாலும் முடியாமல் தவித்தாள். அவளுக்கு ஆசை கட்டுக்கடங்காமல் போவதற்கு ஒரு காரணம் இருந்தது. சிறுவயதிலிருந்தே

பழகிப்போன ஒன்றை அவளால் எப்படி விட்டுவிட முடியும் ?. இந்த சின்ன வாழ்க்கையில் தன்னுடைய சிறிய ஆசையைக் கூட நிறைவேற்ற முடியாதவளாக இருக்கிறோமே என ஏங்கினாள். இந்தச் சமூகமும்கூட அந்தப் பெண்ணின் நிலைமை இவ்வாறுதான் இருக்கவேண்டும் எனத் தீர்மானிப்பது எத்தனை அபத்தமானது?

அவள் தன் சிறுவயதில் வீட்டிற்கு அருகிலுள்ள செங்கேணி அம்மன் கோயிலுக்கு வாரத்திற்கு மூன்று முறையாவது போவாள். அம்மனைக் கும்பிடும் போதெல்லாம் சாமியை ரொம்ப நேரம் உற்றுப் பார்ப்பாள். உடன் வருபவர்கள்'ஏண்டி இம்மா நேரம் என்ன தாண்டி சாமி கிட்ட வேண்டுறே'எனக் கேட்டாலும் அதைச் சட்டைபண்ணாம அந்தச் சாமியையே கண் கொட்டாம உத்து பார்ப்பாள். அவள் சாமியைப் பார்க்கிறாளில்லை.. சாமி விதவிதமான பூக்களால் அலங்கரிக்கப்பட்ட நேர்த்தியைக் கூர்ந்து பார்ப்பாள் .சாமந்திப் பூ, ரோஜா ,மல்லிகை எனப் பலவித பூக்கள் நேர்த்தியாக கட்டபட்டு மாலைகளாகச் சாமிக்கு அலங்கரிக்கப்பட்டு இருக்கிறதைக் கண்டு அவள் வியப்பாள். தங்க நகைகளை விட பூக்கள்தாம் அம்மனை அழகு சொரூபமாகக் காட்டுகின்றன என நினைத்துக் கொள்வாள்.

இப்பேர்பட்டவளுக்கு ஒரு பூ கீழே வாடிக்கிடப்பதை சகித்துக் கொள்ள முடியாது. ஒரு பூ உதிர்ந்து மடிவது எத்தனை சுலபமாய் நடந்து விடுகின்றது என்றாலும் அதற்குரிய நேரத்தில் எத்தனை பேரை மகிழ்வித்துச் செல்கின்றது என எண்ணுவாள். ஊட்டியில் வண்ண வண்ண பூக்கள் பூத்து குலுங்கியதாகவும் அதை பார்க்க மக்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றும் தொலைக்காட்சி செய்தி வாசிக்கப்பட்ட போது நெஞ்சம் பாரமாய் இருந்தது. இந்தக் கொரோனா காலத்தில் யாராலும் பார்க்க முடியாத சூழலில் பூக்கள் பூத்துக்குலுங்கும் காட்சியை இயற்கையாவது ரசித்துவிட்டுப் போகட்டும் என முணுமுணுத்தாள்.

அவளுக்குள் ஆதங்கத்தை ஏற்படுத்தியது அவளுடைய சின்னவயசு நினைவுகள். அந்தச் சின்ன வயசிலே தன் வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு பெரிய பூந்தோட்டத்தில் தினமும் பூப்பறிக்கச் செல்வாள். இவளோடு சேர்ந்து இருபது பேராவது வருவார்கள் . பள்ளிக்கூடம் போவதற்கு முன் இரண்டு படி மூன்று படி பறித்து வந்து தோட்டக்காரரிடம் அளந்து கொடுத்துக் காசு வாங்கிச் செல்வாள். மறுபடி பள்ளி விட்டு வந்தவுடன் தோழிகளை அழைத்துக் கொண்டு தப்பரும்பு எடுத்து வருவாள். காலையில் அரும்புகளை எடுத்துவிட்டு தவறிவிட்ட அரும்புகளைத்தான் தப்பரும்பு என்று சொல்லுவார்கள். அதைப் பறித்து எடுத்து வந்து பூக்கட்டினால் ஐந்து முழம் கூட வரும்.அதை அப்படியே தான்மட்டும் கட்டி இரட்டைசடையில் வைத்துக் கொள்வாள். யாருக்கும் கொடுக்க மாட்டாள் .

சில நேரம் தன் அம்மாவிடம் அடிவாங்கியிருக்காள். ஏன்னா ஸ்நேரம் போவதே

தெரியாமல் பூகட்டுவது கண்ட அம்மா “வீட்டு வேலை அப்படியே கிடக்கு…படிக்கற வேலையிருக்கு..அதவுட்டுட்டு பூக்கட்றாளாம் பூ” என அறையாமல் என்ன செய்வாள்?. அடித்தாலும் அவளுக்கு வலிக்காது. பூவிடம் அத்தனை பிரியம் அவளுக்கு .மாலை நேரத்தில் இரட்டை ஜடை போட்டு கொண்டு ஐந்து முழம்

மல்லிகைப் பூவைச் சூடி பாவாடை சட்டையில் வலம் வருவது அவளுக்கு ரொம்ப பிடிக்கும்.

எல்லா விஷயத்திலும் அவள் தாராளமானவள்தான். ஆனால் பூ விஷயத்தில் மட்டும் கொஞ்சம் கஞ்சமாகத்தான் இருப்பாள். சில நேரங்களில் அவளுடைய தங்கச்சி அவள் கட்டிய பூவை வைத்துக் கொண்டால், உடனே அழுது அடம்பிடிப்பாள். ‘ஏம்மா நீ அவளுக்குக் காசுக்கு வாங்கி வைக்க வேண்டியதுதானே… ஏன்.. எதுக்கு என் பூவை எடுத்துக் கொடுத்தே” என்று கோபிப்பாள். இப்படி பூவின் மீது அவளுக்கு அலாதி பிரியம். ஆனால் இப்போது?….

அந்த ஒரு மழைநாளில்கூட காலையில் பூப்பறிக்க முடியாமல் போனது. ஆனால் மாலையில் அவள் தனியாக சென்று அந்த தோட்டத்தில் பூ பறித்துக் கொண்டிருந்தபோது எதோ பூச்சி கடித்துவிட்டது .அப்படியும் பறித்த பூவை எடுத்துக் கொண்டு வந்ததும் தன் அம்மாவிடம் உடம்பைக் காட்டினாள். உடம்பெல்லாம் தடித்துப் போய் ஒரே அரிப்பு.

“ உனக்கு எதுக்குடி இந்த வீணத்த வேலை. மழையில போயி பூவப் பறிச்சிட்டு வந்து எதுக்கு இப்படி அவஸ்தைபடணும்? “என்று திட்டிக்கொண்டே திருநீரை எடுத்து உடம்பெல்லாம் பூசி விட்டாள். அப்போதும் கூட அவள் கட்டிய பூவைத் தலையில் வைத்துக்கொண்டு உறங்கிப்போனாள்.

நாட்கள் போக மல்லிகை மல்லிகையோடு வளர்ந்தாள், மல்லிகையோடே வாழ்க்கைப்பட்டாள். தன்மகள் வள்ளிக்குத் தினமும் பூ வைத்து அனுப்புவதை விடவேயில்லை. திங்கள்கிழமை பூவைத்து வரக்கூடாதுன்னு டீச்சர் எத்தனையோ தடவை சொல்லியபோதும் இவள் தன் மகளுக்கு இரட்டைசடையில் பூ வைத்தே அனுப்புவாள்.நேற்றுகூட சைக்கிள் வந்தவனிடம் நூறு பூவை வாங்கினாள். அதை வராந்தாவில் வைத்து கட்ட ஆரம்பித்தபோது ,அந்த ஆசை மெல்ல எட்டிப் பார்த்தது. அவள் பூக்கட்டும்போது நூல் தீர்ந்து போயிற்று. மீந்த பூவை உத்துப் பார்த்தாள். நெடுநாள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்தாள். ஆசையைக் கொண்டைக்குள் வைத்துத் தூங்கப் போய்விட்டாள்.

காலை விடிந்தது .வாசலில் தண்ணீர் தெளித்து டிப்போவில் பால் வாங்கப் போனாள். அங்கே தான் அது எதிர்பாராமல் நடந்துவிட்டது. அங்கே

இருந்த மரத்தின் மீதிருந்த காக்காய் அவள் தலையில் எச்சம் இட்டது. அதை தட்டி விட்டாள் கூட வந்த பெண். அப்போது அவள் கொண்டை அவிழ்ந்தது. அவள் கூந்தலிலிருந்து கொஞ்சம் காய்ந்த மலர்கள் உதிரத்தொடங்கும் வேளை கூடியிருந்த எல்லா பெண்களின் கண்கள் அதிர்ச்சியுடன் விரியத் தொடங்கின.

"என்னடி இது, வழக்கமில்லாத வழக்கமா இருக்கு.. அறுத்துட்டவளுக்குப் பூக் கேட்குதா?"..

"குண்டிக் கூழுக்கு அழுவுதாம், கொண்ட பூவுக்கழுவுதாம்"..

"நல்லா இருக்கு நாயம், நடுவுல இருக்குசாயம்"

" கட்டின தாலியை கழட்டி வைச்சிட்டு போறாளுக.. இந்த மாதிரி பொம்பளங்களாலதான் ஒலகம் இப்படி அழியுது"

நாலுபேர் நாலுவிதமாகப் பேசியதை கேட்டு நிதானமாக பாலை வாங்கிக் கொண்டு ,போகிற போக்கில் ஒன்றைச் சொல்லிவிட்டு போனாள். "நான் பத்துப் பூ வைச்சதால்தான் இந்த உலகத்துக்குக் கேடு வருதுன்னா.. ஒரு கொரோனாவாலயோ வெட்டுகிளியாலயோ இந்தக் கேடு கெட்ட ஒலகம் ஒரேயடியா அழிந்து போகட்டும் " என்ற அந்த ஒரு கேள்வியில் பூவை வைத்து பார்க்கும் தன் அடங்கா ஆசையை அவள் தீர்த்துக் கொண்டது போல் இருந்தது. ✦

**ச.இராஜ்குமார்**

அள்ளிக்கொள்கிறேன்
சுயமில்லா உனதன்பை முத்தமாக
கண்ணத்தில் ....!!


- குழந்தையின் பாசம்..

❐

தொடாதே நீ என்னை
பட்டாம்பூச்சியாய்
உதிர்கிறது என்னுயிர்..
இறகுகளிழந்து .......!!

❐

நேசிக்க சில காலங்களை
மட்டுமே கொடுத்து விட்டு...
அதை வாசிக்க பல யுகங்களை தந்து
செல்கிறாயே .....!! ✦



புஷ்பா கிறிஸ்ரி

# சின்னஞ்சிறு சிட்டுக்கள்

அன்பு காட்டும் அழகுக் குருவிகளே
சொண்டால் ஒருவரை சொடுக்கி முத்தமிட்டு
கண்ட சுகம் என்னவென்று அறியலாமா?
நெல்லுக் கதிருக்குள்ளே கள்ளத் தொடர்பு
வல்லமை தந்திடும் வாழ்க்கை உங்களுக்கு
கிராமத்துக்கு தான் குடியேறி வந்தீகளோ
கிராமத்து குடியானவன் களைப்பை போக்குவியளா?
விட்டத்துக் கூட்டிலே கூடு கட்டியே
வட்டமடித்து தீனிதேடி வந்து குஞ்சுக்கூட்டி
செட்டையடித்துப் பறந்து செருக்குக் காட்டிடும்
சிட்டுக்குருவிகளே நாங்கள் செல்லமாய்க் கொஞ்ச
என்ன தருவியளோ? எப்ப தருவியளோ?
கீச்சு கீச்சென்று கத்தியே கூச்சலிடும்
குஞ்சுக் குருவியும் களைப்பைத் தீர்த்திடுமே
அன்புச் செல்லங்களே உங்களைத் தொலைச்சான்
இன்பத்தை தொலைச்ச பட்டணக் காரன்தானே

ஆதிலட்சுமி சிவகுமார்



# ஈன்றபொழுதிலும்....

வெளியே மஞ்சளாக வெயில் எரித்துக்கொண்டிருந்தது. வெளிப்புறக் காலநிலைக்கு ஏற்ப தொடர்வண்டிக்குள் குளிரூட்டி இயங்கி, குளிர்மையை வழங்கிக்கொண்டிருந்தது.

இருக்கையில் சாய்ந்தபடி கைத்தொலைபேசியை ஆராய்ந்துகொண்டிருந்த பவித்திரா தலையை நிமிர்;த்திப் பார்த்தாள். முன்னிருக்கையில் இவளையே பார்த்துக்கொண்டிருந்த வேற்றுநாட்டுக்கார இளைஞன், சடாரென பார்வையை

வெளிப்பக்கம் திருப்பினான்.

அவளுக்கு ஒருமாதிரிப் போய்விட்டது. முகத்தில் ஊசலாடிய முடியை ஒதுக்கிவிட்டுக் கொண்டாள். சிலநாட்களாய் எடுத்ததற்கெல்லாம் தன்மனது பரபரப்பாகிவிடுவதாக உணர்ந்துகொண்டாள்.

மனதை சமநிலைக்கு கொண்டுவர முயற்சித்து, பார்வையை வெளியே திருப்பினாள். தோட்ட வெளிகளை ஊடறுத்துச் செல்லும் நெளிந்த நடைபாதையில், குழந்தை வாகனத்தை தள்ளியபடி பெண்ணொருத்தி போய்க்கொண்டிருந்தாள்.

இப்படியாக கொளுத்தும் வெயிலைக் குடித்து… வேலைசெய்துதான் அப்பா எல்லோரையும் கரைசேர்த்தார் என நினைக்கும்போது, இறந்துபோன அப்பாவுக்காக மனது வேதனைப்பட்டது.

'கடுங்கஸ்டங்கள் நிறைஞ்ச காலத்திலையெல்லாம் அருக இருந்து, அறிவுரையள் சொல்லி ஆளாக்கிவிட்ட அப்பா, இப்ப… நாங்கள் நல்லாயிருக்கிறதைப் பார்த்து சந்தோசப்பட ஏலாமப்போச்சுது அவரால…'

நினைப்போடு நிமிர… ஒரு பதினைந்து வயதுச்சிறுமி ஏறிக்கொண்டாள். அவளும் ஏறியவுடன் கைப்பேசியை நோண்டத் தொடங்கிவிட்டாள்.

சடாரென்று மகள் கனியின் நினைப்பு தொற்றிக்கொண்டது. அவளை அழைப்பதற்கு கைத்தொலைபேசியை திறந்தாள்.

அதற்குள் ஊரிலிருந்து வைபர் அழைத்தது. அக்காதான். மனதுக்குள் ஒருவித சலிப்பாக இருந்தாலும்,

'ஹலோ…' என்றாள்.

'எங்கை நிக்கிறாய் பவி… கதைக்கலாமோ…'

'ஓமக்கா… இப்பதான் வேலை முடிஞ்சு… றெயினுக்குள்ளை இருக்கிறன்… சொல்லுங்கோ….'

'இல்லை பவி… இவள் சாதனாவுக்கு ஒரு சம்பந்தம் பொருந்தி வந்திருக்குது… உங்கடை நாடுதானாம்… எண்பதுவீதம் பொருந்துதுதாம் எண்டு எங்கடை இரத்தினச்சாமியார் குறிப்புகளைப் பாத்துச் சொன்னவர் … சீதனமும் அவை வற்புறுத்தேல்லை… நீயும் இருக்கிறாய்… நல்லது தானே… அதுதான் சொல்லுவம் எண்டு எடுத்தனான்…'

'எந்தநாடு எண்டாலும் நல்லா விசாரிக்கவேணும்… சாமியார் சொல்லிப்போட்டார் எண்டு அவசரப்பட்டு ஓமெண்ணாதேங்கோ…. பிறகு… அவளின்ரை வாழ்க்கை

நாசமாப்போயிடும்... விளங்குதே...'

'நல்ல பெடியனாம் பவி.. குடிவெறி ஒண்டுமில்லையாம்...'

'ஓ... உப்பிடிச் சொல்லித்தானே என்னையும் அனுப்பினீங்கள்... அவளையும் கிணத்துக்கை தள்ளஞுறமாதிரி தள்ளாதேங்கோ....'

'என்னபவி... கவரேச்சரியில்லைபோலை.... நீசொன்னதொண்டும் விளங்கேல்லை...'

'ஒண்டுமில்லை... அம்மா சுகமா இருக்கிறாவோ...'

'ஓ... இருக்கிறா... நடக்கிறதுக்கு கொஞ்சம் கஸ்டப்படுறா... என்னாலையும் ஏலாமக்கிடக்கு... உதவிக்கு ஒராளைப் பிடிப்பம்; எண்லீல்... அதுகள் உத்தியோகச் சம்பளமெல்லே கேக்குதுகள்... அம்மான்ரை வயது வாறவரைக்கும் நான் உயிரோடை இருக்கக்கூடாதெண்டு நினைக்கிறன் பவி.... வேற என்ன.. பிள்ளையள்... மனுசன் சுகம்தானே...'

'ஓ... அவயைள் சுகம்... மறக்காம பெடியன்ரை விலாசம்.. படம் எல்லாத்தையும் வாங்கியனுப்புங்கோ.... விசாரிச்சுப் பாப்பம்... எல்லாம் சரிவரமுதல் சாதனாவின்ர படத்தை குடுக்காதேங்கோ... கண்ணைமூடிக்கொண்டு உந்தப் புறோக்கர்மாரை நம்பாதேங்கோ.... கலியாணம் சரிவரேல்லை எண்டால் பேஸ்புக்கிலை படத்தைப் போட்டு நாறடிச்சுப்போடுவாங்கள்....''

'ஓம்; பவி.... பெடியன்தானாம் மூத்தது.... முள்ளிவாய்கால்வரை நிண்டுவந்ததாம்....'

'உதெல்லாம் இப்ப சொல்லேலாது... அங்கைநிண்டு வந்ததெண்டு சொல்லுற சிலபேர் இஞ்ச படுகிற பாடு.... நல்லாவிசாரிக்க வேணும்....'

'...............'

'வேறை என்னக்கா... இறங்கிற இடம் வந்திட்டுது... பிறகு வீட்டபோய் எடுக்கிறன்.... அம்மாட்டைச் சொல்லு...'

கைப்பையைத் தூக்கிக்கொண்டு இறங்கினாள்.

சாலையோரமாக பத்துநிமிடம் நடந்தால் வீடுவந்துவிடும். நேற்று இரவு மகன் ராகுலன் குடிப்பதற்கு 'சொக்கலேற் மில்க்' கேட்ட நினைவுவந்தது.

போகிறவழியில் பெரிய பல்பொருள் அங்காடி ஒன்று. விருப்பமான எல்லாப்பொருட்களயும் அங்கேயே வாங்கிவிடலாம்.

அவளைக் கண்டவுடன் தானியங்கிக் கதவு திறந்துகொண்டது.

மின்படிகளில் அவள் கடையின் மேல்தளத்திற்குப் போனாள். நோய்த்தொற்றுக் காலம் என்பதனால் கடையில் அதிகசனக்கூட்டம் இல்லை. கைகளுக்கு தொற்றுநீக்கியை தடவிக்கொண்டு... கூடையில் தனக்குதேவையான பொருட்களை எடுத்து, தானே தானியங்கி இயந்திரத்தில் கணக்குப்போட்டு, பணத்தையும் செலுத்திவிட்டு வெளியே வந்தாள்.

வாசலில் நின்ற விற்பனைப் பெண்ணொருத்தி இனிய சங்கீதமாய் புன்னகைத்து, நன்றி சொன்னாள். வெள்ளைவெளேரென்ற அவளின் முகத்தின் உதடுகளில் சிவப்பு உதட்டுச்சாயம் எடுப்பாகத் தெரிந்தது.

காலையில் வேலைக்குப் போகமுன்னர் பிள்ளகளுக்குப்பிடித்த வெள்ளைச்சோறும், பருப்பும் சமைத்து அப்பளமும் பொரித்து வைத்திருந்தாள். மகன் ஆறுமணிக்குத்தான் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திலிருந்து வருவான். அவளது கணவன் பாஸ்கரனே வேலையால் வரும்போது அழைத்து வந்துவிடுவான்.

மகள் வழக்கமாக மாலை நான்குமணிக்கே வீட்டுக்கு வந்துவிடுவாள். வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு, சிலவேளைகளில் தொலைக்காட்சி பார்ப்பாள். இல்லாவிட்டால் வீட்டுப் பாடங்கள் ஏதாவது செய்துகொண்டிருப்பாள்.

அவளது வகுப்பில் பல்வேறு நாட்டுப்பிள்ளைகளும் படிக்கின்றனர். வெள;வேறு பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்ட ஆண்,பெண் பிள்ளைகள் வாழும் நாட்டில் மகளை சற்றே கண்காணிக்கவேண்டிய பொறுப்புணர்வும் தனக்கிருப்பதாக நினைத்துக்கொள்ளுவாள் பவித்திரா.

அதனால் அடிக்கடி பிள்ளைகளிடம் ஊரில் தான் வாழ்ந்த வாழ்க்கையை கதைகதையாகச் சொல்லுவாள். தன்னுடைய கதைகளைக் கேட்டு பிள்ளைகள் கட்டுப்பாடாக வளர்வார்கள் என்பது அவளது நம்பிக்கை...

ஆனாலும் மகள் கனி வேற்றுநாட்டு நண்பிகளின் திகில்நிறைந்த கதைகளிலேயே ஆர்வம் காட்டுவதாக பவித்திரா உணர்ந்துகொண்டு வருந்தினாள்.

இப்போது சில நாட்களாய் மகள் தாமதமாகவே வீட்டுக்கு வருவதாக, அதே குடியிருப்பில் வசிக்கும் போலந்து நாட்டவளான ஸீஷரினா சொல்லியிருக்கிறாள். அவளொன்றும் விடுப்புக்காரியல்ல. ஆனால் அயலவள் என்கிற முறையில் அக்கறைகாட்டுவதாக பவித்திரா புரிந்துகொண்டாள்.

நான்கு வீடுகளைக்கொண்ட அவர்களின் இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் ஸீஷரினா மட்டும் கொஞ்சம் நட்போடு பழகினாள். மற்றவர்கள் எப்போதும் தாமுண்டு தம்வேலையுண்டு என இருப்பவர்கள். சிலவேளைகளில் ஸீஷரினாவின் சின்னப் பையன்

இவளுடைய மகனுடன் வந்து வீட்டில் விளையாடிவிட்டுச் செல்வதும் உண்டு.

தன்னிலும் அதிகவயது கொண்ட இந்த நாட்டவர் ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்து, குழந்தை ஒன்றுக்கு தாயாகிய பிறகு அவரிடமிருந்து பிரிந்து வாழ்பவள் ஸீஷரினா. வணிக நிறுவனம் ஒன்றில் நல்லபணியில் இருக்கும் ஸீஷரினா, மிகவும் இரக்க குணம் கொண்டவளாக இருந்தாள்.

வேலைவிடயமாகப் பல்வேறுநாடுகளுக்கும் பயணம் செய்பவள். எப்போதும் சுதந்திரமாக வாழவேண்டும் என்கின்ற தீராத எண்ணம் நிறைந்தவள். நினைவுகளை சுமந்தபடியே வீட்டுக்கு வந்துவிட்டாள் பவித்திரா.

வீட்டுவாசலருகே கிடந்த கடிதப்பெட்டிக்குள் விளம்பரக் கடுதாசிகளும், பத்திரிகைகளும், நாளேடுகளும் நிரம்பிக் கிடந்தன. அவற்றை கையில் எடுத்துக்கொண்டு அழைப்பு மணியை அழுத்தினாள்.

வாசல் கதவு திறக்கவில்லை. மீண்டும் இரண்டு தடைவைகள் அழைப்பு மணியை அழுத்தினாள். அப்போதும் கதவு திறக்கவில்லை. மனதுக்குள் பகீரென்றிருந்தது.

'பிள்ளை நித்திரையாய்ப் போச்சு போல...' என்று நினைத்தபடி கைப்பைக்குள்ளிருந்த திறப்பை எடுத்து கதவைத் திறந்து உள்ளே போனாள்.

வீடு வெறுமையாயிருந்தது. அவளின் மனம் நடுக்கமுற்றது. அவசரமாக கைத்தொலைபேசியை எடுத்து மகளுக்கு தொடர்பெடுத்தாள். அழைப்பு சென்றது. ஆனால் பதிலில்லை. மீண்டும் மீண்டும் பதற்றத்தோடு அழைப்பெடுத்தாள்.

கைப்பேசியின் வெளிச்சம் மின்னலிட்டது. பார்த்தாள்.

'வரக் கொஞ்சம் லேற்றாகும்... 'என மகளிடமிருந்து தான் செய்தி வந்திருந்தது.

மிளகாயைக் கடித்தமாதிரி இருந்தது பவித்திராவுக்கு.

'எங்க நிக்கிறாய் கனி... சமைச்சுவைச்ச சாப்பாடு அப்பிடியே கிடக்கு.. சாப்பிடேல்லையா... ' தானும் செய்தியனுப்பினாள்.

பதில் வரவில்லை. அவளுடைய செய்தி பார்க்கப்படவுமில்லை.

'எத்தினைநாள் சொல்லிப்போட்டன்... சினேகிதங்களோடை திரியவேண்டாமெண்டு... இந்தப் பிள்ளை கேட்டாத் தானே...' தனக்குள்ளாக பதற்றத்துடன் சொல்லிக்கொண்டாள். கூடவே இத்தாலிய உணவுவிடுதியொன்றில் வேலைசெய்யும் தங்கராசு அண்ணரின் மகள் வேற்றுநாட்டுக்கார இளைஞனுடன் காதல்வயப்பட்டிருப்பதை கூறி, அவர் கவலைப்பட்டதும் நினைவில் வந்தது.

தன்னுடைய தலைக்குள் ஏதோஒரு பாறாங்கல் உருள்வதாக மனது பயங்காட்டித் தொலைத்தது.

உடைகளைக் களைந்து குளித்துவிட்டு வந்தாள். மனது பதற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

கணவனுக்கு வேலை முடிந்திருக்கும். அவனுக்கு அழைப்பை எடுத்தாள். அவனிடமிருந்து பதிலில்லை.

'றைவிங்கிலை இருக்கிறார் போலை... அதுதான் எடுக்கேல்லை....'

'அம்மாளாச்சி.. வரவர இந்தப்பிள்ளை சொல்லுறதைக் கேக்குதில்லை... நீதான் அதுக்கு நல்லபுத்தியை குடுக்கவேணும்....'

சுவாமிப்படங்களின் முன் நின்று வணங்கினாள். அழைப்பு மணி அடித்தது.

'வந்திட்டாள்.... கடவுளே....'

ஓடிப்போய் கதைவைத் திறந்தாள். மகனும் கணவனும் உள்ளே நுழைந்தார்கள். அவன் பைநிறைய பொருட்களுடன் வந்தான். பைக்குவெளியே அந்தப் போத்தல் தலையை நீட்டிக்கொண்டிருந்தது.

அவளுக்குள் ஒருவித எரிச்சல் பரவியது.

' குளிச்சிட்டு ஓடிவாங்கோ ராசா... பிள்ளைக்கு அம்மா சோறு சூடாக்கிறன்...' மகனிடமிருந்து புத்தகப்பையை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள்.

'கனி இன்னும் வரேல்லையே....'

இல்லையப்பா... வர கொஞ்சம் லேட்டாகுமாம்.... மெசேச் வந்திருக்கு..'

'நீர் வேலைவேலையெண்டு திரியிறீர்... பாரும்... ஒருநாளைக்கு பிள்ளை கண்ணீரோடை வந்துநிக்கப்போகுது....'

'நானென்ன செய்யிறது..... எனக்கும் பொறுப்புகள் இருக்கு... வேலையை விட்டுட்டு இருக்க ஏலுமே.... '

'ஓ... அப்பிடியெண்டால் சரி....'

அவன் நக்கலாகச் சொல்லிவிட்டு குளியலறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டான்.

பவித்திராவின் கண்கள் நீரால் நிரம்பின. சமையலறைக்குள் போய்

இரவுச்சாப்பாட்டுக்கான தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கினாள்.

வாசற்கதவு திறக்கும் சத்தம்... திரும்பிப் பார்த்தாள். கனிதான். அடக்கிவைத்திருந்த அழுகை கோபமாக மாறியது.

கனி கையில் ஒரு கடதாசிப் பெட்டியுடன் வந்தாள்.

'அப்பா வந்திட்டாரா....'

மிக இயல்பாக கேட்ட மகளை நெருப்பெரியும் கண்களுடன் பார்த்தாள்.

'ஏனம்மா இப்பிடிப் பாக்கிறியள்... இண்டைக்கு என்னநாள்... அப்பாவும் நீங்களும் திருமணம் செய்த நாளல்லோ..... உங்களுக்கு சேப்பிரைசா இருக்கட்டும் எண்டுதான் அப்பா வந்தபிறகு லேட்டா வாறன்... எங்க அப்பா....'

'இஞ்ச நிக்கிறன் கனி...'

'கெதியா ரெண்டுபெரும் வெளிக்கிட்டு வாங்கோ.... கேக் வெட்டவேணும்... ரெண்டு பேருக்கும் புதுஉடுப்பு இதுக்குள்ளை இருக்கு... இரவுச் சாப்பாட்டுக்கு ஓடர் சொல்லி-யிருக்கிறன்... வரும்... அம்மா நீங்கள் ஒண்டும் சமைக்கவேண்டாம்.....'

ஓர் இளவரசியைப்போல கனி கட்டளையிட்டுக்கொண்டிருந்தாள்.

பவித்திராவுக்கு தாங்கமுடியவில்லை. முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மிவிம்மி அழத்தொடங்கினாள். ✦

**வசந்தன்**

# பயணம்

யாருமறியாத பொழுதுகளில்
குடியமர்ந்த இடத்தை
பெயர்த்து கொண்டிருக்கிறேன்

எங்கோ கேட்கும் சிரிப்பொலி
எங்கோ கேட்கும் அழுகை
என்னுடலை
நரகமாக்குகிறது

தணிக்க முடியாத பசிக்கு
இரத்தநாளங்களை வெட்டி
உறிஞ்சும்பொழுதும்
நெகிழவில்லை மனம்

இருளிலிருந்து வெளிச்சத்திற்கும்
வெளிச்சத்திலிருந்து இருளிற்கும்
இடைவிடாது பயணம்


பிரிவின் காயங்களும் வலிகளும்
தனியப்போவதில்லை
பழிதீர்த்துகொள்ளட்டும் காலம்
இன்று
விலகிகொள்ளுங்கள்
நான் பாதை மறந்துவிடுவேன். ✦

## புஷ்பா கிறிஸ்ரி

கைதொழும் தேவர்கள்
பசியைப் போக்கும் பண்பான மனிதனாய்
ருசியை இழந்து ரசிக்கும் ஏழைக்கென்று
உதவிட ஓடிவரும் உன்னத தலைவனாய்
பதவியை விட்டுப் பிறர்க்குதவும் ஒருவனாய்
நேர்மை தவறாத நித்தியப் பிறவியாய்
கூர்மையான சிந்தனை கூட்டுச் சேர்ந்தவனாய்
வாய்மையுடன் என்றுமே வந்துதவும் நல்லவனாய்
தூய்மை மனத்துடன் துயர்துடைக்க விரைபவனாய்
வான்மழையாகி வந்து விவசாயிக்கு உதவுபவனாய்
தானம் வழங்கியே தரமுயர்ந்திடும் செல்வந்தனாய்
களங்ககமற்ற மனத்துடன் கருணை செய்பவனாய்
வளங்களைப் பெருக்கியே வரம்தரும் தெய்வமாய்
குறைகளை மறந்து குவலயம் காப்பவனாய்
நிறைவான வாழ்வால் நிறைந்த மனத்தினனாய்
வறியவர் துயர்துடைத்து வாஞ்சையுடன் வாழ்பவனாய்
இறைவனின் பணியில் ஏழைக்கும் உதவுபவனாய்
மதங்களைக் கடந்து மனிதத்தை மதிப்பவனாய்
இதயங்களை ஒன்றாக்கி இன்பம் காணபவனாய்
மானிடத்தின் ஏற்றத்தில் மகிழ்ச்சி கண்டிங்கு
தானிருக்கும் மனிதனின் தர்மசிந்தையை வணங்குவோம்
நல்லவர்கள் பலபேர்கள் நானிலத்தில் வாழ்ந்தாலும்
எல்லாரும் இங்குவந்து ஏழைக்கு உதவுவதில்லையே
சொல்லித் தானவரை செய்ய வைக்கவேண்டும்
வல்லவன் கருணை வார்த்தையால் செயலாற்றுவோமே

● சிறுகதை

ஃபாத்திமா, ஷார்ஜா



# பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்.....!

காலை ஆறு மணி. ஒரு கையில் டீ குடித்துக் கொண்டே மறுகையில் செய்தித்தாளைப்படித்து முடித்தார் சேதுராமன். காலியான டீ கிளாசை மனைவியிடம் கொடுத்துவிட்டு செல்போனைக் கையிலெடுத்து தோட்டத்து வாட்ச்மேனுக்கு போன் செய்தார்.

“சிங்காரம், தோட்டத்திலேயே இரு. எங்கேயும் போய்ராதே, பத்துமணிக்கு மரங்களையெல்லாம் வெட்றதுக்கு ஆளுங்க வராங்க. அதுக்கப்புறம் மர வியாபாரிங்க வந்து மரங்களையெல்லாம் எடுத்துட்டுப் போய்ருவாங்க. எல்லாம் முடிஞ்சவுடனே தோட்டத்த சுத்தம் பண்ணி வெச்சுடு” என்று சொல்லி முடித்தார்.

“எதுக்குங்கய்யா மரங்களை வெட்டி தோட்டத்த சுத்தப்படுத்தணும்? ஏன்யா இப்படி திடீர்னு ஒரு முடிவு?” என்று பவ்யமாகவும், பாவமாகவும் கேட்டார் சிங்காரம்.

“ஒன்னுமில்ல சிங்காரம், சீசன்லதான் காசு பாக்குறோம்,மத்த நாள்கள்ல ஒரு புண்ணியமுமில்ல பாரு இந்த மரங்களால. நமக்குத்தான் பராமரிப்புச் செலவும்கூட.

அதனாலதான் இந்த இடத்தில ஒரு காம்பளக்ஸ் இல்லைனா அபார்ட்மென்ட்ஸ் இந்த மாதிரி கட்டி விடுட்டோம்னா வருசம் முழுசும் காசு வந்துட்டே இருக்கும்.” என்று காரணம் சொல்லி முடித்தார் சேதுராமன்.

“ஐயாவுக்குத்தான் சூப்பர் மார்க்கெட், ஜவுளிக்கடை, ரைஸ்மில் அப்படினு இன்னும் நிறைய வருமானம் வரக்கூடிய தொழில் துறைனு இருக்குங்களே.... இந்த பச்சை மரங்களை ஏன்யா வெட்டி காசு பாக்கணும்னு ஆசைப்பட்றீங்க... எல்லா

மரத்திலேயும் பறவைங்களும், சின்னச்சின்ன குருவிகளும் கூடு கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிச்சு வாழுதுங்க. மரங்கள வெட்டும்போது எல்லாமே சிதஞ்சு போகுமுங்க...."

பேசிக் கொண்டே போன சிங்காரத்திடம்" இதப்பாரு, இப்படிலாம் ஈவு இரக்கம் பார்த்தோம்னா நாம எப்படி வாழறது? காசு மேல காசு சேந்தா நம்ம வம்சம் கஷ்டப்படாம இருக்கும் புரிஞ்சுதா? நான் என்ன கட்டினாலும் வாட்ச்மேன் நீதான். சொல்ற வேலயச் செய்." கட்டளையிட்டுவிட்டு போனைக் கட் பண்ணினார்.

குளித்துவிட்டு தோட்டத்திற்குப் போக தயாராகும்போது செல்போன் ஒலித்தது. சிங்காரமோ? சிந்தனையோடு எடுத்தவருக்கு, மகளின் எண்ணைக்கண்டதும் சந்தோஷத்தோடு ஆன் செய்து "என்னடாம்மா"என்றார்.

"அப்பா"... என்ற மகளின் அழுகுரல் கேட்கவே ஆடிப் போய்விட்டார் சேதுராமன். "என்னம்மா? என்னாச்சு? அழாம விசயத்த சொல்லுமா" என்றவரிடம், "அப்பா,உங்க மருமகன் பிசினசுக்காக வீட்டை அடமானம் வச்சு பேங்குல கடன் வாங்கியிருக்கார். பிசினஸ் இப்போ டவுனா இருக்கறதால பேங்கிற்கு பணம் கட்டலியாம். அவங்கள்லாம் வந்து வீட்டை சீல் வெச்சுட்டு எங்கள வெளில அனுப்பிட்டாங்கப்பா. இடையில உங்களுக்குக்கூட போன் பண்ண விடல." ஒரு வழியாகத் தேம்பிக் கொண்டே சொல்லி முடித்தாள் மகள் அருணா.

கூட்டையிழந்த பறவையின் அலறலை மகளின் அழுகையில் உணர்ந்தார் சேது. "போனை மாப்பிள்ளையிடம் கொடுமா" என்றார். "என்ன தம்பி நீங்க? எனக்கிட்ட ஒரு வார்த்த சொல்லியிருக்கக் கூடாதா? பிசினசுக்காகத்தானே வாங்கினீங்க? ஒன்னும் பிரச்சினையில்லை. பேங்க் டீடெய்ல்சை அனுப்புங்க. நான் பணம் அனுப்பிட்றேன். அவங்களே வந்து சாவி கொடுத்துருவாங்க. வீட்டில இருங்க. கிளம்பிட்டே இருக்கேன். கொஞ்ச நேரத்தில அங்கே வந்துருவேன்" என்று சொல்லிவிட்டு காரில் ஏறினார்.

ஏறியதும் சிங்காரத்தைத் தொடர்பு கொண்டார்." சிங்காரம், மரம் வெட்ட ஆள் யாரும் வரமாட்டாங்க. அவங்கள வர வேணாம்னு சொல்லி மெசேஜ் அனுப்பிட்டேன்.

அந்தப் பறவைகளுக்கு தானியமும், தண்ணியும் நம்ம தோட்டத்திலேயே கிடைக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணிரு. தேவப்பட்ற பணத்த கொடுத்துவிட்றேன் சரியா?" என்று முதலாளி சொல்லக் கேட்டதும், அந்த நேரத்தில் எழுந்த பறைகளின் ஒலி நன்றி உரைப்பது போல் தோன்றியது சிங்காரத்திற்கு.

மகளின் வீட்டுக்குள் நுழைந்தவரிடம் மகளும், பேரக்குழந்தைகளும் ஓடி வருவதைப் பார்த்து இரண்டு கைகளையும் நீட்டி அணைத்துக் கொண்டார், ஒரு பறவைத் தன் குஞ்சுகளை சிறகுகளால் அணைத்துக் கொள்வதைப்போல்!

நன்றி : *Muduvai Hidayath*



● கட்டுரை

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# ஊருக்குப் பெருமை சேர்த்த நமச்சிவாயப் புலவர்

சங்க காலம் முதல் தோன்றிய தமிழ் நூல்கள் பல்லாயிரக் கணக்கானவையாகும். பல்வேறு துறைகள் சார்ந்தவையான அத்தனை நூல்களும் இன்றிருந்திருந்தால் நம் தமிழ் எவ்வளவு செழுமையுடன் இருந்திருக்கும்! ஆனால் அந்தப் பேறை நாம் பெறவில்லை. அந்தப் பொக்கிஷத்தில் தொண்ணூறு வீதமானவற்றைத் தொலைத்துவிட்டு அவை பற்றியோ அவற்றை ஆக்கியோர் குறித்தோ எதுவுமே தெரியாது நிற்கின்றோம். இது பழங்கால ஆக்கங்களுக்கு மட்டும் நேர்ந்த கதியல்ல. நமக்குச் சற்று முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டவற்றுக்கும் இதுதான் நடந்திருக்கிறது. இனிமேலாவது இவ்வாறு நடக்காது பாதுகாப்பது எமது கடமை.

ஏமக்கு முன் வாழ்ந்த அறிஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்கள் செய்த பெருந் தொண்டுகளையும எதிர் கால சந்ததியினர் அறிந்துகொள்ளக்கூடியதாகப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டியது எமது கடமையாகும். அந்த வகையில் ஒரு தமிழறிஞர் குறித்த சில விபரக் குறிப்புகளை இங்கு தருகிறோம்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் வளம் நிறைந்த கிராமங்களுள் ஒன்றாக ஆவரங்கால் திகழ்கிறது. புத்தூரின் அருகில் அமைந்துள்ளது இக்கிராமம். பல நல்வறிஞர்கள் இங்கு தோன்றி அரும்பெருந்

தொண்டுகள் ஆற்றியுள்ளனர். இவ்வாறு தமிழ்ப் பணி புரிந்து ஆவரங்காலுக்குப் பெருமை சேர்த்தவர்களுள் ஒருவர் நமச்சிவாயப் புலவர். இவரை ஆவரங்கால் நமச்சிவாயப்புலவர் என்றே அனைவரும் அழைப்பர். ஆவரங்காலுக்கு தன் தமிழறிவால் இவ்வாறு புகழ் சேர்த்தவர் நமச்சிவாயப்புலவர்.

ஆவரங்காலில் வாழ்ந்த இரகுநாத முதலியாரின் பேரன் சுப்பிரமணியத்திற்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் இரண்டாமவரே நமச்சிவாயம். மூத்தவர் அம்பலவாணபிள்ளை. இளையவர் செல்லையா.. நமச்சிவாயப்புலவரின் பிறந்த ஆண்டோ தாயாரின் பெயரோ சரியாகத் தெரியவில்லை. வித்துவான் கணேசையர் தான் எழுதிய "ஈழநாட்டு தமிழ் புலவர் சரித்திர"த்தில் "இற்றைக்கு ஏறக்குறைய எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே ஆவரங்கால் என்னுமூரிலே சுப்பிரமணியபிள்ளைக்குப் புதல்வராகப் பிறந்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார். 1939ல் வெளியிடப்பட்ட இந்நூல் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே எழுத ஆரம்பிக்கப் பட்டதாக அந்த நூலிலேயே குறிப்பிடப்படுள்ளது. இதனால் புலவர் பிறந்த வருடம் 1849இற்கும் 1854இற்கும் இடைப்பட்ட ஒன்று எனக் கொள்வதே பொருத்தமாகும் என அ.கி.த.கிருஷ்ணராசா அவர்கள் "ஆவரங்கால் நமச்சிவாயப்புலவர் ஓர் அறிமுகம்" என்னும் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

அவர் தனது அதே கட்டுரையில் புலவர் மறைந்த வருடம் குறித்தும் ஆராய்ந்துள்ளார். ஈழநாட்டு தமிழ் புலவர் சரித்திரத்தின் முகவுரையில் அதன் ஆசிரியர் கணேசையர் அவர்கள் "இந்நூலின்கண் வரும் சரித வைப்புமுறை, அவர்கள் இறந்த காலத்தின் முறையே முறையாகப் பெரிதுங்கொண்டு வைக்கப்பட்டுள்ளது" என எழுதியுள்ளார். நமச்சிவாயப்புலவரின் சரிதம் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

வேன்மயில்வாகனப்புலவர் (1865--1912)

நமச்சிவாயப்புலவர்

வேலணை கந்தப்பிள்ளை (1840-1913)

எனவே நமச்சிவாயப்புலவர் தேகவியோகமடைந்த ஆண்டு 1912 ஆகவோ

அல்லது 1913 ஆகவோ இருக்கலாம் என திரு. கிருஷ்ணராசா அவர்கள் அபிப்பிராயப்படுகிறார். அத்துடன் 1918ல் வெளிவந்த "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்னும் நூலிலே புலவரும் அவரது சகோதரர் செல்லையா அவர்களும் பரகதி அடைந்துவிட்டதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதால் தனது அபிப்பிராயம் சரியானதாக இருக்கு என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நமச்சிவாயம் அவர்கள் அக்காலத்தின் கல்விமுறைப்படி தமிழையும் சைவசித்தாந்தசாத்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். ஆசிரியர் தன்னிடம் கல்வி

பயில வரும் மாணவர்களுக்குத் தனது வீட்டிலேயே வைத்து கற்பிக்கும் முறையே அன்றைய காலத்தில் பின்பற்றப்பட்டது.

இவ்வாறே நீர்வேலி சிவசங்கர பண்டிதர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை ஆகியோரிடம் நமச்சிவாயம் கல்வி பயின்றார்.. கல்வி கற்ற புலவர் தான் கற்றதை மாணவர்களுக்குக் கற்பிக்க ஆரம்பித்தார். அவரது உறவினரான சுப்பிரமணியம் அருணாசலம் கனகசபை, சைவத்தமிழ் பாடசாலை ஒன்றை நடத்திவந்தார். அங்கு நமச்சிவாயம் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்ற ஆரம்பித்தார். புலவர் தன்னிடம் கல்வி கற்கவென வந்த மாணவர்களுக்கு தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஐயமறக் கற்பித்தார். அவரது மாணவர்கள் பிற்காலத்தில் சிறந்த தமிழறிஞர்களாக திகழ்ந்து தமிழை வளர்த்தார்கள். ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, அல்வாய் ஆரியதிராவிட பண்டிதர் ;வே.கணபதிப்பிள்ளைச் சோதிடர், சுதேச நாட்டிய பத்திராதிபர் ஆசுகவி வயாவிழான் க வேற்பிள்ளை முதலிய பலர் இவரது மாணவர்கள். கல்லடி வேலன் எனஅனைவராலும் அழைக்கப்படும் வேலுப்பிள்ளையின் பேரன் விஜயேந்திரன் தனது பேரனாரைப் பற்றி, “ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை” என்னும் நூலை எழுதியுள்ளார். அதில் “வேலுப்பிள்ளை ஆவரங்காலைச் சேர்ந்த பெரும்புலவர் நமச்சிவாயம் என்பாரிடத்தும் கல்வி கற்றார்” எனப் பதிவு செய்துள்ளார். அல்வாய் பண்டிதர் வே.. கணபதிப்பிள்ளை ஈழமண்டல சதகம் எனும் சதக இலக்கிய கர்த்தா. ஆவர். அவர் தனது நூலில் பின்வருமாறு நமச்சிவாயப்புலவரைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

நேயப் ;படவே லனைக்கொண்டு வாடியென் னீள்பல்லவி
தாயப் படமொழிந் தோன்புயல் கண்வளர் தங்கரியா
காயப் படவுய ராவரங் கானகர் காணமச்சி
வாயப் புலவனைப் பாராட்டு மீழநன் மண்டலமே

இதிலிருந்து புலவரின் பெருமையை நாம் அறிந்துகொள்ளலாம்.

தமிழ் இலக்கியம் அன்று முதல இன்று வரை ஒரே வகையானதாக இருந்ததில்லை. பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்கள் காலத்திற்குக் காலம் தமிழில் தோன்றியுள்ளன. புலவரின் காலத்தில் தம் வித்துவத்திறமையை செய்யுளில் வெளிப்படுத்துவதே சிறப்பாகக் கருதப்பட்டது. யமகம், சிலேடை, பிரகேளிகை, நாமாந்தரிதை என பலவகை அணி வகைகள் செய்யுள்களுள் புகுந்திருப்பதே சிலாகிக்கப்பட்டது. .நினைத்த மாத்திரத்தில் செய்யுள் இயற்றி “ புலவர்” எனப் பாராட்டப்பட்ட நமச்சிவாயம் அவர்கள் நாமாந்தரிதை போன்ற அணிகள் கொண்ட செய்யள்களை யாத்து புகழ் பெற்றார். இவர் இசைஞானம் கொண்டவராகவும் இருந்தார். அதனால் பல கீர்த்தனைகளையும்

பாடினார். சுப்பிரமணியசுவாமி மீது மிகுந்த பக்தி கொண்ட இவர், அவர் மேலும் கீர்த்தனைகள் பாடினார். ஆனால் இவற்றை எவரும் பாதுகாக்காதது எமது துூரதிர்ஷ்டமே. கல்லடி வேலுப் பிள்ளையின் மகன் சாரங்கபாணி அவர்கள் புலவரின் கீர்த்தனைகளைத் தொகுத்து வெளியிட்டதாக குறிப்புகள் உள்ளன. இத்தகு நூல்களைத் தேடி எடுக்கக்கூடியோர் அவற்றை நூலகம் போன்ற இணையத்தளங்களில் பதிவேற்ற உதவ வேண்டும்.

ஆறுமுகநாவலர் பெருமான் மேல் புலவர் பெரும் பக்தி கொண்டிருந்தார். நாவலர் பெருமானும் “ஆவரங்கால் தம்பி” என இவர் மேல் அன்பு பாராட்டி வந்தார். நாவலர் அவர்கள் கண்டனங்கள் பலவற்றை எழுதியது நாமறிந்ததே.. அவற்றை மறுத்துப் பலர் கண்டனங்களை; எழுதினர். . அந்த மறுப்புகளுக்குப் பதில்களை புலவரும் எழுதினார். இவ்வாறு எழுதப்பட்டவை பரிகண்டனம் எனப்பட்டன. இவற்றுள் நல்லூர கந்தசுவாமி கோவில் தொடர்பானவற்றைத் தொகுத்து “வெற்றி வேலாயுதம்” என்னும் பெயரில் ;அவர் வெளியிட்டார்.

அவரது பணிகள் மங்கிமறைய நாம் விட்டுவிடக் கூடாது. புலவர் தம் தமிழ்பணியால் ஆவரங்காலுக்குப் பெருமை சேர்த்தவர். அத்தகையோர் பற்றிய விபரங்களையும் அவர்களது ஆக்கங்களையும் திரட்டி பாதுகாக்கும் பணி எம் இளைய சமுதாயத்தைச் சார்ந்ததாகும் ✦

**கோ.டோன்குமார், திருவலம்**

# ஹைக்கூ

ஏழை சுவற்றில்
எண்ணற்ற கோடுகள்
இந்தியாவின் கைரேகை

❒

கருக்கலைப்பில் நடக்கிறது
முந்நூறு திருமணம்
பெற்றோருக்காக

❒

பால்காரர்கள்
பணக்காரர் ஆகிறார்கள்
நீரால்...!!

❒

ஏழை வீட்டில்
உடைந்து விட்டது
இந்தியாவின் முதுகெலும்பு

❒


கிழிந்த இரவிக்கை
மூடிக்கொண்ட கண்கள்
மனிதநேயம் ✦

# பனிக்களம்

சந்திரா மனோகரன்

டிசம்பர் மாதக் கடுங்குளிரில் பரிதி
துயக்கத்தில் உறைந்து கிடக்கிறது
அடர்த்தியான கம்பளி  ஆடைகளுக்குள்
உடல்கள் அடங்கிக்கிடப்பதுபோல்.
படுக்கையிலும் பிடரியிலும் சமையற்கட்டிலும்
நடுங்கும் முனகல்களுக்கு சிறகு முளைக்கிறது
கருப்புநிறக்கையுறைகளை கொதிக்கும் பானம்
நனைத்துக் கறைப்படுத்துகிறது
பல்லாண்டுகளாக நெடிதுயர்ந்த
வெளிமரங்களைப் பனித்துகள்
போர்த்திப் பத்திரப்படுத்துகிறது
தரைவிரிப்பில் தலைகவிழ்ந்த அப்பிராணிக்கு
திறக்கும் கண்களைக் காணவில்லை
மோப்பத்திலும் வெப்பத்திலும் சுற்றித் திரிந்த
செல்லத்துக்கு மறைக்கப்பட்ட வெளிக்காட்சி
பனியின் வதைமுகாமிற்குள் நாள் சிதைக்கப்படுகிறது
மரித்த பறவைபோல் இருள் மெல்லக் கரைந்தாயிற்று
முனகும் மெல்லொளிக்காக உலகமே ஏங்குகிறது
கட்டவிழ்க்கப்பட்ட தணுப்பில் பூமி
குமுறிக் குமுறி எரியுண்ட சடலமாய்.
எதிரொலிகேளாத எல்லா வீதிகளையும்
வெண்பனி விசிறிக்கொண்டிருக்கிறது
உருவக்குத்தும் காற்று எங்கோ
தப்பித்திருக்கவேண்டும்
பால்போன்ற முகம் அந்தக் குழந்தைக்கு
திரைவிலகிய சன்னலில் வேறொளி இல்லை
வழிந்தோடும் அதன் மூச்சுக்காற்றில்
கொடும் பனி  எரிந்து உருகுமோ .......

## அலெக்ஸ்பரந்தாமன்



# ஈனஸ்வரக்குரல்கள்

ஒன்றிலும்
மனதொப்புதலின்றி
வாழ்வது எங்கனம்?

நசிந்தழுகிய கனிபோன்ற
இதயக்கூட்டின்மேல்
குந்தியிருக்கும்
அகாலநினைவுகள்...
இன்னமும்
அகலுவதாக இல்லை.

என்றோ
சுற்றிப்படர்ந்திருந்த
கொழுகொம்புகளும்
சுடுமணல் வெளிகளில்
தம் குருதிகளைக் கக்கிவிட்டு
சருகுகளாகிப் போயின.

போர்த்து மூடியிருக்கும்
கரிய இருளைப் போக்கிட
'ஆதவன்கள்' பலவிருந்தும்
அக்கறைப்பட எதுவுமில்லை.

தீரா ஏக்கத்துக்குள்
அழுநீர் வாழ்வுகொண்டு
அல்லலுறுவது
யாரிட்ட சபித்தலெனக் கூறுக?

ஒன்றிலும்
மனதொப்புதலில்லையாயினும்
இன்னமும்
வாழ்வதெங்கனமென்ற
ஈனஸ்வரக்குரல்கள்
சுடுமணல் வெளிகளெங்கும்
ஒலிக்கின்றன சோகமாக.



# தோஷம்

சில்வா பேச மாட்டான். நாள் கிழமை தெரியாமல்

கையினை நீட்டுவான்.

போட்ட காசை நன்றிக் கண்களோடு வாங்குவான்

தாள் காசென்றால் அவனுக்குப் பிடிக்காது. திருப்பி தந்து விட்டு தன்னிடம் உள்ள சில்லறை குற்றி நாணயத்தை உருட்டிக்காட்டுவான்.

இப்படியாக என் கண்களோடு ஒன்றிப்போன விசித்திரமான பிச்சைக்காரன். இன்னும் அவனிடம் ஒரு குணமொன்று இருந்தது. தன் தொழிலை முடித்த பின்,தான் வாங்கவேண்டிய

பொருட்களுக்காக ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கு முன்......

அவன்... தான் வாங்கிய நாணயக் குற்றிகளைதெரு பைப்பில் கழுவி

சுத்தப்படுத்துவது தான்.

"ஏன்.. தாள் ரூபாய் நோட்டுகளை வாங்குவதில்லை... நாணய குற்றிகளை

கழுவி கொடுக்க வேண்டும்??? "அவனிடம் பல நாட்களாக கேட்டும் அவன் பதிலை புன்னகையாகவே தந்தான். எனக்கு இதை அறிந்து விட அவா. நானும்

அவனை விடவில்லை. என் கரைச்சல் தாங்காமலோ அல்லது வேறு ஏதும்

காரணத்துக்காகவோ, ஒரு நாள் அவன் வாயினைத் திறந்தான்.

சுத்தமான தமிழில் பேசினான்.

"நீ" ...என்னுள் நானேஅவனிடம் கேட்க முந்திய..

"என் பேரு சில்வா... எனக்கு மொழி என்ன.. மதமென்ன.... நாடென்ன.... வீடென்ன... வானமும் மண்ணுந்தான்... " அவன் சிரித்தான். காவியேறிய அவனின்

நிமிர்ந்து நின்ற மேல் தாடை பற்கள் என்னை கிழறின.

"ஐசே.... நான் வாங்குவது பிச்சை. எனக்கு தொழில் செய்ய முடியும். நான்

அதை செய்ய மாட்டேன்.

பிறகு ஆசை வரும்.... பிறகு.... வேணாம் அப்பா

இந்த பொல்லாத ஆசைகள்..... " அவன் தன்னை

மறந்து கதைத்தான். .

"நான்.. வேண்டிறகாசு என் உழைப்பு அல்ல..

என் மேல நீங்க படும் இரக்கத்தின் கூலி. இத தண்ணியால கழுவி சுத்தம் செஞ்சா உங்க தோஷம்

போகும். பின் அது எனக்கு சொந்தமாகும். அது தான்

பைப்பில கழுவிற....ரூபாய கழுவ எழாது.. சரி தான.. "

அவன் தன்னை அடக்க முடியா சிரிப்பில்... நான்..

அவனின் ஆனந்த......குளிப்பில். ... இன்னும்...

✦

# பொன்னான காற்றே வா!

நவஜோதி ஜோகரட்னம்,
லண்டன்



கமழும் வீச்சுடன் எரியும் மயானத்தையா
காற்றே நீ விட்டுச் சென்றாய்?
காக்கைக் குஞ்சைப்போல் கரையாத
நாளில்லை இப்போ
வாழ்வின் எச்சமென்று எதை நான்
சொல்வது?
புதையுண்டு போகும் வயதான
எலும்புகளையா?
செத்துப் போகின்றதே மனசு
நீலநிற வெற்றுக் காந்தம் மட்டும் தெரிகிறது
என் கண்ணில்
இப்பூமிப்பந்தில் மூச்சுக்குள் விளையாடும்
காற்றே! இன்றோ
விமான ரீங்காரம் தடைப்பட்ட வானில்
பறவைகள் உச்சஸ்தாயில்
ரீங்காரம் செய்கின்றன தான்!
புதுமையாக வீதியில் இறங்கி
வாத்துக்களும் கூட புதுநடை
பயிலுகின்றனதான்
கப்பல் ஒடுங்கிய கடற்பரப்பில்
மீன்களும் துள்ளிக் குதித்து
விளையாடுதுதான்!
இயற்கையின் உயிர்ப்பில் என்
வீட்டுத் தோட்டத்தில் குருவிக் கூடுகளும்
ஊரும் பூச்சிகளும்; வரிசையாய் நின்று
என் மனதை நெகிழ்த்துகின்றனதான் காற்றே!
ஆனால்
உன்னையே உயிர்க்கொடையாய்
மலர்ந்திடும்
மானிடப்பிறவிகளைக்
கொடுமையாய்
ஏன் செயற்கைக் காற்றுக்குள் ஒடுக்கி
வைத்தாய்?
உயிர்களை அழிக்கின்ற
ஆயுதங்களை உருவாக்கும்
திமிர் பிடித்த மனிதருக்கு
நீ தரும் சின்னஞ்சிறு செய்தியா
இது?
கொரோனாவே! உன் புதிரான
கோலத்தை
நிழலாக மாற்றி எமக்கு
இரங்குவாயா?
உன் மங்கள மாற்றத்தை
புல்லாங்குழல் ஊதி
உலகெல்லாம் போற்றிடுவேன்!
பொன்னான காற்றே வா...

## சு.சா.அரவிந்தன்

அலுவலகமே தொழிலகமா
அலுவலகமே தொழிலகமெனில்
அலுவலகமே கோவிலாகுமா
அலுவலகம் கோவிலெனில்
அலுவலக புனிதமதுவே
அலுவலக தூய்மையா
அலுவலரின் தூய்மையா
புலன்களவை புனிதமற்று
புல்லறிவிலே புரள்வதினால்
அலுவலகம் தொழிலகமா

காதலினால் காதலுக்கே

காதலினால் கற்கண்டா
காதலினால் நலம்தானா
காதலினால் நிறைதானா
காதலினால் எதிர்மறையோ
காதலினால் காணவில்லை
காதலினால் சொல்வதுதான்
காதலுக்கே சரிதானா
காதலையே வைக்குமிடம்
காதலுக்கே முறையென்றால்
காதலினால் நலம்கூடும்
காதலையே கண்டபடி
காதலிக்க வைப்பதனால்
காதலுக்கே கயமையும்
காதலினால் நடக்கிறதே



## தக்ஷன், தஞ்சை

இசைதான் அது!
நரம்புகளை முறுக்கேற்றி
சங்கீதமிசைக்கும்
அற்புத வாத்தியம் அது...

விரல்களின் நடனங்களில்
மெய் மறக்கும்
இன்பச் சுரபி அது...

சப்த மாத்திரைகளின்
வேறுபட்ட ஒலிகளில்
உயிர்க்கூடசையும்
உன்மத்த வித்தை அது...


வாசிக்கத் தெரிந்தவருக்கு
விழி செருகி தலை சாயும்
அற்புத இசைதான் காமம் அது.

● சிறுகதை

பெ. வவிஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.

# மனிதம்

உலக நாடுகளையே உலுக்கிய காரானா வைரஸ் இந்தியாவிலும் வேகமாய் பரவியது. அனைத்து தகவல் தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள் ,தொலைகாட்சி ஊடகங்கள் எல்லாவற்றிலும் இதுவே தலைப்புச் செய்தியாக எதிரொலித்தது. எங்கும் ஒரே பரபரப்பு. மக்கள் மத்தியில் ஏதோ ஓர் இனம் புரியாத பயம் ஆட்கொண்டது.



அனைத்து கல்வி நிலையங்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்தது. அரசு, திருச்சியை சேர்த்த திவ்யா சென்னை கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாள். வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த நான்கு தோழிகளும் இவளுடன் ஹாஸ்டலில் தங்கி இருக்கிறார்கள். மறுநாள் கல்லூரியில் ஒப்படைக்க புராஜக்ட் ஒர்க் செய்துக் கொண்டிருத்தாள். அப்போது ஏய் திவ்யா,

நாளை காலேஜ் லீவ்டீ, நீ வேலையோட கிளம்பி உங்க ஊருக்கு போ என்று செல்போனில் அழைத்து தகவல் சொன்னாள் அவளது தோழி பிரியா. என்ன லீவா, ஏன் என்றாள் திவ்யா வாட்ஸ்சப்பை பாரு கொரானா வைரஸ் வேகமா பரவுவதால் பள்ளி, கல்லுரிகளுக்கு விடுமுறையாம் என்றாள். அப்படியா தேங்க்ஸ் பா, நாளை கிளம்புகிறேன் என்று சொன்னாள்.

புரோஜகட் ஒர்க் எல்லாம் எடுத்து வைத்து விட்டு தனது துணி மணிகளை யெல்லாம் பெட்டியில் எடுத்து அடுக்கி வைத்தாள். உடன் இருந்த தோழிகளும் நாளை அவரவர் ஊர்களுக்கு கிளம்ப தயாரானார்கள்.

காலையில் எழுந்து தனது செல்போனில் செய்தியை பார்த்தாள். பிறகு குளித்து விட்டு தன் தோழிகளுடன் உணவருந்த கேன்டீனுக்கு போனாள். அங்கு வழக்கத்தை விட அதிக கூட்டமாக இருந்தது. எல்லோரும் கொரானா வைரஸ் பற்றியும் தூரமாக போறவங்க எல்லாம் இப்பவே கிளம்ப ஆரம்பிச்சிட்டாங்க என பேசிக் கொண்டிருந்தனர். ஒருவழியாக காலை டிபன் சாப்பிட்ட பிறகு ஹாஸ்டலில் இருந்து. பெட்டியையும் பேக்கையும் எடுத்துக் கொண்டு தன் சொந்த ஊருக்குச் செல்ல விரைந்தாள்.

பேருந்து நிலையத்திலும் ஒரே பரபரப்பு. வழக்கத்தை விடவும் பேருந்துகள் குறைவாகவே இயங்கிக்கொண்டிருந்தது.

வருகிற பஸ் எல்லாம் மக்கள் கூட்டத்தால் வேகமாக நிரம்பி வழிந்தது. இவளால் பஸ்ஸில் ஏறவே முடியல. சரி அடுத்த பஸ்சுக்கு போவோம் என காத்திருந்தாள். அடுத்த பஸ் வெகு நேரம் கழித்து வந்தது, அது வரும்போதே கூட்டமாகவே இருந்தது. இப்படியாக எல்லா பேருந்தும் மனித தலைகளால் நிரம்பி வழிந்தது. மதிய உணவும் சாப்பிடாமல் பஸ் பிடிப்பதிலேயே காத்துக்கிடந்தாள். என்ன செய்வது என்றே தெரியவில்லை கடைசியாக 100 மீட்டருக்கு அப்பால் பேருந்து நின்று அங்கேயே மக்கள் ஏறி வருவதை கவனித்தாள். உடனே தானும் அங்குச் சென்று பேருந்தில் ஏறி சன்னல் ஓர இருக்கையை பிடித்து அமர்ந்துக்கொண்டு பெருமூச்சு விட்டாள்.

பஸ் மாலை 5 மணிக்கு சென்னையிலிருந்து திருச்சி நோக்கி புறப்பட்டது. தன்னுடைய அப்பாவிற்கு தகவல் சொல்ல செல்போனை எடுத்தாள். கிளம்புற அவசரத்தில் செல்போனுக்கு சார்ஜ் போட மறந்திருந்தாள்.

அவளுடைய ஊர் திருச்சிலிருந்து 5 கி.மீ அப்பால் இருக்கும் சிறிய கிராமம், அப்பா நான் கிளம்பிட்டேன் ராத்திரி 11 மணிக்கு திருச்சிக்கு வந்திடுவேன் என நினைக்கிறேன் என்றாள். சரிம்மா கிட்ட வந்ததும் போன் பண்ணுமா என்றார் அவர். சரிப்பா என்றாள். கண்டக்டரிடம் திருச்சிக்கு டிக்கெட் எடுத்து கொண்டு அதை

பத்திரப்படுத்தினாள்.

போனில் சார்ஜ் மிகவும் குறைவாக இருப்பதால் வாட்ஸ் ஆப், பேஸ்புக் எதையும் பார்க்காமல் அனைத்து வைத்தாள்.

சன்னலோரத்தில் குளிரிந்த காற்று அவளின் கண்களை மெல்ல வருடியது. பேருந்தின் குளுக்கல் தாலாட்டுவதாய் இருந்தது,பசி மயக்கத்தில் தூங்கிவிட்டாள்.

பேருந்து விழுப்புரம் ஒரு ஒட்டல் அருகில் நின்றது. எல்லோரும் இறங்கி டீ,காபி சாப்பிட சென்றனர். இவளும் இறங்கி தண்ணீர் பாட்டில் ஒன்றும்,பிஸ்கட் பாக்கெட் ஒன்றும் வாங்கிக் கொண்டாள். தண்ணிரைக்குடித்து முகத்தையும் கழுவிக்கொண்டு பேருந்தில் ஏறினாள்.

அவளுக்கு அருகில் ஒரு பாட்டி திருச்சிக்கு போக இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் என்றார். இன்னும் 3 மணி நேரம் ஆகும் என்றாள்.

பேருந்தில் அனைத்து பயணிகளும் ஏறிக் கொண்ட பிறகு வண்டி புறப்பட்டது. அப்பாவுக்கு கிட்டபோய் போன் செய்வோம் என்று நினைத்துக் கொண்டே மீண்டும் தூங்கிவிட்டாள். திருச்சிக்கு வண்டி இரவு 10:30 மணிக்கு வந்தடைந்தது.

திவ்யா விழித்தாள். ஐயயோ அப்பாவுக்கு போனே பண்ணலையே என நினைத்தாள். தன்னுடைய பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

கீழே இறங்கியதும் அவளுடைய அப்பாவிற்கு போன் செய்து வண்டி வழக்கதைக்காட்டிலும் முன்னதாகவே வந்து விட்டது எனவும் தூங்கியதால் தங்களுக்கு போன் செய்ய மறந்ததையும் கூறி சீக்கிரம் வாங்கப்பா என்றாள். சரிம்மா நீ அங்கேயே பத்திரமாக இரு இன்னும் 15 நிமிடத்தில் அங்கு வந்துவிடுவேன் என்றார்.

சற்று நேரத்தில் எல்லோரும் களைந்துவிட்டனர். யாருமற்ற இரவு தன்னந்தனியாக இவள் நின்றுக்கொண்டிருந்தாள். 4 சோடி கண்கள் இவளை உற்றுநோக்கியது. தன்னை யாரோ 4 பேர் பின்தொடர்வதை கவனித்து அங்கிருந்து புறப்பட எண்ணினாள். கொஞ்ச தொலைவில் ஒரு தள்ளுவண்டியை பார்த்து அங்கே அடைக்கலமானாள். அந்த தள்ளுவண்டியில் டிபன் கடைபோட்டு வியாபாரம் முடித்து வீட்டிக்கு போக தயாராக இருந்தார் ஒரு பெரியவர். தாத்தா எனக்கு ரொம்ப பசிக்குது சாப்பிட ஏதாவது இருக்குமா என்றாள் இவள். பசித்த வயிரோடும் களைத்த முகத்தோடும் இருக்கும் அந்த பெண்ணை பார்த்து தாத்தா 4 இட்டிலியும் கொஞ்சம் சட்டினியும் தான் இருக்கு. சாம்பார் இல்லம்மா என்றார். சரி பரவாயில்லை கொடுங்க தாத்தா என்றாள்.

ஒரு ஸ்டூல்லை எடுத்துப் போட்டு ஒரு தட்டில் இட்டிலியை வைத்து அவளிடம் கொடுத்தார்.

வயசு பொண்ணு இந்த நேரத்துல தனியா எங்கிருந்துமா வர என்றார். சென்னையிலிருந்து வரேன் தாத்தா கொரானா வைரஸ் பரவுதாம். காலேஜ் லீவ் விட்டுட்டாங்க. காலையில புறப்பட்டேன். இப்பதான் வந்து சேர்ந்தேன். ஊரே ஒரே பரபரப்பா இருக்கு தாத்தா என்றாள்.

அவள் தன்னை பின் தொடர்ந்தவர்களை திரும்பி பார்த்தாள். பேசிக் கொண்டிருப்பதை பார்த்து 4 பேரும் போய்விட்டனர். சாப்பிட்டு முடித்து கையை கழுவிக்கொண்டு மீண்டும் அமர்ந்தாள். எப்படிமா போவ என்றார். அப்பா வந்துக்கிட்டே இருக்கார் தாத்தா என்றாள். சரி அதுவரைக்கும் நானும் இங்கேயே இருக்கிறேன் என்றார்.

இவர்கள் பேசிக்கொண்டே இருக்கும்போது அவளுடைய அப்பா வந்துவிட்டார். அப்பா அப்பா நான் இங்கே இருக்கேன் என்றாள். தன் மகளை பார்த்ததும் அப்பாவிற்கு உயிர் வந்தது.

அப்பா ரொம்ப பசியா இருந்தது. அதான் இங்க சாப்பிட்டேன் என்றாள். அப்படியாமா எனச் சொல்லிக் கொண்டே பாக்கெட்டில் கையை வீட்டு பணத்தை தேடிக்கொண்டே எவ்வளவுப்பா என கேட்டார். என்னது எவ்வளவு அதான் இவ சாப்பிட்டதுக்கு எவ்வளவு தரனும் என்றார்.

இது வியாபாரத்திற்காக எடுத்து வச்சது இல்லப்பா. கடைய முடிச்சிட்டு நான் சாப்பிட வைத்திருந்தது. பணம் வேணாம்பா. களைச்ச முகத்தோட பசிக்குது தாத்தா. ஏதாவது இருந்தா கொடுன்னுச்சு. நான் சாப்பிட வச்சிருந்த தான் கொடுத்தேன் . பார்க்க என் பேத்தி மாதிரி இருந்தது என புன்சிரிப்புடன் சொன்னார் அந்த பெரியவர்.

திவ்யாவும்,அவளுடைய அப்பாவும் இந்த காலத்துல இப்படி ஒரு மனிரா என ஆச்சரியப்பட்டு போனார்கள்.

சாப்பாடும் கொடுத்து நான் வரும் வரைக்கும் பாதுகாப்பா இங்கேயே இருந்தீங்களே. உங்களைப் போன்றவர்களால் தான் மனிதம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது என கூறி கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு வீட்டிற்கு கிளம்பினார்கள்.

அன்றையிலிருந்து திவ்யாவும், அவளுடைய அப்பாவும் திருச்சி பேருந்து நிலையம் வரும்போதெல்லாம் அந்த தள்ளுவண்டி தாத்தாவிற்கு பழங்கள் வாங்கி கொடுத்துவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

✦

வெங்கடேசன்



# மரியாளும் முருகனும்

அப்படி ஓர் அவசரமான முடிவு எடுக்குற சந்தர்ப்பமும் சூழ்நிலையும் முருகனுக்கு வந்துடுச்சி .அவனும் யாரோட பேச்சையும் காதுல போட்டுக்காம யாருக்கும் பயப்படாம ,தன் குடும்பத்தை பத்தியும் எந்த யோசனையும் செய்யாம கண்ணு மூடித் தொறக்குற நேரம் மாறியான ஒரு நேரத்துல பெரிய காரியத்தை செஞ்சிட்டான் .

படிப்பும் அறிவும் என்னவோ முருகனுக்கு வாழ்க்கைய வாழுற அளவுக்கு இருந்தது. இருக்கிற கிராமத்துல நல்ல பேர்தான் சம்பாதிச்சி வெச்சிருந்தான் அந்த இருபத்தேழு வயசுலயும்.

ஊர்ல எல்லாருக்குமே அதிர்ச்சியாதான் இருந்துச்சி இந்த விசயம் கேள்விப்பட்டதும் ,என்ன பன்றது விதின்னு ஒன்னு இருக்குல்ல அப்டினு நெறய பேர் பெருசு பன்னல இத. இருந்தாலும் சில கட்சில எச்சி சோறு திண்ணுட்டு கொடி தூக்குற ஆளுங்க ஊர்ல இருந்தாங்க, அவங்கதான் இத சாதிப்பிரச்சனையா மாத்தி ஊர ரெண்டாக்கி குளிர்காய காத்தினு இருக்கிறாங்க.

முருகா நாம செஞ்சது தப்பாடா? என தோளை மெல்லமாய்த் தொட்டுக் கேட்டாள் மரியாள் .

நாம பண்ண தப்புலயும் ஒரு நல்லது நடந்திருக்குடி என்னனு சொல்லவா? என்ன நல்லது சொல்லு!

அதுவா நாம இரண்டு மதத்துக்கு இல்ல கல்யாணம் கட்டி வெச்சிருக்கோம் !. மௌனச்சிரிப்பில் சொல்லி முடித்தான் . மரியாள் ஓஹோ அப்ப்டியா !! பதில் புன்னகைப் பூத்தாள். முருகனின் அலைபேசி அலர்ந்தது.

டேய் முருகா ! ரிஜிஸ்டர் ஆபிஸ்ல எவ்வளவோ கேட்டுப்பாத்தாசி சர்டிபிகேட் லேட்டாதான் வருமாம் ,கொஞ்ச நாள் ஆகுமாம் ! என்னடா பன்றது ?

இட்ஸ் ஓகேடா பரவாயில்ல எனக்காக நீ இவ்ளோ கஷ்டப்பட்டதே போதும்டா நான் அப்ரம் கூட போய் வாங்கிக்கிறேன் நீ வந்துடு பேசிக்லாம்.

முருகா எதாச்சும் வேணும்னா பானு கிட்ட கேளுடா முகம்கோணாம செய்வா நல்ல கேரக்டர்டா சரியா ! நான் வரேன் வை. சொல்லி முடித்தான் அன்பு.

முருகனோட தோழன் அன்பு தான் இவனுக்கு எல்லாம் ஏற்பாட்டையும் செஞ்சி குடுத்தான் . இப்போ யாருக்குமே தெரியாம ஒசூர் தேன்கனிக்கோட்டைக்கு பக்கத்துல ஒரு கிராமத்துல கல்யாணம் பன்னிகிட்டு இருக்குற தன்னோட தோழி வீட்டுல தங்க வெச்சிருக்கான் .

பானுவுக்கு ரெண்டு கொழந்த இருக்கு அதனால வீடு கொஞ்சம் சத்தம் போட்டபடிதான் இருந்துச்சி .

முருகனுக்கும் மரியாளுக்கும் தனியா பேசிக் கொள்ள ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. மரியாள் களைப்பில் உறங்கி விட முருகன் ஓய்வாக வெளியே ஹாலுக்கு வந்தான் .

பானுவின் குழந்தைகள் நான்கைந்து பொம்மைகளை வைத்து விளைடாடிக் கொண்டிருந்தன.அதைப் பார்த்தவுடன் முருகன் அசையாமல் நின்றான் . அவனை இருபது ஆண்டுகளுக்கு முன் அழைத்துச் சென்றது அந்த பொம்மைகள் .

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ..

அமுதா ! எப்படி வந்த? ஊர்ல எல்லாரும் நல்லா இருக்காங்ளா? வா ஒரு வாய் சாப்டுட்டு போவ தோழியைப் பார்த்த சந்தோஷம் தேவிக்கு இனிமையாயிருந்தது.

மாதம் ஒருமுறையாவது அமுதா வேலூரிலிருந்து குடியாத்தம் போற வழியில இருக்குற தன்னுடைய அக்கா சுஜாதா வீட்டுக்கு வருவது வழக்கமாயிருந்தது. அமுதாவின் சேலையைப் பிடித்தபடி உடன் வந்து விடுவான் மகன் முருகன் .

முருகனுக்கு எவ்வளவு ஆசையென அவனின் பெரியம்மா மனம் உருகுவாள் . அமுதாவும் அக்காவும் தேவியும் பேசிக் கொள்வது ஒரு பக்கம் இருக்க முருகன் வந்ததை காற்று தானாகவே போய் பக்கத்து வீட்டு பிள்ளைகளின் காதுகளுக்கு கடத்தி விடும்.

அந்த நட்புக் கூட்டத்தில் ஒருத்திதான் மரியாள் . எல்லாரும் அவங்கவங்க வீட்ல இருந்து விளையாட பொம்மை கொண்டு வருவாங்க மரியாளும் தன் வீட்டில் பழையதாய் கிடந்த மேரியம்மை பொம்மையை எடுத்து வந்தாள் .

எல்லாரும் சிரித்தனர் மேரியம்மை பொம்மையின் மூக்கு நசுங்கியிருந்ததைப் பார்த்து , முருகன் மட்டும் சிரிக்காமல் மரியாளை ஆதரவாய் ஏறிட்டான்.

முருகன் தன்னோட பையிலிருந்த ஒரு பொம்மையைக் கொண்டு வந்திருந்தான் . எல்லாரும் அவன் கையைபிடித்து பொம்மையைப் பார்க்க ஆசைப்பட்டனர். அது போன வாரம் திருவிழாவில் வாங்குன எலக்ட்ரிக் லைட் எரியும் முருகன் பொம்மை ஆனால் அதிகமாய் உபயோகித்ததில் பேட்டரி தீர்ந்து லைட் எரியாமலும் முருகனின் வேல் சற்று உடைந்தும் இருந்தது.

அந்த சிறுவர் கூட்டத்தில் கமலன்னு ஒரு பையன் கேட்டான் ! முருகா நீங்க வெச்சிருக்கிற ரெண்டு பொம்மையுமே சாமிதானே ! ஆமா என்ன இப்போ அதுக்கு ?

ஒன்னு பன்னலாமா முருகனுக்கும் மரியாளுக்கும் கல்யாணம் பண்ணா எப்டிருக்கும். சூப்பர்ல. இந்த விளையாட்டு நல்லா இருக்கும்டா ! விளையாடலாமா

மரியாள் சிரித்த முகமாய் மௌனத்திற்குபின் ஒப்புக்கொண்டாள் . அந்த விளையாட்டில் ஆரம்பித்ததுதான் இந்த காதலும் . இந்த பொம்மைகள்தான் இப்பொது முருகனுக்கும் மரியாளுக்கும் காதல் சாமிகள் .

அவர்களோடு கூட காதலும் நேசமும் கிளையும் பழமுமாக வளர்ந்தது. இன்று

முருகனும் மரியாளும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். அந்த நினைவுகள் கண்முன் விளையாடின முருகன் யோசித்தபடி மரியாளைப் பார்த்தான் .ஒரு

புன்னகையுடன்.

முருகனின் ஊரில் அவன் சிக்குவானா எனக் காத்துக் கொண்டும் தேடிக்கொண்டும் இருந்தனர் மரியாளின் குடும்பத்தார்.

இரண்டு வாரத்திற்குப் பின் முருகன் மரியாளை அழைத்துக் கொண்டு தன் அண்ணனிடம் செல்ல திட்டம் போட்டிருந்தான் . அப்போது அவன் அண்ணன் சரவணன் செல்போனில் தொடர்பு கொண்டான் .

டேய் முருகா ஏண்டா இப்டி பண்ண அண்ணன் கிட்ட கூட சொல்ல தோணல சரி விடு எல்லாம் சரி ஆய்டும் நானும் உன் அண்ணியும் அம்மா அப்பா கிட்ட பேசப்போறொம் . அப்ரம் நீ வேளைக்கு சென்னைல ஒரு கம்பெனில அப்ளை பன்னிருந்தல்ல . ம்ம்ம்ம் ஆமாண்ணா! அவங்க ஏதோ வெரிபிகேஷன்க்கு வராங்களாம் வர சண்டே அதுக்குள்ள நீ வீட்டுக்கு வந்துடு .

இன்னொன்னு அம்மா அப்பா சரி சொன்ன அப்ரம் அந்த பொண்ண வீட்டுக்கு கூட்டினு வா இப்போ நீ மட்டும் வா ! இங்க உன்மேல எல்லாரும் கொஞ்சம் வருத்தமா இருக்காங்க சரியா! ஓகே நான் வெச்சிட்றேன்.

முருகனும் மரியாளும் இதைப் பற்றி ஆலோசித்தனர். அன்பு கூட அதைத் தான் சொன்னான் . முடிவு மரியாளை பானுவின் வீட்டிலேயே விட்டுவிட்டுப் போவதென்று.

அன்று இரவு முருகனும் மரியாளும் என்னப் பேசுவதென தெரியாமல் ஒருவர் மடியில் ஒருவர் உறங்கியபடி ஆறுதல் தேடிக் கொண்டனர். எல்லாம் சரி ஆகிடும்டி

நான் இருக்கேன்ல நீ இங்கயே இரு நான் போய்ட்டு பார்த்துட்டு அப்டியே வரும்போது சரிடிபிகேட் என்னாச்சினு கேட்டு.. செவ்வாய்கிழமை ராத்திரி வரேன் .

நெற்றிப்பொட்டில் பதித்த முத்தத்தால் தைரியப்படுத்தினான் முருகன் .

முருகனின் வீட்டில் அவனை புதுவிதமாய்ப் பார்த்தார்கள் .ஆறுதல் சொல்வதா இல்லை ஆத்திரம் காட்டுவதா என எல்லோருக்குமே குழப்பம். அம்மா அப்பா இருவருமே அவனிடம் பேசத் தவிர்த்தார்கள் .

சரவணா ! அவன் வந்த வேலைய முடிச்சிட்டு இங்க இருந்து கெளம்ப சொல்லு

திரும்ப திரும்ப அவன் பார்த்து எங்கள நாங்க வருத்திக்க முடியாது. எப்படி வாழ வேண்டியவன் அழுது முடித்தார் அப்பா!

முருகன் எதுவும் பேச இயலாத பொம்மையாய் நின்றான்.

முருகன் ஊருக்குள் வந்துவிட்டான் என்ற செய்தி மரியாளின் வீட்டாருக்குத் தெரிய வர முருகனை வெட்ட வகைத் தேடிக் கொண்டிருந்தார்கள் .

வெரிபிகேஷனும் முடிந்தது. ஆனால் மரியாளின் வாழ்க்கை இப்படி ஆகுமென

முருகன் நினைக்கவே இல்லை தன்னை நம்பி வந்த அவளுக்கு முருகனால் இப்படி நேர்ந்திருக்கக் கூடாது. முருகன் வேர்த்து வியர்த்து அந்த செல்போன் தொடர்பை துண்டிக்காமல் அப்படியே கதறி அழுதான் . மண்ணில் புரண்டு துடித்தான் .

*டேய் முருகா பானு வீட்ல. வீட்ல. என்னடா ஆச்சி சொல்லுடா பானு வீட்ல அவங்க இல்லாத நேரம் பார்த்து மரியாளொட.... மரியா .. மரியாளொட என்னடா ஆச்சி அவளுக்கு சொல்லுடா !!! மரியாவா அவங்க அண்ணன் வெட்டிக் கொன்னுட்டாண்டா!*

*நீயும் ஜாக்கிரதையா இருடா!!!*

முருகனை வீட்டிலிருந்த எல்லோருமே பிடித்தனர். ஆனால் முருகன் தேம்பித்

தேம்பி சின்னக் குழந்தையாய் பதறினான் . அலறினான். கதறினான் .

*உடனே அம்மா அமுதா ! டேய் சரவணா இங்க இருந்த இவனையும் அந்த படுபாவிங்க கொன்னுடுவாங்கடா எங்கயாச்சும் போய்ட சொல்லுடா. ! இவன் சாவ பாக்கவா இத்தன வருஷமா பெத்து வளர்த்தோம் . எனனால அத தாங்க முடியாதுடா !*

*சில மணி நேரத்தில் முருகன் அங்கிருந்து அனாதையைப் ப்பொல அவசரமாய் வெளியேற்றப்பட்டான் கொஞ்சம் பணமும் உடையும் கொடுத்து பேருந்தில் ஏற்றி விட்டான் சரவணன் .*

*மறு நாள் காலையில் தர்மபுரி பேருந்து நிலையத்தில் அன்பு அவனை அழைத்துச் சென்றான். அங்கே இருந்த தேநீர் கடையில் தொங்க விடப்படடிருந்தது. மரியாளின் இறப்புச் செய்தி ரூ இளம்பெண் கொடூரக் கொலை காரணம் என்ன ?*

*சில நாட்கள் கழித்து அதே பேருந்து நிலையத்தில் பானு வந்திருந்தாள் முருகனைப் பார்க்க . பானு கொடுத்த ஒரு ட்ராவல் பேக்கில் கைவிட்டு துழாவிப் பார்த்தான் முருகன்.*

*முருகனுக்கும் மேரியம்மைக்கும் திருமணமாகி இருபத்திரண்டு வருடங்கள் கடந்தது. கண்ணீர் ததும்ப கையில் ஏந்தினான் முருகன் பொம்மைகளை..*

✦

# புலம் பெயர் தொழிலாளர்கள்

சா.கா.பாரதி ராஜா

நாங்கள்
போட்ட சாலையில்
கடந்து செல்கிறோம்
அகதிகளாக!
கரியை உமிழ்ந்து செல்கிறது
அரசியல்வாதியின் வாகனம்!

எங்களின்
வியர்வையைக் குடித்த மண்
இன்று குடிக்கிறது
கண்ணீரோடு குருதியையும்!

மாடு மாதிரி
உழைத்ததால் என்னவோ
நடந்தே செல்கிறோம்
கால்நடையாக!

ஆயிரம் மைல்களை
கடந்து செல்லும்
எங்களின் தலையின்மேல்
வானில் பறக்கிறது விமானம்
வெளிநாட்டிற்கு உழைத்தவகளுக்காக!

ஆயிரம் கோடி
ஒதுக்கீடாம்
ஆயிரம் புண்கள்
நடக்கும் பாதங்களில்!

போராடும் கைகளை
அடக்கும் தடியே!
வரலாற்றைப் பார்!
அகிம்சையில் போராடிய
காந்தியின் தடியிடம்
இறுதியில் நீ தோற்றாய்!

தண்டவாளங்களில் ஓடுகிறது
மக்கள் தலைகளின் இரயில்!

அழைத்துச் செல்ல
எதிர்பார்த்த இரயில்
உடல்களை நசுக்கி
வெட்டி இழுத்துச் செல்கிறது
சில தூரம்!

மற்றவர்களுக்கு
இது ஊரடங்கு!
எங்களுக்கோ உயிரடங்கு!

இறுதியாக விண்ணப்பம்
எங்களின் உடல்களையாவது
சேர்த்து விடுங்கள்
சொந்த ஊரில்!

ஜமீல்

# காட்டிக் கொடுக்கும் எறும்புகள்

மாதுளம் சுளைப் பற்கள்
சொத்தையாகலாமெனும் பேரச்சத்தில்
பகிர்ந்தளித்தது போக
மீதமான இனிப்புகளை
ஒளித்து வைக்கிறாள் உம்மா
எப்புதரினிடை மறைத்து வைத்திடினும்
இருக்கும் இடமதன் வாசனை முகர்ந்து
எறும்புகள் காட்டிக் கொடுக்கும்
பெரு மகிழ்ச்சியில் எதுவுமே
அலட்டிடாது
அலாதியாக விளையாடுகின்றன
இனிப்பின் மீது
தீராப் பிரியம் கொண்ட குழந்தைகள்
எறும்புகள் வசிக்கும் வீடுகளில்
இனிப்புகளை ஒளித்து வைப்பதில்
அர்த்தமெதுவும் இல்லையென்பதனை
ஒரு போதும் உய்த்துணர்வதே இல்லை
நமது உம்மாக்கள்

# வானத்தை பறிகொடுத்த பறவை

உம்மா சிறுமியாக இருந்த போது
பட்டாம் பூச்சியென பறந்து திரிந்த
காலங்களை
நினைவு வல்லுகத்திலிருந்து
சிதறிய சில்லறை குற்றிகளென
பல தருணங்களில் கேட்டு
மகிழ்திருக்கிறேன்
உம்மாவின் ஆரண்யப் பராயத்தின்
கிழர்த்தலென்பது மிகவும்
அலாதியானதும்
எல்லையற்ற பரவசத்தையும்
உணர்த்தியது
ஆனால் எனது வானத்தை மட்டும்
வலுக் கட்டாயமாக
அறையில் பூட்டி வைத்து விட்டு
கதை கேட்கும் உம்மாவிடம்
பெரிதாக எதனைத்தான் பேசிவிட
முடியும்
என்னை திறந்து விடுங்களென்று
உரத்துச் சொல்வதை தவிர

# என் தேவதையின் நிறம் கருப்பு

நௌஷாத் கான்

● சிறுகதை

எல்லோரும் தேவதைகள் வெள்ளையாகத் தான் இருக்கும் என்று பொய் சொல்லி இருக்கிறார்கள் ஆனால் என் தேவைதை கருப்பா கலையா இருக்கும்.

ராஜேஸ்வரி என்கிற ராஜி,அவ தான் என்னுடைய தேவதை .கடவுள் எனக்கு கொடுத்த வரம்.

இவன் என்னடா பொண்டாட்டிக்கு இப்படி ஜால்ரா தட்டுறான்னு நினைக்காதீங்க.என் பிளாஷ்பேக்கை பத்தி சொல்றதுக்கு முன்னாடி என்னை பத்தி சொல்றேன் கேட்டுக்கோங்க.

நானும் உங்கள மாதிரி தாங்க ரொம்ப ஜாலியான ஆளு ,காலேஜ் படிக்கிறப்ப சைட் அடிக்கிறது , டூர் சுத்துறதுன்னு வாழ்க்கைய நல்லா என்ஜாய் பண்ணி இருக்கேன்.நம்மள மாதிரி பசங்க எங்க மனச பார்க்குறானுங்க .

ஒரு பொண்ணுக்கிட்ட நல்ல குணங்கள் இல்லைன்னாலும், கொஞ்சம் வெள்ளையா பர்ஸ்னாலிட்டியா இருந்தா போதும் அவளுங்க பின்னாடி நாய் மாதிரியே சுத்துவானுங்க .

அழகை பார்த்து ஏமாந்துப் போன எத்தனையோ பசங்கள ,நான் என் வாழ்க்கையில கண் கூடா பார்த்து இருக்கேன் .பொண்டாட்டிக்கு அடிமையாகி சாவி கொடுத்தா வேலை செய்யும் பொம்மை போலாக்கி வச்சு இருந்தாங்க (சில அழகான



பொண்ணுங்க ) ..

அழகான பொண்ணுங்க எல்லோரையும் நான் குறை சொல்லலை அதே நேரத்துல அழகான பொண்ணுக்கிட்ட பெண்மையை தாண்டி கொஞ்சம் அதிகளவுல அகங்காரமும் இருக்கத் தான் செய்யுது.

பெண்ணுரிமை வேறு ,திமிர் வேறு என்பதை பெண் வர்க்கமே புரிந்து கொள்ள வேண்டும் .வெள்ளையாக இருப்பவர்கள் தங்கள் அழகு நிலையில்லாதது என்பதை மறந்து ,அன்பை துறந்து திமிரில் ஆணவத்துடன் ஆடும் எத்தனையோ பெண்களை நான் கண் கூடாக பார்த்து இருக்கிறேன்.இப்படிபட்ட பெண்களிடம் மாட்டிக் கொண்டு அவதிப் படும் நண்பர்களை கண்டும் நான் திருந்த வில்லை .

கட்டுன்னா நல்லா சிவப்பா , வெள்ளையா இருக்கிற பொண்ண தான் கட்டணும்னு ஒத்த காலுல நின்னேன் ஆனா அப்பான்னா பயம் அதனாலே அம்மாக் கிட்ட மட்டும் சொல்லி வச்சேன்.

அம்மா படிப்பு முடியப் போகுது ,வேலையும் ரெடி ஆயிடிச்சு ,உங்களுக்கு எனக்கு கல்யாணம் பண்ணுற ஐடியா இருந்தா நல்லா செவ , செவன்னு இருக்கிற பொண்ணா பாருங்க என்றேன் .

எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று அம்மா செல்லமாக அதட்டி அனுப்பினாள் .

எப்படியோ டிகிரி ஆவரேஜ் மார்க்ல பாஸ் பண்ணிட்டேன் இன்னும் ஒரு மாசத்துல வேலையிலும் சேர்ந்திடுவேன்..

நாட்கள் கடந்தன..மாதங்கள் கடந்தன ...

அப்புறம் ???

சில வருடங்களுக்கு பிறகு...

அப்பா எனக்கு பெண் பார்க்கத் தொடங்கினார்.பார்க்கிற இடமெல்லாம் இது சரி இல்லை ,அது சரி இல்லை என்று பல பெண்களை நிராகரித்தார்.அவர் நிராகரித்த அனைத்து பெண்களும் நல்ல பர்ஸ்னாலிட்டியாக,ரொம்பவும் வெள்ளையாக இருந்தனர் ஆனால் அப்பா ஏன் அந்த பெண்களை நிராகரித்தார் என புரிய வில்லை.

கடைசியாக ஒரு பெண் வீட்டில் சம்பந்தம் பேசி நிச்சயித்து விட்டு வந்தார் ஆனால் கடைசி வரை பெண்ணையோ ,பெண்ணின் புகைப்படத்தையோ காண்பிக்கவே இல்லை .அப்பா என்றாலே சின்ன வயசிலிருந்தே பயம் அதனால் அப்பாவிடம் பெண் சம்பந்தமாக எதை பற்றியும் பேச மனம் வர வில்லை.

அந்த கல்யாண தேதியும் வந்தது..

அப்பா முகத்தில் எண்ணற்ற புன்னகை ,மணமேடையில் டென்ஷனுடன் அமர்ந்திருந்தேன் .எனக்கு வர்ற போகின்ற மனைவி எப்படி இருப்பாளோ என ஆவலும், எனக்கு பிடித்தாற் போல பெண் அழகாக இருக்க வேண்டும் என்ற வேண்டுதலும் மனதுக்குள் இருந்தது .

அப்போது தோழியர் படை சூழப் பட்டு சேலைக் கட்டி ,தலை நிறைய மல்லிகைப் பூ வைத்து காதில் ஜிமிக்கி, சிறிய ஸ்டிக்கர் பொட்டு வைத்து ஒரு பெண் நடந்து வந்தாள் ஆனால் அவளை பார்த்ததும் என் முகத்தில் கவலை தொற்றிக் கொண்டது பெண்ணின் உடை ,அலங்காரம் எல்லாமே எனக்கு பிடித்து இருந்தது ஆனால் அந்த பெண்ணை மட்டும் பிடிக்க வில்லை.

காரணம் ??

அந்த பெண் கருப்பு..

இவளா என் மனைவியாக வர்ற போகிறாள் என்று நினைக்கும் போதே மனம் பத பதைத்தது .

என்னால் எதுவுமே செய்ய முடியாத நிலை, அப்பாவுக்கு முன் அந்த மணப்பெண்ணை பிடிக்க வில்லையென்று வெளிப்படையாக சொல்லும் மன தைரியம் என்னிடம் இல்லை.

நான் நினைக்காதது அப்பா நினைத்தது போல அந்த திருமணம் நடந்தது.எல்லா சடங்குகளும் முடிந்து அந்த முதல் இரவும் வந்தது ,முதல் இரவு பற்றி எல்லோருக்கும் ஆயிரம் கனவுகள் இருக்கும்.எல்லா இளைஞர்களும் இந்த ஒரு இரவுக்காக தான் எத்தனை நாள் ஏங்கி இருப்பார்கள் ஆனால் என் கனவுகள் இப்போது கானலாய் போனது மட்டுமே இப்போது வலியோடு நெஞ்சில் குடி கொண்டிருந்தது .

கையில் பால் சொம்போடு அந்த பெண் வந்தாள் .சொம்பை மேஜையில் வைத்து விட்டு என் காலை தொட்டு வணங்கினாள் .

எனக்கு இதெல்லாம் பிடிக்காது என்றேன்.அவள் அடுத்த வார்த்தை பேசுவதற்குள்ளேயே எனக்கு களைப்பாக இருக்கு நான் தூங்க போறேன்னு சொல்லிட்டு படுத்து விட்டேன்..

அவளும் என்னை தொந்தரவு செய்யாமல் என்னருகே உள்ள படுக்கையில் கொஞ்சம் இடைவெளி விட்டு படுத்து கொண்டாள் .

பொழுது விடிந்தது கூட தெரியாமல் உறங்கி இருக்கிறேன் . அவள் ஏற்கனவே

படுக்கையிலிருந்து எழுந்திருந்தாள் ,அவள் சப்தம் கேட்டு உறக்கத்திலிருந்து விழித்திருந்தாலும் அவளிருப்பதால் அவளை காணாதது போல் கண்களை மூடிக் கொண்டேன் .

அப்போது அவள் என்னை பார்த்தாள் ,என் கண் மூடி இருந்ததை கண்டு விட்டு,சுவற்றின் நாலா பக்கமும் பார்த்தாள் ,பூட்டியிருந்த கதவுகளுக்குள் அறை இருந்தாலும் ,ஜன்னலுக்கும் கண் உண்டு என்பதை உணர்ந்தவளாய் ,ஜன்னலின் இடுக்குகளின் வழியே யாரும் தன்னை காணவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு தன்னுடைய குங்குமத்தை கொஞ்சம் கலைத்து கொண்டாள் , பிறகு சூடி இருந்த கலையாத பூவை கலைத்து கொண்டாள் . அப்புறம் உதட்டில் சரியாய் இருந்த உதட்டு சாயத்தை துணியை வைத்து அழித்தாள் அப்போது உறங்கி கொண்டிருப்பது போல் நடித்து கொண்டு இருந்த என் மேல் குங்குமத்தை ஆங்காங்கே பூசினாள் என் தலை முடியினுள் அவள் சூடியிருந்த மல்லிகை பூவை தூவினாள்,அது சரியாக என் முடியினுள் ஒட்டி கொண்டது சிறிது நேரத்திற்கு பிறகு ஜன்னல் வழியே அம்மா வருவதை கண்டு வேண்டுமென்றே அப்போது தான் குளிக்கச் சென்றாள் .அம்மா அவளை பார்த்து வெட்கப் புன்னகையிட்டாள்

சிறிது நேரத்திற்கு பிறகு என்னை பார்க்க வந்த அப்பா திருட்டு படவா என செல்லமாக திட்டினார்.

இப்ப தான் கண்ணா ரொம்ப சந்தோசமா இருக்கு, நீ எந்த குறையும் இல்லாம காலத்துக்கும் சந்தோசமா அந்த பொண்ணு கூட வாழணும் .

நான் கூட பயந்துட்டேன், உன் அம்மா தான் சொன்னா கருப்பா இருக்கிற பொண்ண நம்ம பையனுக்கு பிடிக்காதுங்க என்றாள் ஆனா அந்த பொண்ணோட குணம் தங்கம் டா, நான் வெளியூர் விஷயமா போனப்ப பி.பி வந்து மயங்கிட்டேன் யாருமே உதவி செய்ய வராதப்ப அந்த பொண்ணுதாண்டா ஆட்டோவுல கூட்டிட்டு போய் ஆஸ்பத்திரியில சேர்த்தாள் அது மட்டுமில்லாம சொந்த பொண்ணு மாதிரி ரெண்டு நாள் பக்கத்து இருந்து ஒரு தாயை போல பார்த்துக்கிட்டா , தெரியாத என்னையே சொந்த அப்பா போல பார்த்துகிட்ட பொண்ணுடா அவ ,டே கண்ணா அதனால தாண்டா அவ நிறத்தை பெருசா பார்க்காம உனக்கு கட்டி வச்சேன் .

அவ உன்னை வாழ்க்கை பூரா சந்தோசமா வச்சுப்பாடா , அந்த தங்கமான பொண்ணோட மனம் கோணாம நடந்துக்கோ ,இந்த கலரு எல்லாம் நம்ம கண்ணுக்கு தாண்டா கண்ணா ,மனசுக்கு இல்ல என்னையே பாரு அப்பா எவ்வளவு கருப்பா இருக்கேன் .அம்மாவை பாரு பௌணர்மி நிலா போல இருக்கா நான் அடிக்கடி அம்மாக்கிட்ட ஒண்ணு சொல்லுவேன் ,நான் உனக்கு பொருத்தமானவனா சாவித்ரி

என கேட்பேன்?

அவ சொல்லுவா உங்க நல்ல மனசு எத்தனை கோடி கொடுத்தாலும் இந்த உலகத்துலேயே கிடைக்காது ,உங்க கலரு என் தலைக்கு மேல இருக்கு என் கலரு உங்க காலுக்கு கீழே இருக்குன்னு பணிவா பாசமா சொல்லுவாடா .

வாழுறதுக்கு அழகு தேவையில்லை , சேர்ந்து வாழுற , ஒத்துப் போகிற அன்பு இருந்தா போதும் என்றார்.

இப்ப சொல்லுடா என் மருமகள் எப்படிடா என கேள்வி எழுப்பினார் ??

சொக்கத்தங்கம்ப்பா எனச் சொல்லி விட்டு என் அறையை நோக்கி சென்றேன் .

குளித்து முடித்து அப்போது தான் வந்தாள் .எனக்கு முதன் முதலாய் அவள் மங்களகரமாய் தெரிந்தாள் .அந்த நிமிடம் முதல் என் மனதில் இதுவரை இருந்த நிறம் பற்றிய அந்த கேடுகெட்ட மன அழுக்கு காணாமல் போயிருந்தது. இயற்கை சூரியனே காதலித்த என் மனைவி ராஜி தேவதையாய் காட்சி அளித்தாள் ,

அவளை முதன் முதலாய் மனக்கண் கொண்டு பார்த்தேன் ,நான் பார்த்த பார்வையில் காதல் மட்டுமே நிறைந்து இருந்தது,அவள் கரங்களை பற்றினேன்.

நீண்ட மௌனத்திற்கு பிறகு சாரி சொன்னேன் .

ஏன் சாரி கேட்குறீங்க என்றாள் ??

நேத்து அது மாதிரி நடந்ததுக்கு ..

நேத்து என்ன பண்ணீங்க ,களைப்பில் தூங்கிடீங்க?அவ்வளவு தானே..

இல்லை ராஜி என்னை நிஜமாவே மன்னிச்சிடு , நேத்து களைப்பெல்லாம் இல்ல ,நீ கருப்பா இருக்கேன்னு உன்னை பிடிக்காம கோவத்துல வேணும்னே படுத்திட்டேன் .உன் நல்ல குணம் எனக்கு தெரிஞ்சிடுச்சு சாரி என்றேன்..

இது போதும்ங்க என்றாள் என்னை அரவணைத்தப் படி..

சில வருடங்களுக்கு பிறகு...

எனக்கு கல்யாணமாகி இந்த வருசத்தோடு நாற்பது வருடம் முடிய போகுது.இதுவரைக்கும் என் பொண்டாட்டி என் கூட ஒரு சண்டை கூட போட்டது கிடையாது ஆனா நான் தான் அவகிட்ட விளையாடுறதுக்காக சின்ன ,சின்ன சண்டைகள் ,செல்ல குறும்புகள் செய்வேன் .என் செல்ல குறும்பு சண்டைகள் கூட காலையில் தொடங்கி இரவு கட்டிலில் போய் முடிந்து விடும் ..

எனக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்வாள் ராஜி .பார்க்கும் டிவி நாடகத் தொடரை கூட நான் பார்க்கும் கிரிக்கெட்டுக்காக விட்டு கொடுப்பாள். நான் பார்க்கும் சேனல்கள் அவளுக்கு பிடிக்க வில்லை என்றாலும் எனக்காக பார்ப்பாள் நான் சாப்பிடும் உணவு முதல் நான் உடுத்தும் உடை வரை எல்லாத்தையும் பார்த்து பார்த்து செய்வாள் என் ராஜி.

என் அப்பா அம்மாவை கூட அவங்க அப்பா ,அம்மாவை போல அன்பாக பார்த்து கொண்டாள். இப்படிப்பட்ட என் சொக்கத்தங்கம் ராஜிக்காக என் உயிரையும் கொடுப்பேன் ..

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதை என் ராஜி மூலம் அறிந்து கொண்டேன்.நான் இன்னொரு ஜென்மம் எடுப்பதாக இருந்தால் கூட என் ராஜிக்கு கணவனாக வேண்டும் இல்லையேல் அப்பிறவியே வேண்டாம்.என் வாழ்க்கை முழுக்க முழுக்க சந்தோசமாய் இருப்பதற்கு முக்கிய காரணம் என் ராஜி.

என் ராஜி இதுவரை அவளுக்கென்று எதையும் என்னிடம் எதிர்பார்த்ததில்லை. இப்படிப்பட்ட ராஜிக்காகவே இப்பிரபஞ்சத்தில் என் உயிர் ஒவ்வொரு நொடியும் துடித்து கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறது .

அவள் இல்லாத வாழ்க்கையை கனவில் கூட நினைத்து பார்க்க மனம் வருவதில்லை.

சலீம்-அனார்கலி

அம்பிகாவதி-அமராவதி

ரோமியோ -ஜூலியட்

ஷாஜஹான் -மும்தாஜ்

இவர்கள் காதலை விட எல்லாம் என் காதல் உயர்ந்தது என்று கர்வத்துடன் சொல்வேன்.ஏனெனில் இந்த உலகில் நான் வாழ்வதும் என் ராஜிக்காக தான் , வாழ போவதும் என் ராஜிக்காக தான் ...

பணம் ,பொருள் ,புகழ் ,அழகு இவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்ட மனச மட்டும் பார்த்த காதல் என்னுடையது..என் ராஜி என்னுடன் இருக்கும் வரை என் வாழ்வில் சந்தோசம் நிலைத்து இருக்கும் என்பது அசைக்க முடியாத உண்மை.என்னை பொறுத்த வரை வெள்ளை மனசு கொண்ட என் ராஜி என்றைக்குமே தேவதை தான் .

என் தேவதையின் நிறம் கருப்பு தான்..!!

காதலுடன், கண்ணன்.

ப.தனஞ்ஜெயன்



# கிரகணம்

எப்பதான் இந்த பஸ் வரும்னு தரியலை என்று பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தாள் மல்லிகா. அவளுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். ஒருத்தன் மூணாவது, ஒருத்தன் ஆறாவது படிக்கிறான். அவள் புருசன் இப்பொழுதெல்லாம் வீட்டுக்கு அடிக்கடி வருவதில்லை. ஏதாவது வேலையா எப்பொழுதும் வெளி-யில இருப்பான். மாசத்துக்கு நாலு நாள் வந்து தங்கிவிட்டுப் போவதோடு சரி. லாரி ஆபிசல வேலை அவனுக்கு. லாரி டிரைவர் கூட ஒத்தாசையா அனைத்து மாநிலத்திற்கும் செல்வான். வீட்டுக்கு வந்து தங்கியிருக்கிற நான்கு நாளும் நல்லா குடிப்பான். எடுத்து வந்த பணத்தில் இரண்டா-யிரம் அவனே காலிபன்னிட்டு மூவாயிரத்தைக் கொடுத்துவிட்டு அதிலிருந்தே ஒரு ஐநூறு கொடு

என்று வாங்கிக் கொண்டு சென்று விடுவான்.

இரண்டு மாசமா அவன் வீட்டுப் பக்கமே வராமல் போனது என்னமோ போல் இருந்தது மல்லிகாவிற்கு. வீட்டுக்கு வாடகை கொடுக்கனும். மெத்தை வீட்டின் தளத்தில் கீற்றினால் ஆன கொட்டகை வீடு தான் மல்லிகாவின் வீடு. அதற்கு மாச வாடகை ஆயிரம் ரூபாய், கரெண்ட பில் ஒரு இருநூறு ரூபாய். மொத்தத்தில் ஆயிரத்தி இருநூறு ரூபாய் இதுக்கே சரியாகப் போய்விடும். வளர்கின்ற பிள்ளைங்க வேற என யோசித்துக் கொண்டே நின்றிருந்தாள். அந்த நேரம் பார்த்து பஸ் ஒன்று வந்தது. அரை மணிநேரத்திற்கு ஒரு பஸ் வரும். அந்த ஊரிலிருந்து கிழக்குப் பக்கமாகப் போனால் பாண்டிச்சேரி, வடக்கு பக்கம் போனால் விழுப்புரம். வடக்கால் இருந்து ஒரு பஸ் வந்து நின்றது. பாண்டிக்கு போகிறவர்களெல்லாம் ஏறுங்க என்று கண்டெக்டர் கத்தினார்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள் மல்லிகா. அந்த அளவிற்கு கூட்டம் இல்லை. ஒரு பெண் மல்லிகைப் பூவை தலை நிறைய வைத்துகொண்டு கழுத்துல ஒரு சின்ன சணல் கயிறு சைசில தங்கச் சங்கிலி ஒன்னு போட்டிருந்தா. அதை வைச்ச கண்ணு வாங்காம பார்த்துக் கொண்டே இருந்தாள் மல்லிகா. கொஞ்சம் தூரத்து சீட்ல ஒரு கிழவர், ஜிப்மர் ஆஸ்பித்திரி போகனும், இந்திரா காந்தி சிலை ஒன்னு கொடுங்க என்று டிக்கட் எடுத்தார். ஒரு சிலரே பஸ்ஸில் அமர்ந்து இருந்தார்கள். கண்டெக்டர் இவளிடம் வந்த போது 'பாண்டி பஸ்டேன்டு ஒன்னு' என்று இரண்டு ஐந்து ரூபாய் வில்லைகளைக் கொடுத்து டிக்கட் வாங்கினாள். இடையில் நிறைய நிறுத்தங்களில் பஸ் நின்று நின்று போய்க் கொண்டே இருந்தது. பக்கத்திலிருந்த கிழவி ஒருவள் அப்படியே அரைப்பார்வையோடு தூங்கித் தூங்கி விழுந்தாள். வில்லியனூர் இறங்குங்க என்றார் கண்டெக்டர். திடுக்கிட்டு எழுந்தவள் திருதிருவென விழித்தாள். தூக்க கலக்கத்தில் ஒன்றும் புரியவில்லை. பஸ் புறப்பட்டது.

ஜன்னல் வழியாகப் பார்த்தாள். வானுயர்ந்த கட்டிடங்கள், நிறைய கடைகள். மக்கள் கூட்டம் கூட்டமாக செல்வதும் வருவதுமாக களையாக இருந்தது சாலை முழுவதும். அவளுக்கு எப்பொழுதும் நினைவுக்கு வரும் பல் மருத்துவமனை ஒன்று சட்டென்று வந்து நின்றது. ஜிப்மர் போகிறெவங்க எல்லாம் இறங்குக என்றார். இன்னும் கொஞ்சம் தொலைவில்தான் பஸ்டேன்டு என மனதிற்குள் நினைத்தாள். ஐந்து நிமிடத்தில் அவள் இறங்கும் இடம் வந்தது. பஸ்ஸில் இருந்து கீழே இறங்கினாள். கொஞ்சம் அருகிலேயே அவ புருசன் வேலை செய்கிற லாரி ஆபிஸ். நடந்து சென்று ஆபிஸை நெருங்கினாள். எக்கா எப்படி இருக்கிற என்று அங்கு வேலை செய்யும் ஆபிஸ் பையன் முருகன் கேட்டான். நல்ல இருக்கன்டா என்றாள்.

“எங்க மேனேஜர் இல்லையா” என்றாள்.

“தோ உள்ளதான் ஒக்காந்தினு இருக்கறாரு” என்றான்.

“மேனேஜர் சார் நம்ம மாயன் ஊட்டம்மா வந்துகிறாங்க” என்றான்.

“என்ன மல்லிகா” என்றார் மேனேஜர்

“ரெண்டு மாசமா அவரு வீட்டுக்கு வரவில்லை. வீட்டு வாடகை கொடுக்கனும் சார். ஏன் வரல்லைனு தெரிஞ்சுகினு போகலாம்னு வந்தேன் சார்” என்றாள்.

“ஒன்னும் இல்லைமா. இந்த வாட்டி பூனே போனாங்க. அங்கிருந்து வந்துட்டாங்க. திடீர்னு சென்னை துறைமுகத்தில ஒரு காண்ரெக்ட்ல வண்டி ஓடுது. நிக்காம ஓடுது. அடுத்த மாசம்தான் அது முடியும் வந்துவிடுவாங்கமா” என்றார்.

“சார் கொஞ்சம் அட்வான்சா ஒரு மூவாயிரம் கொடுங்க. அவரு வந்தா சம்பளத்தில புடிச்சிகினு மீதி கொடுத்தனுப்புங்க” என்றாள்.

“அவன் ஏற்கனவே நிறைய வாங்கி வச்சிருக்காம்மா. வேணும்னா ஒரு ஆயிரம் ரூபாய் தரேன். அதுக்கே ஓனர் ஏதாவது சொல்லுவாரு” என்றார்.

“சார் பாவம் சார் கொஞ்சம் கொடுத்தனுப்புங்க” என்றான் முருகன்.

“டேய் போய் டீ வாங்கினு வா” என்று அவனை அனுப்புவிட்டார் மேனேஜர் கதிரசேன்.

அப்படியே கண்கலங்கி நின்றாள். அவள் தேகம் வறண்டுபோய் வறுமையாக நின்றாள். “அழாத மல்லிகா இந்தா இதை வச்சிக்கோ” என அவள் கையைப் பிடித்து ஒரு ஐநூறு ரூபாய் தாள் ஒன்றைக் கொடுத்தார். அவளுக்கு ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் அவள் வாங்கிக் கொண்டாள். அதுக்குள்ளே “சார் இந்தாங்க டீ” என்றான் முருகன்.

அனைவரும் டீயைக் குடித்தார்கள்.

அட்வான்ஸ் கொடுக்கும் முன்பு நோட்டில் அவன் வாங்கி வைத்திருந்த கணக்கு அனைத்தையும் திருப்பித் திருப்பி காண்பித்தார். “சரிமா இந்தா ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ்” என்று நோட்டில் எழுதிக் கொண்டு கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு, “சார் நான் கௌம்பறேன்” என்றாள். “எப்ப வேண்டுமானலும் வா என்னால் ஆன உதவிகளை நான் செய்கிறேன்” என்றார் கதிரேசன்.

“அக்கா பாத்து போ அண்ணே வந்தா நான் சொல்றேன்” என்றான் முருகன்.

ஒரு டயரை தள்ளிக் கொண்டு பஞ்சர் ஒட்ட புறப்பட்டான்.

அங்கிருந்து அரை மனதுடன் புறப்பட்ட மல்லிகா வீடு வந்து சேர்ந்தாள்.

அவளுடைய வீட்டு ஓனர், "எங்கம்மா போன? மாச வாடகை இதோ அதோனு சொல்லி அடுத்த மாசமே வந்துபோச்சி" என்று திட்டினார்கள். உடனே இருங்கக்கா என்று வீட்டுக்குள் சென்று ஆயிரத்தை எடுத்து வந்து கொடுத்தாள்.

மறு நாள் விடிந்தது, ஒரு டிரெக்டர் வந்து நின்றது அவள் வீட்டு எதிரில். வழக்கமாக காலை நான்கு மணிக்கெல்லாம் வந்து அவளை அழைத்துக் கொண்டு சூளையில் கற்களை ஏற்றுவது வழக்கம். ஆனால் இன்னைக்கு கொஞ்சம் தாமதமாகி விட்டது. அவளுக்கு வேலை இருந்தால் ஒரு நடைக்கு நூறு ரூபாய் கிடைக்கும். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நடை ஏற்றுவாள். அந்தப் பணத்தை சீட்டு ஒன்று கட்டிவந்தாள். கசூறு போக மாதம் ஆயிரத்தி எட்டு நூறு அல்லது ரெண்டா-யிரம் வரும். மெல்ல அந்த சீட்டினை எடுத்து எப்படியாவது ஒரு சொந்த மண்ணை வாங்கிவிட வேண்டும் என்று நினைப்பாள். பாண்டிச்சேரியில மனை ரொம்ப விலை அதிகம், ஆனால் தமிழகத்தை ஒட்டியே அமைந்திருந்தது ஏம்பலம் கிராமம். அதற்குப் பக்கத்திலேயே அமைந்திருந்த நல்லாத்தூரில் ஒரு மனையை வாங்கிப் போடுவது என முடிவெடுத்து ஓடாய் உழைத்தாள்.

மணி ஒன்னே முக்கால் இருக்கும். யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. சின்ன தட்டியால ஆன கதவு. கதவைத் திறந்தாள் மல்லிகா. மாயன் நல்ல குடியில் நின்றான்.

"யோவ் மணி இன்னா ஆவுது, எப்படியா வந்த இந்த நேரத்தில்" என்றாள்.

"கடைசி பஸ் வந்தது அதில வந்திட்டேன்" என்றான், அந்த ஊருக்கு கடைசி பஸ் இரவு ஒன்றைக்கு வரும். அதோடு காலையில் தான்.

"மேனேஜர் சொன்னாரு நீ வந்து ஆயிரம் வாங்கினு போனாயாமே.."

இந்தா மீதினு ஒரு நாலாயிரம் கொடுத்தான்.

"யோவ் ஏன்யா இப்படி பணத்தையெல்லாம் குடியில அழிக்கிற... ரெண்டுமாசமா இதானா கொடுத்தாங்க" என்றாள்.

"அதெல்லாம் விடு ஏற்கனவே கொஞ்சம் அப்படி இப்படினு வாங்கியாச்சு"

என்றான்.

“நாம எப்படியாது ஒரு மண்ணை வாங்கி நம்ம புள்ளைங்கல அந்த மண்ணுல வாழ வைக்கனும்னு ஆசையா இருக்குது. நீ இன்னாடானா இப்படி பொறுப்பு இல்லாம இருக்கிறயேய்யா” என்றாள்.

“அப்படி இல்லை நீ போய் கதவை சாத்திக்கினு படுபோ, நான் இப்படி வெளியிலே படுத்துகிறேன்” என்று ஓரமாக கீற்று வீட்டுக்கு வெளியிலே இருந்த காலி இடத்தில் படுத்துக் கொண்டான்.

“யோவ் பசிக்கலையா” என்றாள்.

“எனக்கு வேணாம் நான் சாப்பிட்டுதான் வந்தேன்” என்றான்.

“யோவ் எனக்கு பசிக்குது வா” என்று உள்ளே அழைத்து கதவை கயிறு ஒன்றால் உட்புறமாகக் கட்டினாள்

காலை ஐந்து மணிக்கு கோழி கூவியது. சாமன்களை எல்லாம் கழுவி வைத்துவிட்டு தண்ணீர் பிடித்து வைத்தாள். கீழே ஹாரன் சப்தம் கேட்டது. “யோவ் ரெண்டு நட கல்லி ஏத்தனும். நான் பத்துமணிக்கு வந்துடறேன்யா, பசங்கள பாத்துக்கோ” என்றாள். ம்.. ம்... என்றான் மாயன் அசதியில்.

சூளைக்குப் போக வண்டி வந்து நிக்குது என்று பேசியவாறே அவசர அவசரமாகக் கிளம்பினாள். ஒரு லோடு கற்களை ஏற்றிக்கொண்டு டிரெக்டர் வந்து நின்றது பக்கத்து ஊரான நல்லாத்தூரில். எத்தனையோ வீடுகளுக்கு செங்கற்களை இறக்கி இருந்தாலும் இந்த முறை ஒரு மாதிரியாகவே இருந்தது அவளுக்கு. அன்று தான் கடகால் நாள்கொண்டு படைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது அவளுக்கு. எவ்வளவு இந்த மனை என்று விசாரித்தாள். அவர்கள் சொன்னதைக் கேட்டவுடன் சொந்த வீடு, சொந்த மனையெல்லாம் வெறும் கனவாகிப் போனது அவளுக்கு.

பேசிக்கொண்டே கற்களை இறக்கினாள். அவர்கள் இங்கு படுக்கை அறை, இங்கு பூசை அறை, இங்கு பாத்ரூம் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். டிரெக்டர் அடுத்த நடை அடித்துவர சூளையை நோக்கிச் சென்றது. அவள் வீதியெங்கும் இருபுறமும் உள்ள வீடுகளைப் பார்த்துக் கொண்டே அங்கிருந்த கம்பியின் மேல் தலை சாய்த்துக் கொண்டு ஒரு பெருமூச்சை இழுத்து விட்டாள். ஏதோ ஓர் உணர்வு அவளை இறுகப் பற்றிக் கொண்டது. அன்று வானம் ஒரே இருளாக இருந்தது. அன்று சூரிய கிரகணம் என்று பேசிக் கொண்டார்கள்.

✦

# ஈர நெஞ்சில் ஓர் விதை

வானம்பாடி (முஜா)

நீண்ட இடைவெளிக்குப் பின்
என் நிசப்தமான இரவு
உறங்க மறுக்கிறது இதயம்
எதையோ அசைபோட்டபடி....

பழக்கங்கள் அதிகமில்லை
ஆனாலும் உள்ளத்தில் இறங்கிவிட்டாள் ...

தூண்டில் போட்டிழுக்கும்
அழகுக் குவியலில்லை
இருந்தும்,
அவள் ஒப்பனைகளுக்கு
இணையற்றவள்...

இலைகளுக்குள்
மறையும் பிறைநிலாப் போல...
அழகின் உடை
அழகின்மையால்
களவாடப்பட்டது....

களைந்த தலையுடன்
கட்டாந்தரை தேவதை
வறுமைக் காதல் முத்தமிட்ட
ஈரம் காயாமல் ..

வயிற்று பசியுடன்
வாதம் செய்ய முடியாமல்...
யாசிக்கும் அவள் கரங்கள்
காற்றில் மிதந்தபடியே
கண் முன்னே விரிகிறது...

பசியும் ஏக்கமும்
கண்ணிலே மின்ன
உணர்வுகளை
உச்சரிக்கத் தெரியா
பிள்ளையின் கவித்துவம்
கண்ணீர் துளிகளுக்குள்
சந்தனதனமாய்..

ஊன்றிச் சென்றாள்
ஈரமான நெஞ்சில் ஓர் விதையை....

சில்லறை இட்ட சாக்கில்
நானும் கொஞ்சம்
வாங்கி வந்தேன்...
அவளது வறுமையில்
கொஞ்சத்தை...

# துளிப்பாக்கள்

**பெ. விஜயலட்சுமி**

மூடநம்பிக்கையை தள்ளுவோம்
பகுத்தறிவு தானே
அரியணை ஏறிக்கொள்ளும்!

❐

தென்னையின் உச்சிக்கீற்றில்
ஒய்யாரமாய்ஊஞ்சலாடியது
ஓர் ஒற்றைப் பறவை

❐

நின்ற இடத்திலிருந்து
ஒரு மயில் தூரம் பயணம்
காற்றில் மிதக்கும் பட்டம்

❐

ஆத்மார்த்தமாக பிரார்த்திக்கிறேன்
வணிகமாக்கினான் கோயிலை
பூசாரி

❐

பயணகளைப்பில் பறவைகள்
சற்றே இளைப்பாறுகிறது மரத்தில்
விசிறி விடுகிறது இலைகள்!

குற்ற உணர்வுகள்
மேலெழும்பி நிற்கிறது
குப்பையில் நெகிழிகள்!

❐

முன்னும் பின்னும் நகர்ந்து
காற்றில் சுருதி சேர்கிறது
குளிரூட்டும் சாதனம்!

❐

மனம் லேசாகி
உயரப் பறக்கிறது
வானில் பட்டம்!

❐

ஆங்காங்கே கிறுக்கல்கள்
மேலும் அழகாக்கின சுவற்றை
மகள் வரைந்த ஓவியம்!

# திரும்பிப் பார்க்கிறேன்.

கா.ந.கல்யாணசுந்தரம்

திரும்பிப் பார்க்கிறேன்
ஆரம்பப் பள்ளியின்
அரிச்சுவடிப் பக்கங்களை

திரும்பிப் பார்க்கிறேன்
கணித ஆசிரியரின்
விடை காணும் திறனை

திரும்பிப் பார்க்கிறேன்
கல்லூரி வாசல்களின்
இளமைத் துள்ளல்களை

திரும்பிப் பார்க்கிறேன்
அரும்பிய காதலின்
உணர்வுகளின் உன்னதத்தை

திரும்பிப் பார்க்கிறேன்
முதல் நேர்காணலின்
கேள்விக் கணைகளை

திரும்பிப் பார்க்கிறேன்
முதல் மாதத்து
ஊதிய வரவை

திரும்பிப் பார்க்கிறேன்
எனது திருமணநாளின்
நட்புசூழ் உலகை

திரும்பிப்பார்க்கிறேன்
இல்லறம் சுகித்த
இனிதான நாட்களை

திரும்பிப் பார்க்கிறேன்
அரவணைப்பில் மலர்ந்த
மழலைகளின் அன்பை

திரும்பிப் பார்க்கிறேன்
இன்று காணக்கிடைக்காத
மனிதநேயத்தை நினைவுகூர்ந்து !




## லக்ஷ்மி

நான் என்றுமே நீயாகவே
வாழ்கிறேன்
காற்றின் சத்தத்திற்குள்
உன் வாசனையையே சுவாசிக்கிறேன்
வணங்கும் தெய்வச் சிலையில்
உன் உருவத்தையே காண்கிறேன்
மரம் செடி கொடிகளையெல்லாம்
நீயே பசுமையாக்குகிறாய்
நான் உண்ணும் உணவிற்குள்
உன் சுவையே அறிந்துண்கிறேன்
என் படுக்கையறை ஜன்னல்களில்
உன் காதல் குரல் கேட்டுக்கொண்டே-
யிருக்கிறது
என் படுக்கையின் விரிப்புகளில்
உன் ரேகைகளை தொட்டுக்கொண்டே
தூங்குகிறேன்
விழித்து எழுகையில்
இளங்காலையின் இனிமையை
உன் முகத்தில் தேடுகிறேன்
நீ என் எதில் என்னை உணர்கிறாய்
என்று
கேட்டுக் கொண்டேயிருக்கிறேன்
நீயோ என்னையே பதிலாக்கி
என்னைத் தனிமைப் படுத்துகிறாய். . .


ஒரு காடு
சில மரங்கள்
சில செடி கொடிகள்
ஊர்வன பறப்பன முதல்
உயிரைக் கொல்லும் மிருகங்கள் வரை
கருமை சூழ்ந்த இருளில்
என் வாழ்க்கை என்றாலும் போதும்
காட்டின் மௌனத்தில்
என்னை இறுத்திக் கொள்வேன்
அங்கே மதம் பிடித்த மனிதன் இல்லை
அச்சம் இல்லை
தந்தைகளைப் பார்த்து குஞ்சுகள்
கதறவில்லை
ரத்தம் வழிந்தோடும் ஆடைகளை
யாரும் உடுத்தியிருக்கவில்லை
கூடுகள் சிதைக்கப்படுவதில்லை
உயிர் பிச்சைக் கேட்டு கையேந்த
அவசியமில்லை
மரணத்தின் அச்சமில்லை
எல்லா மரங்களும் என் மரம்
எல்லா நிழல்களும் என் நிழல். . .

ஸ்ரீரங்கம் சௌரிராஜன்



# குட்டி ரேவதி கவிதைகள்

## 'பூனையைப் போல அலையும் வெளிச்சம் ' தொகுப்பை முன்வைத்து ...




குட்டி ரேவதி கவிதைகளைப் பற்றிப் பேசிய தேவதேவன் ," இத்தொகுப்பு மூலம் குட்டி ரேவதி அசலான ஒரு கவிஞராகப் பிறந்துள்ளார். " என்கிறார்.

குட்டி ரேவதியின் கவிதைகள் உணர்ச்சிகள் திரண்டு மேலெழுந்து பொங்கும் இயல்பு கொண்டவை.

அரிய சொற்றொடர்கள் விரவிக் கிடக்கின்றன.தனித்தன்மை கொண்ட நடை சாத்தியமாகி இருக்கிறது.

நல்ல படிமங்கள் காணப்படுகின்றன.

'நின்றுவிட்ட காலம்' -- புதிய படிமத்துடன் தொடங்குகிறது.

கருமேகம் தரையிறங்கி

உறைந்திருக்கிறது கடும் மலையாய்

பூமி எப்படி இருக்கிறது என்று ஒரு விளக்கம் தருகிறார்.

பூமியின் சூன்யத்தை நிரப்புகிறது

பசுங்கிளிகள் பூத்த மரவாசனை

இயற்கை அழகை ரசிக்காத கவிஞர்தான் யார் ?

வனவெளியின் ஒருமையைக் குலைக்கிறது

தூய அருவியின் வெண்பாடல்

புதிய உவமை பொருத்தமாகத்தான் இருக்கிறது.

'தவச்சாலை' சொல் அடர்த்தி கொண்ட கவிதை. மொழியின் சாறு வாசகன் மனத்தில் மெல்லப் பரவி

இலக்கியத் தித்திப்பை உருவாக்குகிறது.

அழகிய கனியாய்

நிலவு தொங்குகிறது

மெல்லக் கரைந்து வழிகிறது

காந்த ஒளிச்சாறு

இருள் பூத்த காடாகிறது

வானம்

இதைத் தொடர்ந்து மூன்று வரிகளில் கவிதை முடிகிறது. வாசகன் ஒரு வினாவிற்கு விடை தேடுகிறான்.

மூலத்தில் புதைந்த சொல்லொன்று

முலைப் பாலாய்த் துளிர்க்கும்

இருள் படியும் கவிதைப் பள்ளங்களில்

கவிஞர் மனத்தில் உள்ள அந்தச் சொல் எது ? என் யூகம் ‘அழகு ‘ என்பதுதான். பல யூகங்களிக்கு

இடமிருக்கிறது. புதிய படிமம் காத்திரமாக உள்ளது.

‘நதி ‘ என்ற கவிதை இருண்மையோடு காணப்படுகிறது.

‘ பூனையைப் போல அலையும் வெளிச்சம் ‘என்ற புத்தகத் தலைப்புக் கவிதையிலும் ஆங்காங்கே தெளிவின்மை காணப்படுகிறட்து.

கதவுகளை ஓசைப்படாது திறந்து

மழை பெய்கிறதாவெனக்

கை நீட்டிப் பார்க்கிறது வெளிச்சம்

என்ற கவிதையின் தொடக்கம் மரபுப் பாங்கில் நீர்த்துப் போயிருக்கிறது.

‘பூமியெங்கும் பூனை உடலின் நிற அழகுகள்‘ என்ற வரியை எப்படிப் புரிந்துகொள்வது ?

பூமியின் நிலப்பரப்பு , நீர்ப்பரப்பு இரண்டையும் குறித்துச் சொல்கிறாரா? கவிஞருக்கே உரிய மனப்படமா?

மதில் சுவரென விடைத்து நிற்கும்

இரவு முதுகின் மீதமர்ந்து

கூடலின் பேரொளியைச் சுவீகரிக்கும்

நிலவின் அகன்ற வழியால்

ஆர்ப்பாட்டான சொல் வீச்சால் கவிதையின் அர்த்தம் திணறுகிறது.

‘கற்தேவதைகள்‘ கவிதையில் கற்பனை அலங்காரம் பதிவாகியுள்ளது.

கல்லின் தோலுரித்து

உயிர்க்கும் சிற்பம்

வெளிச்சத்துக்கு வெட்கித்து

நிழல் திரையுனூடாக

அசையும் இருளுரு

என்று கவிதை தொடங்குகிறது. சிலைக்கு யார் துணை ? தனிமைதான்.

காலோடு அறைந்த

கால ஆணி

வெயிலையும் மழையையும்

சபித்திருக்கிறது

வௌவால்களின் எச்ச வீச்சமும்

தனிமையின் வனாந்திரமும்

கூட

என்ற பத்தி முக்கியமானது. ‘காலோடு அறைந்த‘ என்ற குறிப்பு நுணுக்கமானது.

கடவுளின் அருள் வழிந்த

சிற்பங்கள்

தேவதைகளாகி உலவக்கூடும்

மேற்கண்ட வரிகள் கவிதையின் கருப்பொருளாகும்.

ஏனோ

மனித வாசனை கேட்டால் மட்டும்

ஜடமாகி இளைக்கின்றன

என்று கவிதை முடிகிறது. அழகான , புதிய கற்பனைக் கவிதை. இத்தொகுப்பின் ஆகச்சிறந்த

கவிதையாக நான் இதை ரசித்தேன்.

‘குடுகுடுப்பைச் சிறுவன்‘ கவிதை ஒரு குட்டிக்கதை. அந்தச் சிறுவன் வாழ்க்கை பற்றிய விளக்கம் தருகிறான்.

நீந்திக்கிட்டேயிருக்கிறதுதான்

மீனுக்கு வாழ்வும் சாபமும் அக்கா

என்கிறான். எளிய உவமை, ஆழமான பொருள்

அந்தச் சிறுவன் கொடுத்ததை வாங்கிக் கொண்டு போய்விட்டான். எப்படிப் போனான் ?

இனி எப்போதும் வராத

காலத்தின் சாயலாய் மறைந்தான்

குடுகுடுப்பைச் சிறுவன்

என்கிறார் குட்டி ரேவதி. விதி முன் செல்ல ஸ்ரீரமன் பின் சென்றதைக் கம்பன் குறிப்பிட்டது நினைவு

வருகிறது.

'நகரும் கூடு' என்ற கவிதையில் நம்பிக்கை மிகுந்த ஒரு தனி நபர் குரல் ஒலிக்கிறது.

ஊரோரம் காவல் இருக்கிறது ஆறு

பளபளக்கும் நீண்ட கத்தியாய்

................

இராவணத் தலைகள் போல் வீடுகள்

சாய்ந்து கிடக்கின்றன எங்கெங்கும்

கவிதை முடியும் போது ஒரு அசாதாரண படிமம் .

என் கூட்டையே ஒரு கனியென

அலகில் ஏந்திச் செல்கிறேன்

ஒளி பாயும் திசை நோக்கி

இக்கவிதையில் மரபின் தாக்கம் அழகாகப் பதிவாகியுள்ளது.

'காவியம்' கவிதை கூடல் பற்றிப் பேசுகிறது. காமம் துய்த்தல் கலை முலாம் பூசப்பட்டிருக்கிறது.

என்னிலிருந்தும் உன்னிலிருந்தும்

உயிர்த்தீ தன் வெப்பத்தை

கசியச் செய்தது

உன் கண்ணிலிருந்து கிளம்பிய

கருணை அம்பு குத்திய நோவில்

மயங்கினேன்

....................

இது போன்ற நடையில் நகர்கிறது கவிதை. கவிதையில் இரண்டு வரிகளில் சொற்கள் இல்லை.

புள்ளிகள் மட்டுமே வரிசையாக உள்ளன. " சொல்லாத சொல்லுக்கு விலை ஏதுமில்லை " என்று கண்ணதாசன் சொன்னது போல காலியான இடங்களை அவரவர் கற்பனைக்கேற்ப நிரப்பிக் கொள்ளலாம்.

வானையே

தன் கால்களில் இடுக்கிக்கொண்டு

இழுத்துச்செல்லும்மேகப்பறவையின் விடுதலை

என்று ஒரு கவிதையில் (மரணவேடிக்கை) எழுதியுள்ளார். அதீதமான கற்பனை, எனவே பூதாகரமான படிமம். மாய யதார்த்த உத்தியாகவும் இதைப் பார்க்கலாம்.

நிறைவாக, குட்டி ரேவதி கவிதைகள் மனநிறைவு தருகின்றன.

✦

**வசந்தன்**

# வாசம் தொலைத்த அரளிகள்

நெடுஞ்சாலையின் நடுவே
கொடும் வெயிலில்
வாசம் தொலைத்த அரளிகள்

பிணங்கள் மீது வைக்கப்படும்
மலர்களின் நறுமணம்கண்டு
ஏங்குவதில்லை

இன்னும் மலர்ந்திடாத செடிகள்
காத்திருக்கிறது
புறவழிச்சாலை எங்கும்

வாகனங்களின் சைரன்ஒலிக்கு
அச்சப்படும் செடிகளின்
வாழ்வும் மரணமும்
தண்ணீர் தெளிக்கும் கைகளில். ✦

கலா புவன்

# முதிர்கன்னி

ஓடிவந்த குதிரைக்கு மேலே போக பாதையில்லை
திரும்பி போக மனமில்லாமல் கால்களால் மணலை கிளறிக்கொண்டிருந்தது
தூக்கமில்லாத இரவுகளை இருக்கையில் அமர்ந்த படி
நினைவுப் பந்தலில் இருந்து எடுத்து அசை போட்டாள்

புள்ளி வைக்காத கோலங்கள் சில வீட்டு முகப்புகளில் போடப்பட்டிருந்தன
மொட்டை மாடியிலிருந்த பூந்தொட்டிகளுக்கு நீர் வார்க்க ஒருவருமில்லை
இணையாக செல்லும் தண்டவாளங்கள் பெரும்பாலும்
ஒன்றையொன்று தொடப்படாமலே கிடந்தன


வெளிச்ச சிறகை கடலுக்குள் நுளைத்து கழற்றிப் போட்டான் ஆதவன்
முதலாவதாக வகுப்பில் வந்த மாணவி கடைசியாக வந்த மாணவியை
துச்சமாகப் பார்த்தாள்
நனைந்து போன விளக்குத்திரிகள் பற்றவைத்தாலும் அணைந்து போயின

கல கலத்த வளையல்களின் ஓசை இன்னும் மணமகளின் கையிலிருந்து எழவில்லை
ஊர் ஓரத்தில் ஓடிக்கொண்டிருந்த நதி மௌனத்தை போர்த்திக்கொண்டிருந்தது
தனிமைக்கு பழகி விட்ட மனதுடன் ஜன்னல் கம்பிகளை பிடித்த படி
வெறித்த விழிகளுடன் நின்றிருந்தனர் முதிர்கன்னிகள்

இன்பம் மட்டுமே வாழ்க்கையல்ல
சிறகொடிந்து போதலும் தான் வாழ்கை

# 144 கடவுள்

ஆதார் அட்டை தொலைந்துபோன
பீதியிலிருந்த கடவுளுக்கு
ஒரு குவாட்டர்கூட கைசேரவில்லை
கியூவில் நின்று முட்டிவலியே கால்சேர்ந்தது
எத்தனையோ நகரங்களை
எத்தனையோ வனாந்திரங்களை
மாஸ்க்கின்றி கடந்துவந்த கடவுள்
சமூக இடைவெளி கடைப்பிடிக்காத
ஈரலற்ற மனிதர்களை
பூரண வசிகரத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்
தண்டவாளத்தில் துண்டுதுண்டான
17பேரை காணமறுத்த கடவுள்
டார்ச்லைட் வெளிச்சம்
கைத்தட்டல் மலர் தூவுதலென
திடுக்கெனும் திகிலாக பார்த்துக்கொண்டிருக்கிறார்
தேசத்தினால் கைவிடப்பட்டவர்கள்
பலநூறு கிலோமீட்டர்
நடக்கிறார்கள் நடக்கிறார்கள்
உணவருந்த வழிதேடி
நடக்கிறார்கள் நடக்கிறார்கள்
தேசத்தின் வெடித்த கால்களாக
நடக்கிறார்கள் நடக்கிறார்கள்



தன்னைதானே தனிமைப்படுத்திக்கொண்ட
கடவுள் வெறுமெனே பார்த்துக்கொண்டிருக்கிறார்
ஊரடங்கிய 144 தடையிலும்
சாதிக்கு எந்த தளர்வுமில்லை
எந்த கண்காணிப்பு வளையமுமில்லை
சாதிய நோயாளிகளை
சாதிய தொற்று உள்ளவர்களை
இவர்களின் தொடர்புடையவர்களை
தனிமைப்படுத்தும் நிகழ்வில்லை
மாறாக
கேடான கடவுளோடு சேர்ந்து
சிஷீஸ்வீபீ-19 உடனும் மக்கள்
வாழப் பழகிக்கொள்கிறார்கள்
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
சாதியை எப்படி கையாண்டமோ
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
கடவுளை எப்படி சலித்துக்கொண்டமோ
அப்படியே

# பிரிவின் நிறம் செம்மஞ்சள்

யசோதா.பத்மநாதன்

பிரிவின் நிறம் செம்மஞ்சள்.
கயர்ப்பு நெல்லி சுவையதற்கு.

பச்சை மஞ்சள் சிவப்பு என
நிறம் மாறுகின்றன இலைகள்
பருவகாலத்தைப் பின்தள்ளி
மாற்றங்களை முன்னிறுத்தி.....

மஞ்சளில் இருந்து
சிவப்புக்கு நிறம் பெயரும்
இலையின் நுனியில்
அமர்ந்திருக்கிறது
கசப்பு கெட்டியாக.

இலையின் நுனியில்
ஒரு காலத்தைப் போல
அமர்ந்திருக்கும்
கறுப்பும் சிவப்புமென
வண்ணம் கொண்ட லேடி பிக்கோ
கசப்பினை பிளிந்து
தைல வாசனையை
காற்றில் பரப்புகிறது.

இடம்பெயர்கிறன
மனநிலைகள் மெல்லெனவே..
கற்றில் பரவும்
தைலவாசனை போலவே
பருவகாலத்தைப் பின்தள்ளி

மாற்றங்களை முன்னிறுத்தி
இலைபோல வெகு இயல்பாக....

ரேகையோரமாய் ஊர்ந்து
கிளைரேகையில் பரந்து
இலை மெல்ல
செம்மஞ்சள் ஆகும் தருணம்
ஆயிற்று அமைதியாய்
ஒரு விடுபடல் சம்பவம்

கயர்ப்பு நெல்லி சுவையை
உண்டு உயிர்க்கிறது
வாழ்வு.

அதன் உந்திய உயிர்ப்பில்
விருட்சத்தில் இருந்து
பிரிந்து உதிர்கிறது
இயல்பாக
செம்மஞ்சளேயான
இலையொன்றும்

உடலில் இருந்து உளம் ஒன்றும்...

நம்புங்கள்,
கயர்ப்பு நெல்லி சுவை கொண்ட
பிரிவின் நிறம் செம்மஞ்சள்.
செம்மஞ்சளேயாகும். ✦

## நந்தவனம் சந்திரசேகரன்

ஒரு வியூகம்
வகுக்கவேண்டும்
விட்டு விடுதலையாவதற்கு

தாழிடப்பட்டு
அடைபட்டுக்கிடக்கும்
ரகசியங்களை
திறந்து விட வேண்டும்

கடிகார முட்களில்
கட்டித் தொங்க விட வேண்டும்
கடந்து செல்லும் காலத்தை

வரிசையில் நிற்கும்
பொறுப்பையும்
பின் தொடரும் வெறுப்பையும்
எடை போட வேண்டும்
ரகசியத்தராசில்

நீயும் பொம்மை
நானும் பொம்மை
அடிக்கடி உணர்த்துகிறது
சோளக் காட்டில் நிற்கும்
மீசை வரையப்பட்ட பொம்மை ஒன்று

தப்பித்துப் போக
வாய்ப்பின்மையால்
காதுகளைத் தொலைத்து விட்டு
சத்தமில்லாத
தேசத்தைத் தேடுகிறது மனம்

அகற்றப் படாத குப்பைகள்
நிரம்பிக் கிடக்கின்றன
பழகிப் போய்விட்டது
துர்நாற்றத்தை சுவாசித்து வாழ

ஆயுள்
குறைந்து கொண்டே வருகிறது
எனவே
ஒரு வியூகம்
வகுக்க வேண்டும்
விடுதலையாவதற்கு



● சிறுகதை

ஏலையா க.முருகதாசன்

# மேரி

இரவு மூன்று மணிக்கு திடீரென கண்விழித்த சிவானந்தம் தனது மனைவி செல்வி கட்டிலில் சாய்ந்து இருந்தபடி அழுது கொண்டிருப்பதைக் கண்டதும் பதைபதைத்து" ஏன் என்ன நடந்தது, ஏன் அழுகிறாய் "எனக் கேட்க, "அம்மாவை நினைத்து அழுகிறேன்" என திரும்பவும் விம்மினாள்.

சிவானந்தம் எழுந்து கட்டிலில் சரிந்து உட்கார்ந்தபடி, மனைவியின் தலையை ஆதரவாகத் தடவியபடி "அம்மா நல்லாத்தானே கனடாவிலிருக்கிறார், அதை நினைத்து ஏன் அழுகிறாய் "என்றவுடன் "இல்லை அம்மாவும் நாளைக்கு முதியோர் இல்லத்துக்கு போக வேண்டி வந்தால் மேரிக்கு வந்து நிலைமை அம்மாவுக்கும் வந்துவிடுமோ என்று பயமாகவிருக்கின்றது" என்று செல்வி சொல்லியதும்" அப்படியொன்றும் வராது, இதற்குத்தான் முதியோர் இல்லத்திற்கு வேலை செய்ய போக வேணடாம், உன்னுடைய இளகிய மனதிற்கு அந்த முதியவர்களைப் பார்க்கும் போது உன்னுடைய மனம் தாங்காது என்று தெரிந்துதான் சொன்னனான் என்று" ஆறுதல்படுத்தினான் சிவானந்தம்.

ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், முதியோர் இல்லத்தில்

உள்ள தாய்மார், தகப்பன்மார் தன்னை தங்கள் மகளாகப் பார்த்து நடந்து கொள்ளும் விதத்தை கணவனுக்குச் சொல்வாள்.தான் அவர்களை பராமரித்ததை மறந்துவிட்டு "நேற்று செல்வி நீ வரவில்லை நான் நிறையக் கஸ்டப்பட்டுவிட்டேன் "என்பார்கள் சிலர்.காலையில் பராமரித்ததை மறந்துவிட்ட சிலர் "நீ காலையில் காலைச் சாப்பாடு தரவில்லை என்பார்கள்" சிலர்.

இப்படி அவர்கள் ஞாபகத்துக்குள்ளும் ஞாபக மறதிக்குள்ளும் தங்களுடைய வாழ்நாளை நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.இவர்களில் எத்தனை பேர் கெம்பீரமாக மகிழ்ச்சியோடு பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் வாழ்ந்திருப்பார்கள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவர்களைப் பார்க்க வரும் போது, அவர்களை இனங்கண்டு மகிழ்வதும், அடுத்த நிமிடமே "நீங்கள் யார்?" என்று அவர்களிடமே கேட்டுவிட்டு, பிள்ளைகளைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது, அவர்களைச் வந்து என்னைப் பார்க்கச் சொல்கிறீர்களா என்று பிள்ளைகளிடமே சொல்கின்ற நிலைமையைப் பார்த்து செல்வி வேதனைப்பாடாத நாட்களே இல்லை.

வேதனைக்கு மத்தியிலும்,முதியோர் இல்லத்தில் அவர்களை பராமரித்து அன்பு செலுத்துவதை அவள் விரும்பினாள்.தனது தாயையும் அவர்களுடன் ஒப்பிட்டு "அம்மாவுக்கும் ஒருநாள் இப்படித்தான் ஆகிவிடுமோ" எனக் கலங்குவதும் உண்டு. செல்வி அந்த முதியோர் இல்லத்திற்குள் காலடி எடுத்து வைத்ததுமே ஒரு புதிய உலகத்துக்குள் தான் இருப்பதாகவே உணர்வாள்.அது ஒரு தனி உலகம்.ஞாபகங்களும் மறதியும் மழலைகளின் செய்கைகளை ஒத்த அவர்களின் செய்கைகளினால், அவர்கள் மீது அவள் இரக்கப்படுவாள்.நானும் ஒருநாள் இப்படித்தான் இருப்பேனா என்று அவள் நினைப்பாள்.வாழ்க்கையின் விசித்திரங்களை உணர்வாள்.அவர்கள் சிரிக்கும் போதும்,காயந்து குழிவிழுந்த கண்களிலிருந்து கண்ணீர் வரும்போதும் அவர்கள் எதை நினைத்து அழுகிறார்கள் எதை நினைத்துச் சிரிக்கிறார்கள் என்பதை அவர்களில் சிலர் சொல்வார்கள், சிலருக்குச் சொல்லத் தெரிவதில்லை.

மேரி செல்வியின் மீது விருப்பங் கொண்ட மூதாட்டி.தனது கடந்த கால வாழ்க்கையைச் செல்விக்குச் சொல்வி மகிழ்வாள்.அடுத்தநாள் செல்வியை "நீ யார்" என்று கேட்பாள்.ஒரு நாள், செல்வி முதியோர் இல்லத்துக்குள் நுழைந்ததும் அவளோடு பணிபுரிபவர்கள்"உன்னுடைய மேரித்தாய்க்கு ஒரு பார்சல் வந்திருக்கு நீயே கொடு" என்று கொடுத்தனர்.மேரித்தாயிடம் கொண்டு போன செல்வி" உங்களுக்கு ஒரு பார்சல் வந்திருக்கின்றது" என்று சொல்ல"நீயே பிரி" என்று மேரித்தாய் சொல்ல, அதற்குள் மகள் அனுப்பிய கிறிஸ்மஸ் பரிசளிப்புகள் இருந்தன.ஒரு தபால் உறையில் கடிதம் இருந்தது.அந்தக் கடிதத்தில் "அம்மா எனக்கு புற்றுநோய், இதுதான் நான் உனக்கு அனுப்பும் கடைசி அன்பளிப்பாகவும் இருக்கலாம்.இது உன் கையில்

கிடைக்கும் போது நான் சிலவேளை இறந்து போயிருப்பேன்"என்றிருந்தது. கடிதத்தை கொண்டோடிப் போய் மற்றப் பணியாளர்களிடம் காட்ட "நீயே பக்குவமாக அதைச் சொல்" என்றிருக்கிறார்கள். செல்வி மேரித்தா-யிடம் உண்மையைச் சொல்ல அதை கவனத்தில் எடுக்காது நிராகரித்த நினைவுக் கலங்கள் தன மகள் தன்னை பார்க்க வருவாள் என மகிழ்ந்து சிரித்தாள்.

ஆனால் பார்சல் தாயின் கைக்கு கிடைக்குமுன்பே மேரித்தாயின் மகள் கொரனோ வைரஸ் பரவிய நாட்களில் இறந்த செய்தி முதியோர் இல்லத்திற்கு எட்டியது. மூன்று நாட்கள் செல்ல, செல்வி முதியோர் இல்லத்துக்குள் நுழைந்த போது பணிசெய்வோரின் முகத்தில் வேதனை தெரிந்தது."ஏன் எல்லோரும் ஒருமாதிரி இருக்கிறீர்கள்" என்று கேட்ட போது, "கொரனோவால் உன்னுடைய மேரித்தாய்......" எனஇறு சொல்லி அவர்கள் கலங்கியதைக் கண்ட செல்வி புரிந்து கொண்டாள். சுவரோடு சாய்ந்து விக்கி விக்கி அழுதாள்."கடவுளே மகள் இறந்ததைக்கூட அறிய முடியாது, மகள் தன்னை பார்க்க வருவாள் என்ற நினைப்போடு என்னுடைய மேரித்தாய் போய்விட்டாரே" என்று குரல்விட்டு அழுதாள். "அழாதை செல்வி" என்று ஆறுதல் படுத்தத்தான் அவர்களால் முடிந்தது. அவளை அணைத்து ஆறுதல்படுத்த முடியவில்லை. கொரோனா என்ற தடுப்பு அவர்களைத் தடுத்து நின்றது.

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்

# துளிப்பாக்கள்

கண்ணாம்பூச்சி ஆடுகிறது/
ஒளிக் கீற்றுடன்/
இலைகள்

❒

வானமுடன் கூரையும்/
மெல்ல நகர்கிறது/
மிதக்கும் படகு வீடுகள்

❒

மனதிற்குள் வேண்டுதல்/
சத்தமாய் வெடிக்கிறது/
சிதறு தேங்காய்

❒

எசப்பாட்டு/
பாடுகிறது பறவை /
காற்றின் அலைவரிசைக்கு

கௌந்தி மு
சென்னை.

# அவதாரம் எடுக்கவோர் அரிதாரம்

*பிஞ்சென்றும் பாராமல்*
*நஞ்செனவே மாறும்*
*துச்சாதனன்களின்*
*தொடைப்பிளக்க*
*ஏனில்லை இன்றோர் அவதாரம் !*

*நாளொரு விதமாய்*
*பிறப்பெடுக்கும்*
*பிணந்தின்னிக்கழுகுகளின்*
*கொட்டம் அடக்க*
*ஏனில்லை இன்றோர் அவதாரம் !*

*கருவறையில் பிறக்காமல்*
*தவறி 'கல்' அறையில் பிறந்த*
*ஈரமேயில்லாத*
*ஈனப்பிறவிகளை கருவறுக்க*
*ஏனில்லை இன்றோர் அவதாரம் !*

*பாரத மாதா மட்டுமல்ல*
*இப்பாரதத்திலுள்ள*
*எம்மாதாவாலும்*
*மன்னிக்கமுடியா அவலம் புரியும்*
*அசுரர்களின் வேரறுக்க*
*ஏனில்லை இன்றோர் அவதாரம் !*

*எங்கள் குருதியை சிகப்பாக்கி*
*மையிட்ட கண்ணில் வழியும்*
*நீரை கருப்பாக்கி*
*அரிதாரம்*
*கலந்து தருகிறோம்*
*பூசிக்கொண்டு எடுத்து வா*
*ஓர் புது அவதாரம் ..*

*நீ*
*தூணிலும் இருப்பாய் என்று*
*காத்துக்கொண்டிருக்கின்றது*
*இங்குத்*
*தூளியில் உறங்கும் பிஞ்சுகளும்...*

✦



ஆண்டோ ஸ்வாதி,
திருவண்ணாமலை

● சிறுகதை

# விழித்தெழுந்தாள்...

“கருமையும் நீலமும் லந்த அந்த வானமும்... தனது ஒளியில் லேசாக கண்சிமிட்டும் அந்த நட்சத்திரங்களும்“, அவளை நாலு மணிக்கு மேல் தூங்கவிட்டதே இல்லை.

அவள் விரும்பியவாறு அவளின் பூமி இருப்பது அந்த அதிகாலையில் மட்டுமே.

அவளுக்கான பூமியை சுமார் ஒரு மணி நேரம் ஆசைத்தீர ரசித்துவிட்டு மீண்டும் படுக்கைக்குச் சென்றுவிடுவாள்.

எப்பொழுதும் போல அவளின் தூக்கம்

களைவதற்கு வானம்,நட்சத்திரங்கள்,வார்த்தைகள் இவைகள் எல்லாம் இல்லாமல் புதியதாக இப்பொழுது ஒருவன் அவளுக்காகவே வந்திருந்தான்.

அந்த அதிகாலையில் மெதுவாக கண் விழித்தவள் தன் அருகே படுத்திருந்த அருணாவின் கை இவள் வயற்றின் மீது கிடந்ததை உணர்ந்தாள். அருணாவின் கைகளை தன் வயிற்றிலிருந்து மெதுவாக நகர்த்தி படுகையில் வைத்துவிட்டு, கண்களை கசக்கியபடியே தலையணைக்கு அருகில் இருந்த போனை தேடினாள்.

போனை எடுத்தவள் "அவனது" பெயரின் முதல் எழுத்தை அன்லாக் பேட்டெனாக கிறுக்கினாள். லாக் எடுக்க ஒவ்வொருமுறை அவனின் முதல் எழுத்தை கிறுக்கும் போதும் வெட்கத்தில் முகம் சிவப்பதை அவளை அறியாமலேயே உள்ளுக்குள் ரசிப்பாள்.

போனை எடுத்து வாட்ஸ்அப்பிற்குள் சென்ற அவள் திகைத்துப் போனாள். எப்பொழுதும் அவனின் வாட்ஸ்ஆப் மெசேஜ் இல்லாமல் இவளின் எந்த ஒருநாளும் விடிந்தது இல்லை. ஆனால் இன்றோ..? இந்நேரமோ அவனது மெசேஜ் வந்து இருக்கணும்..! எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள்... அவள் எதிர்பார்ப்பு பொய்யானது.

அவனிடம் இருந்து ஒரு மெசேஜ்ம் வரவில்லை . இன்று அவன் இன்னும் ஏன் மெசேஜ் பண்ணவில்லை என்ற கேள்வி அவளின் முதல் காதலர்களான நட்சத்திரங்களையும், புத்தகங்களையும் ஓரங்கட்டின.

மெதுவாக கட்டிலில் இருந்து எழுந்து அவள் கட்டிலுக்கு கீழே படுத்து இருக்கும் சச்சினைப் பார்த்தாள். சச்சின் இவளை விட உயரமாக இருப்பான் . அவனிடம் இவள் அண்ணார்ந்து பார்த்து தான் பேச வேண்டும். தன்னை விட சச்சின் மூன்று வயது சின்ன பையன் என்பதே பிறப்பு சான்றிதழில் மட்டுமே உள்ளது . உருவத்தை பார்த்தால் அப்படி சொல்லிவிட முடியாது..!

அந்த பிறப்பு சான்றிதழ் மட்டுமே இவள் தங்கை இல்லை அக்கா என்பதற்க்கும்

அவன் தம்பி தான் என்பதற்குமான ஆதாரமாகும்...

எப்போதும் நீண்டு காணப்படும் அவனது உடல் இன்று அவள் பார்த்த போது சற்று குண்டாக தெரிந்தது. இரவு படுக்கும் பொழுது அந்த இடத்தில் அவன் தனியாக தான் படுத்தான்... தற்பொழுது இரண்டு பேர் படுத்திருப்பதுபோல இருந்தது... அதனால் தான் அவளுக்கு குண்டாக தெரிந்திருக்கிறது..!

தலை வரை முழுவதும் இழுத்து போர்த்திக் கொண்டு தூங்கும்

அவனது போர்வையை தனது முழுசக்தியையும் உபயோகித்து பிடித்து இழுத்தாள்.

போர்வையை இழுத்து வெற்றிகரமாக எடுத்துவிட்ட அவள் அதிர்ந்து போய் நின்று விட்டாள். யாராவது பார்த்துவிடுவார்களோ, அறைக்குள் யாராவது வந்துவிடுவார்களோ என்ற பதற்றத்தில் ஒரு மாதிரி அப்படியே நின்றுவிட்டாள்.

காரணம்... யாருடைய மெசேஜ் வரவில்லை என மிகவும் கவலையோடு இருந்தாளோ, யாரை நினைத்து நினைத்து நட்சத்திரங்களையும்,புத்தகங்களையும், மறந்தாளோ... அவளின் உயிரான " அவன்" படுத்து இருக்கிறான். ஆம், அவளின் காதலன் தான். எப்பொழுது வந்தான் எப்படி வீட்டுக்குள், அதுவும் அவளின் அறைக்குள் நுழைந்தான்... இப்பொழுது அதுவும் அந்த அதிகாலை வேலையில், விடியற்காலையில்... அனைவரும் தூங்கி எழும் நேரத்தில் வீட்டிக்குள் எப்படி வந்தான், ஏன் வந்தான்..? வீட்டிற்குள் இவன் இருப்பது யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை. இவ்வளவு ஏன் அருகில் படுத்திருக்கும் அன்புவிற்கே தெரியாது..!

பதற்றமும்,பயமும் ஒருபுறம் இருக்க அந்த வயதிற்கே உரிய அந்த காதலால், ஊடலால்... இவளின் காதலன் அவள் அறைக்குள்ளே வந்துவிட்ட மகிழ்ச்சியில் இருக்கும் அவள்..! அவளின் விருப்பமான நட்சத்திரங்கள் அனைத்தையும் தனது கைகள் தொடும் தூரத்தில் கண்டதைப்போல திகைத் நின்றுக் கொண்டிருக்கிறாள். ஆனால் தான் மட்டுமே விரும்பும் நட்சத்திரங்களின் வெளிச்சம் தனது வீட்டில் உள்ளவர்களுக்கு தற்போது வெளிச்சமாக தோன்றாது என்பது இந்த வயதில் அவள் அறிந்த உண்மை.அந்த உண்மை அவளின் விளக்க முடியாத மகிழ்ச்சி கலந்த உணர்வை போக்க போதுமானதாக இருந்தது.

சற்று நிதானித்த அவள்,அவனை எழுப்பி "ஜானுமன் எப்படி இங்க வந்திங்க, அம்மா அப்பா பக்கத்து ரூம்ல தான் தூங்கிட்டு இருக்காங்க. நீங்க எப்படி... அதுவும் இந்த நேரத்துல இந்த ரூம்ல..."என கேள்விகளை அடுக்கினாள். "ஜானுமன்" அப்படி தான் அவள் அவனை அழைப்பாள். அதற்கு ரஷ்ய மொழியில் "ஆத்ம சிநேகிதன்" என்பது பொருள். அவனது மார்பின் மீது கைகளை தேய்த்து, "ஜானுமன் எழுந்துருங்க நான் சொல்லறது கேக்குதா.." என மெல்லிய குரலிலும் வேகமாகவும் அவனை எழுப்ப முயற்சிக்கிறாள். ஒருவித புன்னகையோடு எந்த ஒரு சலசலப்பும் பதட்டமும் இல்லாமல் மெதுவாக கண்களை திறந்தவன்... இதுவரை சேர்த்துவைத்த அத்தனை காதலுடன் அவளைப் பார்த்தான்..!"

தன் கைகளோடு அவள் விரல்களை கோர்த்து அவன் இழுக்க முழுவதுமாய் அவனது மார்பின் மீது சாய்ந்த அவளை இறுகக்கட்டிக்கொள்கிறாள்...

அவனது அரவணைப்பில் ஒரு நிமிடம் அவள் அனைத்தையும் மறக்கிறாள்.

அவளுக்கு அப்படியே இருக்க வேண்டும் போன்று இருக்கிறது. திடீரென ஏதோ நினைவுக்கு வர அவனது அரவணைப்பில் இருந்து மீள மனமில்லாமல் மீண்டாள். அவள் பதில் தெரிந்துக் கொள்ள வேண்டிய கேள்விகள் அவனின் கண்களுக்கு முன்பாக வார்த்தைகளால் அடுக்கப்பட்டது . அவளின் எல்லா கேள்விக்கும் அவனின் ஒரே பதில் "அவள் மீதான அவளின் காதல் தான்..!" அவளின் கேள்விகளுக்கு மௌனமும் பதில் சொல்லிக்கொண்டு இருந்தது. அதை புரிந்துக் கொள்ளும் சூழ்நிலையில் அவள் இல்லை என்பது அவனுக்கு தெரியும். புரியவைக்கவும் அவன் அப்போது விரும்பவில்லை.

அவன் அவனுக்குரிய அவளை காதலுடன் மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தான். அவன் அப்படி பார்க்க காரணம் அவளுக்கு தெரியும். அவளுக்கு தெரிந்த உண்மைகளை பற்றி மட்டுமல்ல இந்த உலகமும் சமுதாயமும் உண்மைகள் என்று வகுத்து வைத்திருக்கும் எதை பற்றியும் கவலை கொள்பவன் அவன் அல்ல. அவனுக்கான உண்மைகள் வேறு, அவனுக்கான மொழிகள் வேறு, அவனுக்கான கவலைகள், சந்தோஷங்கள், வார்த்தைகள் அனைத்தும் வேறானவை. அந்த வேறானதொரு உலகத்தில் இவளும் பயணிப்பதற்காகத் தான் அவனை காதலித்தாள். இவ்வளவு ஆழமாக அவனது உலகத்தை புரிந்துக் கொண்டாலும் அவளால் அவளுக்கு இதுவரை கற்றுக்கொடுக்கப்பட்ட வாழ்வியலின் பயத்தை முழுவதுமாக நீக்க முடியவில்லை . காரணம் அவன் வாழும் உலகம் வேறு. இவள் வளர்ந்த உலகம் வேறு.

கண்களில் கலக்கமில்லாமல் முழுவதும் காதலுடன் மட்டுமே பார்க்கும் அவனது கைகளை பதட்டத்துடன் பிடித்து " ஜானுமன் என்னை பாருங்க, நான் சொல்றத கேளுங்க ,அம்மா அப்பா தூங்கறாங்க, நீங்க அவங்க எழறதுக்குள்ள மாடிக்கு போய்டுங்க'' னு ஜன்னல் வழியாக தெரிந்த படிக்கட்டுகளை காட்டினாள். நான் சொல்லுறது எதாவது "புரியுதா ஜானுமன்" என்று அவள் கேக்க "ம்ம்ம் புரியுது" என்று தலையாவது அசைப்பான் என்று எதிர்பார்த்தாள் அவனோ முன்பைவிட இன்னும் இறுக்கமாக அவளை கட்டியணைத்துக் கொண்டான்..!

அந்த அரவணைப்பில் அவள் அவனது காதல் உலகத்திற்கள் சென்றுக்கொண்டு இருந்தாள்.அவள் கேட்ட ஒரு கேள்விக்குமே உதட்டை கூட அசைக்காதவன் அவளது வயற்றில் கைவைத்து "அம்மு நாம எப்பவும் இப்படியே இருக்கனும் டி" என்று சொல்லிகொண்டு இருக்கும் போதே... பக்கத்து ரூமில் அப்பா தூங்கி எழுந்து அம்மாவிடம் பேசும் சத்தம் கேட்டது.

அவள் லேசாக அவனின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு ரூமிலிருந்து எட்டி பார்த்தாள். அப்பா நேராக எழுந்து வந்து கதவை திறந்து பாத்ரூமுக்குள்

சென்றுவிட்டதை பார்த்து தப்பித்தோம் என நிம்மதிபெருமூச்சுவிட்டாள். அடுத்த ரூம்ல அம்மா தூங்கி கொண்டு இருப்பதை உறுதிசெய்த பின்பு... ரூமிலிருந்து அவனது கைகளை பிடித்து இழுத்துக்கொண்டு வாசலின் வெளியே கொண்டுவந்தாள்.

அப்பா இன்னும் பாத்ரூம்ல தான் இருக்காரு...

ஆனால் எப்போது வேண்டுமானாலும் வெளிய வந்துடுவாரு... உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு அவனிடம் மீண்டும் தொடர்ந்தாள்.

“நீங்க உடனே இங்க இருந்து கிளம்புங்க... ஜானுமன்...”

“அப்பா பார்த்துட்டா அவ்வளவுதான்..”

என்று வார்த்தைகள் அவளின் உதட்டிலிருந்து வேகமாக வெளியேறின.

அவளின் வார்த்தைகளோ, அவளின் பதற்றமோ, அந்த சூழலோ எதைப்பற்றியேமே உணராதவனாக, கவலையின்றி இருந்த அவன்... அவளது உதட்டில் அழுத்தமாக முத்தமிட்டான். அப்படியே மயங்கி போனாள் அவள். அந்த அதிகாலையில் லேசான காற்றில் அவளின் உடம்பு சூடாகவே இருந்தது. கண்களை மூடிக்கொண்டு அவனது தோளை இறுக்கி பிடித்துக்கொண்டு இருந்த அவளுக்கு மனதில் இது இப்படியே இருக்க வேண்டும் என்று தோன்றி முடிப்பதற்குள் அப்பா பாத்ரூம் கதவை திறக்கும் சத்தம் திக்கென விழிக்கச் செய்தது.

அவள் அவனை தள்ளி விட்டு “ஜானுமன் நீங்க சீக்கிரம் கிளம்பிடுங்க” என்று அவனை அவசர அவசரமாக வழியனுபினாள். அவன் அவளது நெற்றியில் முத்தமிட்டுவிட்டு அந்த யாருமில்லா சாலையில் நட்சத்திரங்களுடனும் விடியாத அந்த காலை பொழுதின் காற்றுடனும் நடனமாடியபடியே காதலோடு போய்க் கொண்டிருந்தான்.

அவள் வாழ விரும்பும் உலகத்திற்குள் வாழும் அவனை பார்த்தபடியே நின்றுக்கொண்டு இருந்தாள்.

அப்பா பாத்ரூமிலிருந்து வெளிய வந்து ஹாலின் லைட்டைப் போட்டார் . லைட்டின் வெளிச்சம் லேசாக கண்ணைக் கூச பயத்துடன் சட்டென்று திரும்பியவள் கட்டிலில் இருந்து புரண்டு விழுந்ததும் பதறியடிந்து எழுந்துப் பார்க்கிறாள். அந்த இடத்தில் சச்சின் படுத்திருக்க சட்டென விழித்திக் கொள்கிறாள்.

நீண்ட நேர கனவிலிருந்து .

✦

# பிரிவு.....

உமையவன் கலையரசன்

நீ
எனைவிட்டு விழி
நிரம்பிய கண்ணீருடன்
பிரிந்து சென்ற ஒரு பொழுதிலிருந்து....

என்செய் வதென
அறியாது நீ
எனக்களித்த காதல்
சன்மானங்களை எல்லாம் ஒவ்வொன்றாய்
மரப் பேழையிலிருந்தும்,
அலமாரி அடுக்குகளிலிருந்தும்,
பழைய புத்தகங்களுக்கு
இடையிலிருந்தும்,
எறவானத்திலிருந்து மென
அத்தனையையும் தேடி யெடுத்து
தீயிலிட்டு
எரித்துக்கொண்டிருக்கிறேன்...

அப்போதும்
அடங்காத யென்
உள்ளக் கிடக்கையை
தணிக்க இறுதியாய்,
முன்னொரு பொழுதில்
நீயும் நானும் ஒன்றாய்
எடுத்துக் கொண்ட
புகைப் படத்தை
கிழித் தெரிந்தப்பிறகும்
கூட ஆசுவாசம் கொள்ளவில்லை..

இப்படியே
இருந்ததையெல்லாம்
எரித்த பின்னும்
அடங்காதயென்
கண்ணீர் துளிகளுக்கு
இன்னும் தீயிட்டு
எரிக்க ஏதோஒன்று
தேவையாய் இருக்கிறது...

இப்படி
தீயிட்டு எரிக்க
ஏதுமில்லா ஒரு
பொழுதை எப்படி
கடப்ப தென்பது
பயமாகத்தானிருக்கிறது...

அப்படியொரு நாளில்
எனை தீயிலிட்டுக்கொள்ள
விருப்பமில்லை...

ஏனெனில்....?

உன் சன்மானங்களை
தீயிலிட்ட எனக்கு
உன் நினைவுகளை
தீயிலிட பிரக்ஞையின்றி
யாருமறியாமல்
எங்கோ சென்றிருப்பேன்....


கவிஜி

# மனதின் மறு பிறழ்வு



பெரும்பிழைகள் எல்லாம் சிறு நூலில்
உருவாவது தான்
நெருங்க ஒரு காலம் விலக ஒரு காலம்
சுழற்சியின் நியதி
சூழும் தத்ரூபங்களின் நுட்பத்தில்
யாவும் இல்லாமை தான்
இருக்கும் முன்னறிவிப்புகளின் நிமித்தம்
இல்லாத அற்புதங்கள் மாயமும் செய்யும்
காயமும் செய்யும்
மனதின் மறு பிறழ்வு கீறல்கள்
நிறைந்தவை
நிறுத்தக்குறியீட்டின் பின்புறம்
தொக்கி நிற்கும் ஏக்கத்தின் சூழ்ச்சியை
யாருக்கும் தெரியாவண்ணம்
இரவோடு தொடுவானம் துரத்துகிறேன்
கொடுக்க ஏதுவாய் வாங்கும் பரிமாற்றங்களில்
வாக்கிய துண்டுகள் வரைமுறை அழிக்கும்
வரையறை அற்றவைதான் வரைந்த பின்
வசீகரத்துக்கு அழிக்க நேர்பவை....!






# தமிழாற்றுப்படை தமிழின் பெருமிதம்

கவிப்பேரரசு வைரமுத்து அவர்களைக் கவிஞராய்க், கதாசிரியராய்ப், பேச்சாளராய்க் காண்பதும் கேட்பதும் வியப்பதும் ரசிப்பதும் தமிழ்மாந்தர்க்கொன்றும் புதிதல்ல. ஆனால் 'தமிழாற்றுப்படை' எழுதுகோல் என்ற உளி கொண்டு, சொற்களாகிய கல்லிற் செதுக்கிய ஒரு கட்டுரைத்தொகுப்பு.

"இது என் வாழ்நாள் ஆவணம். 3000 ஆண்டு நீளமுள்ள தமிழ்ப் பெருங்காட்டில் பறந்து பறந்து, திரிந்து திரிந்து, பார்த்துப், பார்த்துத் தொடுக்கப்பட்ட உயிர்ப்பூக்களின் ஒரு தனி மாலை" என இந்நூலின் அறிமுகவுரையிலே வரும் கவிஞரின் சில வரிகளே தமிழாற்றுப் படையை அறிமுகஞ் செய்யப்போதுமானது.

தொல்காப்பியர் முதல் கவிக்கோ அப்துல் ரகுமான் ஈறாகத் தமிழ் வளர்த்த இருபத்து

நால்வர் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும், அவர் தம் வாழ்வியலுக்கும் ஆற்றிய ஒப்பற்ற பணிகள் முற்றிலும் புதிய நோக்கோடும், வீச்சோடும் விபரிக்கப்படுகின்றன. எந்த வகையிலும் ஒரு கட்டுரைகளின் தொகுப்பு மட்டுமேயெனக் கடந்து செல்லக்கூடியதன்று இந்நூல். "இது தமிழ் சேமித்த ஆதி அறிவு. இதற்கு ஆதி உண்டு ; அந்தமில்லை." ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இந்நூல் இருந்தால் ஒவ்வொரு தலைமுறைக்கும் தமிழ் கடத்தப்படும்." என்கிறார் நூலாசிரியர். மேலும், "என்படைப்புகளுள் என் வாழ்நாளின் நான்காண்டுகளை உறிஞ்சிக்கொண்ட ஒரேநூல் இதுதான்." என்றும் விதந்துரைக்கிறார் கவிஞரவர்கள்.

உண்மையாகவே நூலினை வாசிக்கும்போது, அந்த அசுர உழைப்பின் அறுவடையை உய்த்துண- ரமுடியும். தொல்காப்பியரின் தொல்காப்பியம் பற்றி விபரிக்கையில் "இன்று வரை கிட்டிய எழுத்தாதாரங்களுள் தமிழினத்தின் ஆதி அறிவு என்று தொல்காப்பியத்தையே சுட்டலாம்" என்றும், அந்நூல் எந்தவகையிலும் வடமொழிச் சார்பற்ற முதல் நூலே என்றும் உறுதிபட உரைக்கின்றார். இவ்வாறே கபிலரை இயற்கையைப் பாடிய இணையற்ற கவிஞராய் முன்நிறுத்துவார். தன்மானம் மிக்க தமிழ்க்கிழவியாக, அவ்வையார் அறிமுகமாகிறார். வள்ளுவர், இளங்கோ, பாரதி என நீளுகிறது வரிசை.

இவ்வாறே, வரண்டுபோன தமிழ் முற்றத்தில் வற்றாது பொழிந்த, மாமழை என வந்த, பெருமக்கள் பலர் தந்த தமிழின்தகமைகள், தமிழ்ச்சமூகம் பெற்ற கொடுப்பினைகள்,அவர்தம் வாழ்வியற் சேதிகள் என்பன முற்றுமுழுதாக நோக்கப்பட்டு, ஒப்பிடப்பட்டு, விமர்சிக்கப்படுகின்றன.

மேலும், இவற்றை எல்லாம் கவிஞருக்கேயுரிய, அழகும், தெளிவும் நிறைந்த அற்புத நடையில்

அள்ளித்தருகிறது தமிழாற்றுப்படை. இவ்வரிய நூலைத் தேடிவாசியுங்கள், நாம் தமிழர் என்றதொரு பெருமிதம் தானாய்த்தோன்றும்.

✦

ரகுநாத் வ

# தொப்புள்கொடி

நீ
எவ்வாறு
எனக்குள்
ஊற்றெடுத்தாய்
உன்னுடனான
என் தொடர்பு
நம்
உயிரூசலின்
உணர்ச்சித்
தொகுப்பைக்
களவாடும் போது
நீ என்னிலிருந்து
பிரிய வேண்டிய
தருணம்

அக்கணமதிலிருந்து
இன்றும்
நினைவிருக்கிறது
நீயும்
நானும்
ஒரு நேர்கோட்டு
உயிர்க்கோணங்களென்று

உன்
உயிர்க்கயிறு
என்னால்
சுற்றப்பட்டிருப்பதை
எப்பொழுதேனும்
நினைப்பேனென்று
எப்பொழுதாவது
நினைத்ததுண்டா?

என்னிலிருந்தே
என்னை
அறுத்தெறிதல்
மட்டும்
நம்மை
பிரித்து
விடுமென்கிற
'தாயற்ற
சிந்தனை'
எப்படி
உதிர்க்கிறது

உனக்கும்
எனக்குமான
ஆதிவோழித்
தொடர்பு

சதைவழியில்
மட்டுமல்ல
அது
சிதையிடுதலிலும்
கூட

உன்
சதைப்பற்றோடு
இணைந்திருந்த
நான்
என்
பிள்ளையின்
பிள்ளையாகத்தானே
வீங்கியிருந்தேன்

எனக்கு
முனக்குமான
எல்லையில்லா
தொடர்புத் தளம்
நரத்தசையீரமிட்ட
இத்தொப்புள்கொடி
மட்டுமல்ல


✦

# ஒரு கோப்பை தேநீரின் விலை பத்து ரூபாய்

தங்கேஸ்

ஒரு கோப்பை தேநீரின் விலை பத்து ரூபாய்
ஒரு குவாட்டர் மெக்டோவல் பிராந்தி நூற்றி எழுபது
இரண்டு சப்பாத்திகளின் விலை மொத்தமாய்
முப்பது ரூபாய்
அசல் ஒட்டுக்கு சுளையாய் ஆயிரம்
( பாட்டில்கள் பிரியாணி தவிர்த்து )
அதுவே நகல் என்றால் சற்றேறக்குறைய அதே
வீதியோரக் கனிகைக்கு கால அளவில்
ஐநூறிலிருந்து ஆயிரம்
முகம் வழிக்கும் ரேசர் பிளேடு ஒரு ரூபாய்
கொரோனா தொற்று இந்த தேசத்தை
பீடிப்பதற்கும் முன்னால் யாவும்
எல்லாம் தலைகீழாய் மாறிப்போனது
பணமதிப்பிழப்பிற்கு காலத்திற்கு பின்பு
இது மனிதமதிப்பிழப்பு காலம் போலும்
தெருவில் தூக்கி வீசப்பட்ட
உடைந்து மண்சட்டி பானைகளாக
சிதறிக்கிடக்கும் மனிதர்கள்
கூட்டி அள்ள ஆளில்லை
உங்கள் சீழ் பிடித்த கதைகளை
ஒரு முகத்தாட்சண்யத்திற்கு
ஒரு பீடிக்கட்டு
இரண்டு ரொட்டித்துண்டுகளுக்கு
கண்ணீரோடு கைகூப்பல்
ரேசன் தெய்வங்களுக்கு மனமார்ந்த நன்றிகள்
பட்டினியால் செத்துவிட்ட ஒரு தாயை
பலவீனமாய் முத்தமிடும் ஒரு குழந்தையின்
கள்ளமற்ற நம்பிக்கைக்கு

அதிகபட்சம் ஒரு அச்சச்சோ
பசிக்கு ஈடாக நிகழும் சில கற்பிழப்புகளுக்கு
சின்னதாக இதயத்தில் ஒரு குண்டூசி வலி
உள்ளும் புறமும் மேலும் கீழும் பிதுங்கி வழியும்
மனித உடல்களை சுமந்து போகும்
ரயில்களை பார்க்கையில்
ஒரு ஊமை செந்நாயின் இயலா குரைப்பு
தண்டவாள பலிபீடங்களில்
தலைகளை நேர்ந்து கொள்ளும் போது
என்றுமில்லாத சிறு குற்ற உணர்வு
திருக்குறள் தெரிந்தவனுக்கு
( பரந்து கெடுக இவ்வுலுகியற்றியான் ஞாபகத்திற்கு வந்துவிடும் )
நாய்க்கறி தின்ன விரும்பியவன் மீது படரும் அசூசை
வருங்காலங்களில் மின்சாரமில்லாமல்
வாழப்பழகி கொள்ளுங்கள் என்றால்
சீறும் கையாலாகா கோபம்
ஒரு புடவையில் கணவன் மனைவி சகிதம்
தூக்கிட்டு தொங்கும் வட நாட்டுக்காரன் மீது
என்றுமில்லாத பச்சாதாபம்
சொந்த ஊரை விரும்பிச்செல்பவனுக்கு
ஒரு தம்ளர் கபசுர குடிநீரும்
சுவைக்க முடியாத கசப்பும்
காணொலி உரையாடலில் கணவன் சாக
பதறும் மனைவிக்கு ஒரு துளி கண்ணீர்
முற்றிலும் மாறிப்போனது யாவும்
கொரோனாவுக்கு முன்
கொரோனாவுக்குப் பின்
முற்றிலும் மலிவு விலையில் கிடைப்பது இப்பொழுது
நடுத்தெருவில் கிடக்கும் வாழ்க்கையும்
ஒரு கோப்பை விழிப்புணர்வும் தான்



கவிச்சிகரம் அ.முத்து விஜயன்

● சிறுகதை

# கருப்பு

அந்த ஊருல ஒரே கறிக்கடைதான். அது சுல்த்தான் பாயோடது. வாரத்துல மூணுநாளு தான் கடையே. ஞாயிறு புதன் சனி அப்புறம் விசேசநாளுகள்ல கடை. தீவாளிக்கெல்லாம் தனியா கெடா திருமங்கலசத்தையில போயி புடிச்சாருவாரு . தனிக்கறி எலும்புக்கறி தனித்தனியாக்கெடைக்கும் வேற வேற ரேட்டு. ஆனா கலப்படமில்லாம சுத்தமா இருக்கும்

இவருகடையில வாங்குறதுக்குன்னே நம்பி பக்கத்து ஊருல இருந்தெல்லாம் வருவாக. வெள்ளாடுன்னா வெள்ளாடுதான் செம்புறின்னா செம்புறிதான் சொல்லிவிப்பாருதொழில்ல அவ்வளவு நேர்மை. இந்தவருசம் தீவாளிக்கி எப்புடியும் பத்துக்கெடா ஓடுமாட்டம் தெரிஞ்சது .இதுமாதிரி நேரங்கள்ல திருமங்கலத்துக்குப்பக்கத்துல செங்கப்படைங்குற ஊருலபோயி கெடாக்களைப் பாத்து இதுக்குன்னே வளக்குறவுக கிட்ட அட்வான்ஸ் குடுத்துட்டு வந்துருவாரு

அப்புறம் தீவாளிக்கி மொதநாளு போயிவண்டில மொத்தமா ஏத்திட்டு வந்துருவாரு அந்த ஊருலதான் ஆடுவளக்குறதத்தொழிலாவைச்சிருந்தாக வீட்டுக்குவீடு ஆடு வளப்பாக அந்தப்பக்கமெல்லாம் கரடு அதிகமா இருந்துச்சு அது ஆடுமேய்க்க வசதியா இருந்துச்சுவீட்டுக்கு வீடு அதுக்கு தொட்டியெல்லாம் இருக்கும்

அந்த ஊருல சீனிச்சாமிவீட்டுக்குத்தான் அன்னிக்கி சுல்த்தான் பாய் போயிருந்தாரு. நல்ல எளங்குட்டிகளா நாலஞ்சி இருந்துச்சு வளந்த கெடாக்களும் நின்னுச்சு நல்லதாப் பாத்து அடவான்ஸ் குடுக்கும்போது அவரு மகன் வெளையாடப்போனவன் திரும்பிவந்தான். இவரப்பாத்தவன்ன அடையாளம் தெரிஞ்சிக்கிட்டான்

ஆடுபுடிக்கவா வந்தீகன்னான் ஆமான்னாரு. எல்லா ஆட்டையும் வாங்கிடீங்களான்னான் . ஆமான்னாரு

அந்த கருப்புக் குட்டியுமான்னான்

ஆமான்னாரு. அத மட்டும் விட்டுருங்களேன்னான். ஏன்னாரு

என்னோட பிரண்டு அது தெனம் நாந்தான் அத மேச்சலுக்குக்கூட்டிட்டுபோவேன் பேருகூடவைச்சிருக்கேன் கருப்புன்னு போனதடவ அதோட அம்மாவப் புடிச்சிட்டுப்போயிட்டீக..பாவம் அதுக்கு

நாந்தேன் பாட்டில்ல பாலுகுடுத்து வளத்தேன். அதுகூடத்தான் நான் வெளையாடுவேன்னு சொல்லிட்டு இருக்கும்போதே அது அவன வந்து உரசிச்சி அவன் அதைத்தூக்கி முத்தம் குடுத்தான் அப்புறம் அகத்திக்கீர வாங்கிட்டு வந்ததைக்குடுத்தான் அது ஆசையாத்தின்னுச்சு. சுல்த்தான் பாய் கெளம்பிட்டாரு தீவாளிக்கி மொதநாள் வாரதாச்சொல்லிட்டு அட்வன்ஸும் குடுத்துட்டுகெளம்புனாரு சீனிச்சாமி இருங்கபாய் காப்பித்தண்ணி வாங்கியாரபோயிருக்கான் மகன்னாரு

அவன் தூக்குப்போணில வாங்கியாந்த டீய சொம்புல ஊத்திக்குடுத்தான் அவன் கண்ணு கெஞ்சிச்சு. பாய் சிரிச்சிக்கிட்டாரு

சொன்னமாதிரி தீவாளிக்கி மொதநாளு சின்ன வேனோட வந்துட்டாரு சீனிச்சாமிக்கிட்ட பேசுனபடி ப்ணத்தக்குடுத்துட்டு ஆட்டுக்குட்டிகளை ஏத்துனாரு ..இதுக்காகவே மகன தூங்கவைச்சிருந்தாரு சீனி

சரிபோயிட்டுவாறேன்னு வண்டிய க் கெளப்புனவன்ன வீட்டுக்குள்ளாற இருந்து அலறியடிச்சி ஓடிவந்தான் மகன்

என்கருப்ப விட்டுடுங்க என் கருப்பு கருப்புன்னு அழுதான் சீனி லேய் சும்மாரு காசெல்லாம் வாங்கியாச்சு வேற ஆட்டுக்குட்டி வாங்கி வளத்துக்கலாம் ன்னாரு.. அவன் கேக்கல அழுது பொறண்டான் சின்னப்பய அப்புடித்தானிருப்பான் ரெண்டுநாள்ல சரியாயிடுவான் . நீங்க போங்க-பாய்ன்னாரு. சுல்த்தான் வண்டியக் கெளப்பிட்டுப்போ-யிட்டாரு

ஆன ராத்திரிப்பூராம் தூங்கல அழுதுக்கிட்டே இருந்தான் அதுவும்

அழுகுறமாதிரிக்கனவெல்லாம் வந்துருச்சு

காலங்காத்தால சொல்லாமகொள்ளாம கௌம்பிட்டான் சுல்த்தான் பாய் கடைக்கிப்போனான். அங்க ரெண்டுமூணு ஆடு அறுத்துதொங்குச்சு. இவனோட கருப்பக்காணாம். பாய்கிட்டக்கேட்டான் கருப்பு எங்கன்னு. அவரு சொன்னாரு இந்தாத்தொங்குதுபாருன்னு ஒரு ஆட்டக்காமிச்சாரு.... அய்யோ போயிட்டியான்னு அழுதுபொறண்டான்

அதுக்குள்ள கடையில இருந்த மகன் கிட்ட என்னமோ சொன்னாரு இவன் எந்திரிச்சி அழுதுக்கிட்டே இருந்தான் கொஞ்ச நேரத்துல அவரு மகன் ஒரு ஆட்டுக் குட்டியகூட்டியாரது தெரிஞ்சிது

பாத்தா அது கருப்பு. இப்ப பாய்கிட்டக் கெஞ்சினான் பையில இருந்து

கொண்டாந்த காசக்காமிச்சு சொன்னான்

இந்தாங்க பாய் காசு மீதிக்காச எப்புடியாவது சம்பாரிச்சிக்குடுத்துடுறேன்

என் கருப்ப என்கிட்டக் குடுத்துருங்க ன்னான், அவ்வளவு பாசமாடான்னாரு ஆமான்னான். அப்ப சுல்த்தான் சொன்னாரு

நீ அங்க அழுதப்பவே நான் ஒரு முடிவெடுத்திட்டேன். அப்ப அங்க விட்டுட்டு வந்திருந்தா ஒங்க அப்பா வேறாலுக்கு வித்திருப்பாரு அதான் கொண்டாந்துட்டேன் தீவாளி முடிச்சி நானே கொண்டாந்து உன் வீட்டுல

விட்டுருப்பேன். .அதுக்குள்ள நீயே வந்துட்ட

கூட்டிட்டுப்போ ஒன்னோட கருப்ப என்மகன் உன்னயயும் கருப்பையும் ஒங்கவீட்டுல கொண்டாந்து விட்டுட்டு வெவரம் சொல்லிட்டுவருவான் ஒனக்கு தீவாளிப்பரிசா இந்த சுல்தான் தாறேன்னாரு

அவன் கண்ணுல தண்ணி வந்துருச்சு பாய் கால்ல விழுந்துட்டான் கருப்பத் திருப்பிக்குடுத்த சாமி நீங்கன்னு அழுதுக்கிட்டே சொன்னான்

அப்ப கொஞ்ச வருசம் முன்னாடி

இதேமாதிரி அவர்கிட்ட அவரோட ஒரு மகன் அடம்பிடிச்சும் கேக்காம அவன் வளத்த குட்டிய வெட்டுனதுனால கோவிச்சிக்கிட்டு கெணத்துல விழுந்து செத்துப்போன அவரோட மகன் நெனப்புவந்து கண்ணுல தண்ணி ஊத்துச்சு

சுல்த்தான் கண்ணத்தொடச்சிக்கிட்டாரு அப்பவும் ஊரநோக்கிப்போயிக்கிட்டு இருந்த அவனும் கருப்பும் கலங்கலாதெரிஞ்சாங்க கண்ணீருக்குள்ள ✦

## ப.தனஞ்ஜெயன்

முன்பனிக்கால இரவு ஒன்றின்
தொடர்ச்சியாய் குக்கூவின் குரல்
இன்றும் தொடங்குகிறது.
செழிப்பான பாலைவனம்
தன் மணலின் கவலைகள் நிரம்பிய
நிழலை ஒரு மனிதன் காலடிக்காக
காத்திருந்து விடிகிறது.

சென்ற தலைமுறை கவிஞர்களே
நீங்கள் முடித்து வைத்த
இடத்திலிருந்து நாங்கள் தொடர்கிறோமா என்பதை
சரிபார்ப்பதிலேயே இந்த நாட்கள் நகர்கிறது
எழுதப்படாத மலைகள் தனக்குள்ளே
சூரியனை மறைத்து வைத்தே
சுற்றி நகர்கிறது தினமும் புது சுழற்சியாய்
அனைத்திற்கும் அகராதி தயார் செய்யும் மனிதன்
பொருள்களை
திரும்பத் திரும்ப ஒரே கடலில்தான் வீசுகிறான்
பழைய மின்னலின் தொடர்ச்சியாய்
பழைய மேகங்களின் சாரலாய்
பழைய மொழிகளின் உராய்வுகளாய்
தொடர்கிறது
நம்பிக்கை என்பது கூட நேற்றைய
மனிதர்களின் நிறைவேறாத
அலைகள்தான்.

அனைத்து கல்லறைகளும் இன்னும்
ஒலி எழுப்பிகொண்டுதான் இருக்கிறது
நூற்றாண்டுக்கு சில முறை
தோன்றும் கொள்ளை தொற்றுநோய்
கட்டும் கல்லறைகள் மீண்டும் பேசிக்கொண்டிருப்பதை கேட்கவே முடிகிறது.

ஒரு ஏழைச்சிறுவனின் கனவுகள்
தன் அழுக்கான சட்டையில் பழைய வண்டிகளை பழுபார்ப்திலேயேயும்
மற்ற இடங்களில் ஏதோ ஒரு அழுக்கான வேலையில் தொடரவே
செய்கிறது.
இன்று கூட ஒரு வேளை உணவுக்கு
இரண்டு கைகள் மேலே உயரத்தொடங்குகிறது.

சிலுவையின் நிழலில் ஒதுங்க
குரல்கள் குருதியை காலில் மெறித்து கொண்டுதான் வருகிறார்கள்
அப்படித்தான் தொடங்கி இருக்கிறது
சிலுவையின் வரலாறு

புத்தரின் மௌனமொழிகளை
களைத்தெறிந்து
பெருத்த இரைச்சலோடு மனங்கள்
ஆசையை துறந்ததாக எழுதிவருகிறது.

தீபெத்தின் தாய்லாலாமா
விடுதலைப்பற்றி முரண்பாடுகளில்
மறைந்து வாழ்கிறார்.
நம்தேசத்து மௌனகுருமார்களின்
தொடர்ச்சி ஏதும் மரபை சார்ந்ததில்லை
அவர்கள் எப்பொழுதும்
கார்பரேட் கனவான்களாகவும்

தொழில் முறையீடு சார்ந்தும் தொடங்கிய தொடக்கத்திற்கான
முரணனான பாதை ஒன்றில்
புத்தனோடு தியானம் செய்கிறார்கள்
அங்கு புத்தன் இல்லை என்பதை
அறிய ஞானம் ஒன்றும் தேவையில்லை.

ஹிரோஷிமாவின் அணுச் சிதைவை
அடையாளமாக்கி சென்ற சிறுமியின்
காகிதக் கொக்கில் இருந்து
பிறக்கிறது இன்றும் ஒரு காகித கொக்கு
அதை ஊக்குவித்து ஆயுத எல்லைகளால் நில எல்லைகளை
உடைத்து தரைமட்டமாக்கிக் கொண்டிருக்கிறது அதிகாரங்கள்.

தொடக்கம் என்பதற்கு தொடக்கமே
முடிவாகியிருப்பது
நம்பிக்கை என்ற சொல்லாய் மாறி
தொடங்குகிறது.
புது பாதைகளுக்காக காத்திருக்கும்
கால் படாத நிலங்கள்
ஒரு வசந்தமான காற்றின்
சிறு அசைவுக்காத்தான்.
ஒரு செவ்வானத்தின் ஒளி கீறினால்கூட
அந்த மண்ணின் நட்சத்திரங்கள்
மின்னத் தொடங்கும்.
அதிகாரங்களும் சாமியார்களும்
மனப்பால் ஊட்டியதை சேகரித்து
வைத்திருக்கிறது மனங்கள்.
மீண்டும் குக்கூவின் குரல்
இந்த கடினமான காலையை
வரவேற்கிறது.

✦

